Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 பங்குனி 20 வெள்ளிக்கிழமை (03.04.2015) பக்கங்கள் 20 ஓசை – 185

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

தனது கட்சியை வளர்க்க தீவிரம்


படை குறைக்க மறுப்பு

தேர்தலைக்கண்டு அஞ்சுகிறார்

மாகாண அரசை கட்டுப்படுத்த முனைப்பு



# ரணில் மீது குவியும் கண்டனம்



## விடாமல்தொடரும் பனி யுத்தம்

(முல்லைத்தீவு)

தனது ஐக்கிய தேசியக்கட்சியை வளர்க்கவும் தேர்தலுக்கு முன்னர் வடக்கில் அரசியல் ரீதியாக காலூன்றவுமே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தீவிர முயற்சி எடுத்துவருகிறார். இதற்காகவே அவர் வடபகுதிக்கு வந்து சென்றார். அவருக்கு வடக்கு மக்களின் நலன்களை விட தனது அரசியல் நலன்களே அதிக முக்கியமாக தெரிகிறது.

இவ்வாறு பிரதமர் ரணில் மீது வடக்க முதல்வர் கடுமையான கண்டனங்களை அடுக்கடுக்காகத் தெரிவித்துள்ளார்.

நேற்று முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை விடுதித் தொகுதி மற்றும் இரத்த வங்கி திறப்பு விழாவில் இணை பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது.

எமது பிரச்சினைகளை ஓரளவு தெரிந்து வைத்து எமக்காகக் குரல் கொடுப்பவர் வைத்திய கலாநிதி ராஜித சேனாரத்ன இந்தத் தருணத்தில் எம்முடன் சேர்ந்து இந்த நிகழ்வில் அவர் கலந்து கொள்வதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். முல்லைத்தீவு மாவட்ட மக்களின் நலனை எமது முன்னுரிமை கொடுக்க வேண்டிய ஒரு விடயமாக நினைத்து எமது கடமை

(19) ஆம் பக்கம் பார்க்க

# எல்லை தாண்டினால் இந்திய மீனவர் கைது

## ஜனாதிபதி உத்தரவு

இலங்கைக் கடற்பரப்பில் எல்லை தாண்டி வந்து மீன் பிடிப்பதற்கு இந்திய மீனவர்களுக்கு எந்தக் காரணத்துக்காகவும் அனுமதி வழங்கப்படமாட்டாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமிழக மீனவர்களின் வேண்டுகோளை நிராகரித்தது இலங்கை

இது தொடர்பிலான விசேட கூட்டம் கொழும்பில் நேற்று நடைபெற்றது.

எல்லை தாண்டிவரும் இந்திய மீனவர்களை, அவர்களது படகுகளுடன் கைது செய்யுமாறு கடற்படையினருக்கு ஜனாதிபதி உத்தரவிட்டிருப்பதாக, இந்தக் கூட்டத்தில் கலந்து கொணடிருந்தவர்களில் ஒருவரா கிய மன்னார் மாவட்ட மீனவர் சம்மேளனத் தலைவர் ஜஸ்டின் சொய்சா தெரிவித்தார்.

அண்மையில் இலங்கை-இந்திய மீனவர் பிரதிநிதிகளுக்கிடையில் சென்னையில் நடைபெற்ற மூன்றாம் கட்டப் பேச்சுவார்த்தைகளின்போது, ஆண்டொன்றுக்கு 83 நாட்கள் இலங்

(19) ஆம் பக்கம் பார்க்க

# தடம்புரண்டது ஆட்டோ ஸ்தலத்தில் ஒருவர் பலி

நால்வர் பயணித்த ஓட்டோ ஒன்று தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். இருவர் காயமடைந்தனர். இச்சம்பவம் நேற்று முன் தினம இரவு 10 மணியளவில் தலைமன்னார் பொலிஸ் நிலையப் பிரிவுக்குட்பட்ட நடுக்குடா என்னும் இடத்தில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் குறித்துத் தெரியவருவதாவது - தலைமன்னார் மேற்கு பகுதியில் வசிக்கும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நாலவர், வெளிநாட்டிலிருந்து வந்து மன்னாரில் தங்கியிருந்த

(19) ஆம் பக்கம் பார்க்க

# தேர்த்திருவிழாவில் தங்கச்சங்கிலிதிருட்டு


## இளம்பெண் ஒருவர் கைது

யாழ்.வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தின் நேற்று நடைபெற்ற தேர்த்திருவிழாவில் கலந்துகொண்டிருந்த பக்தர்களின் தங்கச் சங்கிலிகளை கொள்ளையிட்ட திருகோணமலையைச் சேர்ந்த இளம் யுவதி ஒருவர் பொதுமக்களால் கையும் களவுமாக பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளார்.

நேற்றுக் காலை குறித்த தேர்த் திருவிழாவின் போது

(19) ஆம் பக்கம் பார்க்க

# முல்லையில் ஆர்ப்பாட்டம்; அனந்தி மீது கண்டனம்




வடமாகாண சபை உறுப்பினர அனந்தியின் கணவரும் முன்னாள் புலி உறுப்பினருமான எழிலனால் பிடிக்கப்பட்டு காணாமல் போனவர்களுக்கு பதில் கூறுங்கள் என்று முல்லைத்தீவு நகரில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின் போது படையினரிடம் ஒப்படைக்கப்பட்டு பின்னர் காணாமல் போனவர்களுடைய உறவினர்கள் தாக்கல் செய்திருந்த வழக்கு மீதான விசாரணை நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதி மன்றத்தில் நடைபெற்றது.

இந்நிலையில் மேற்படி வழக்கிற்கு வடமாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரன் சென்றிருந்த நிலையில் அனந்தியின் கணவர் எழிலனால் பிடிக்கப்பட்டு காணாமல் போனவர்களுக்கு பதில் கூறு என்றும், அனந்


(19) ஆம் பக்கம் பார்க்க



தமிழரசுக் கட்சி அறிவித்தபடி அகிம்சைப் போரை தொடங்காத 94 வது நாள்

“எங்களைப் பொறுத்தவரை இத்தனை மக்கள் திடசங்கற்பத்துடன் வாக்களித்ததைக் கொண்டு அமைச்சுப் பதவிகளைக் கேட்பது அல்ல... எங்களுடைய மண் விடுவிக்கப்பட்டு எங்களுடைய மக்கள் எங்கள் மண்ணை ஆளவேண்டும்...”

– ஜெயபுரம் அ.த.க. பாடசாலை நிகழ்வில் மாவை சேனாதிராசா



## கலந்துரையாடல்கள்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் குடிவரவியல் போக்கு பற்றிய கலந்துரையாடல் ஒன்று யாழ். முகாமையாளர் சம்மேளனம் மற்றும் இலங்கை பொறியியலாளர் சங்கம், வட பிராந்தியம் இணைந்து ஒழுங்கு செய்துள்ளது. இக்கலந்துரையாடலானது நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் முத்திரை சந்தியில் அமைந்துள்ள யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலின் வளவாளராக வைத்திய கலாநிதி முரளி வல்லிபுரநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

இக்கலந்துரையாடலில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும்படி இதன் ஒருங்கிணைப்பாளர் வி. நிரஞ்சன் கேட்டுக்கொண்டுள்ளார்.

□□□

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வர்த்தக தொழில்துறை மன்றத்தின் ஏற்பாட்டில் வடமாகாண நிர்மாணத்துறையினர் மற்றும் ஒப்பந்தகாரர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து வருங்கால வேலைத் திட்டங்களை சிறந்த முறையில் முன்னெடுப்பது தொடர்பிலும் வடமாகாண அபிவிருத்தியில் நிர்மாணத் துறையினரின் பங்களிப்பு சம்பந்தமாகவும் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு யாழ். கிறீன் கிறாஸ் விடுதியில் நாளை சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதில் அனைவரும் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்ள முடியும். இது தொடர்பிலான விபரங்களை பெற 021 22 6609 எனும் தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# மாற்றுத் திறனாளிகளுக்கான பிராந்திய மையம் கிளிநொச்சியில் அமைக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு சேவை வழங்குவதற்கான பிராந்திய நிலையமொன்று சமூக சேவைகள் அமைச்சினால் கிளிநொச்சியில் அமைக்கப் படவுள்ளது.

பிரதமரின் செயலாளர் ஈ.எம்.எஸ்.பி. ஏக்கநாயக்க யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் மாற்றுத் திறனாளிகளின் தேவை மதிப்பீட்டை செய்து தருமாறு சமூக சேவைகள் அமைச்சின் செயலாளரிடம் கடிதம் மூலமாகக் கேட்டுள்ளதாக சமூக சேவைகள் அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கடிதத்தின் பிரதி இந்த மூன்று மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அண்மையில் மேற்படி மாவட்டங்களுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வருகை தந்தபோது மாற்றுத் திறனாளிகள் முன்வைத்த கோரிக்கையின் படி இந்த தேவை மதிப்பீடு செய்யப்படுவதாகவும் அவர மேலும் தெரிவித்தார்.

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் இளையதம்பி சபாலிங்கம் ஞாபகார்த்த அரங்கமும் கேட்போர் கூடமும் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

காலை 8.30 மணிக்கு கல்லூரியின் அதிபர் ஐ. தயானந்த ராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். இந்துக் கல்லூரியின் இளைப்பாறிய அதிபர் ச. பொன்னம்பலம் கலந்து கொண்டு அரங்கையும் கேட்போர் கூடத்தையும் திறந்து வைக்கவுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. (இ)

## தொழிற்பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது யாழ்ப்பாண மாவட்டத்தில் முழு நேர மற்றும் பகுதி நேர தொழிற்பயிற்சி கற்கை நெறிகளை நடாத்தி வருகின்றது. பகுதிநேர கற்கை நெறிகளை அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்கள், தொழிற் கல்வியில் ஆர்வமுடையோர், பாடசாலை மாணவர்கள் இப்பகுதி நேர கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

யாழ்ப்பாணம், கைதடி, காரைநகர், சுன்னாகம், வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, சண்டிலிப்பாய், ஊர்காவற்றுறை ஆகிய தொழிற் பயிற்சி நிலையங்களில் பின்வரும் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. மரவேலை தொழில் நுட்பவியலாளர் (தளபாடம்), அழகுக் கலைவல்லுநர் காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்), டீசல் இயந்திர திருத்துநர், இரு சக்கர மற்றும் முச்சக்கரவண்டி திருத்துநர், குளிர்சாதன உபகரணங்கள் திருத்துநர், விவசாய இயந்திரம் மற்றும் உபகரணங்கள் திருத்துநர், பெண்கள் சிறுவர்களிற்கான ஆடை வடிவமைப்பாளர், கணனி வன்பொருள் திருத்துநர், கணனி பட வடிவமைப்பாளர், வீட்டு மின்னிணைப்பாளர், அலுமினியம் பொருத்துநர், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர் அனைத்தும் தேசிய தொழிற் தகைமை பாடவிதானத்தை உள்ளடக்கிய கற்கை நெறிகளாகும்.

இக்கற்கை நெறிகளை கற்க விரும்புவர்கள் தங்கள் விண்ணப்பங்களை நேரடியாகவோ அல்லது தபாலிலோ மாவட்ட அலுவலகம், 1ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல: 12 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எதிர்வரும் 16ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## "மூதாதையர்: சமனற்ற தீவுகள்" நல்லூரில் கருத்தரங்கு

(திருநெல்வேலி)

சமகாலக் கலை, கட்டடக் கலை மற்றும் வடிவமைத்தலுக்கான இலங்கை சூழலாக்க காப்பகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட மூதாதையர் சமனற்ற தீவுகள் என்னும் தலைப்பிலான கருத்தரங்கு நாளையும், நாளை மறுதினமும் நல்லூர் கோவில் வீதி இலக்கம் 199 இல் இடம்பெறவுள்ளது.

அனைத்து அமர்வுகளும் தமிழ்மொழி பெயர்ப்பு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சி குஜ்ரால் நிறுவனத்தின் எனது கிழக்கு உனது மேற்கு என்னும் 56 ஆவது இருவருட இடைவெளிக் காட்சி நிலைப்படுத்தலின் பல்துறைசார் நிகழ்வுகளுக்கான மேடையொன்றின் பல பகுதிகளையுடைய பொது நிகழ்ச்சி சார்ந்து கருத்துருவாக்கம் செய்யப்பட்ட நிகழ்ச்சியின் இரண்டாம் பாகமாகும்.

இக்கருத்தரங்கானது, காலனிய வரலாற்றிலிருந்து காலனிய நீக்க காலம் வரைக்கும் உள்நாட்டு யுத்தத்திலிருந்து யுத்தத்துக்குப் பிற்பட்ட யதார்த்தம் வரைக்கும், புவியியல் சார் உறவுகள் மற்றும் பூகோள அரசியல் இறுக்கங்கள் அனைத்துக்குமான சமனற்ற உறவுகள் பற்றிய வரலாற்றெழுத்தியல் ஒழுங்கமைப்பு, புவிசார்ந்த தன்மை மற்றும் இதனூடாக எழும் கேள்விகளை உள்ளடக்கிய தீவுக் கூட்டம் சார் சிந்தனையின் சிக்கலான நிகர் நிலைக் கோல அமைவின் சிக்கலான தன்மையினை அடையாளம் கண்டு வரைய முற்படுகிறது. இரண்டு நாள் அமர்வினையும் நடாஷா வரின்வாலா ஹோ ஷு நியான், அனோமா ராஜகருணா, அன்செல்ம் பராங்க, டென்ஷி வெறெய்றா, டாசில்வா, ஜகத் வீரசிங்க, வரட்றி இஸ்மயில் ஆகியோர் வழி நடாத்தவுள்ளனர். (137)

## குடிலுடன் புகையிலை முழுமையாக எரிந்து நாசம்

(அல்லைப்பிட்டி)

அல்லைப்பிட்டியில் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான புகையிலை, குடிலுடன் முழுமையாக எரிந்து சாம்பலாகிய சம்பவம் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

அல்லைப்பிட்டியில் பரம்பரை, பரம்பரையாக விவசாயத்தினைத் தொழிலாக மேற்கொண்டுவரும், விவசாயியான அருணாசலம் சோதிலிங்கம் என்பவரின் புகையிலைக் குடிலே தீயில் எரிந்து நாசமானதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

செவ்வாய் அதிகாலை திடீரென மூண்ட தீயினை அணைப்பதற்கு எடுத்துக் கொண்ட முயற்சி பலனளிக்கவில்லை என்றும் தீ ஏற்பட்டதற்கான உண்மைக் காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.மேலும் இது தொடர்பாக ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்கு முறைப்பாடு ஒன்றும் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.






## DD TV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | வெள்ளிக்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம், பக்திப் பாடல்கள் |
| Am 07.00 | கலைக்கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | SMS Time |
| Am 9.55 | காலை செய்திகள் |
| Am 10.00 | Hello DD |
| Am 10.30 | IT.Com |
| Am 11.00 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | வாழும் கலைஞர்கள் |
| PM 01.00 | மதியச் செய்திகள் |
| PM 01.30 | சுப்பர் திரைப்படம் |
| PM 03.55 | மாலைச் செய்திகள் |
| PM 04.30 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | வரலாற்று நாயகர்கள் |
| PM 07.30 | தமிழ் பேசும் தமிழா |
| PM 08.00 | பிரதான செய்திகள் |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

# சைவ வாலிப சங்கத்தின் கட்டுரைப் போட்டி

(அளவெட்டி)

அளவெட்டி கும்பிழாவளைப் பிள்ளையார் திருக்கோவில் திருக்குடமுழுக்குப் பெருவிழாவை முன்னிட்டு அளவெட்டி சைவ வாலிப சங்கம் கட்டுரைப் போட்டி ஒன்றை நடாத்தவுள்ளது. போட்டிகள் இரு பிரிவுகளாக நடாத்தப்படவுள்ளன.

பிரிவு 'அ' போட்டி தரம் 6,7,8,9ஐச் சேர்ந்த மாணவர்களுக்கு நடாத்தப்படவுள்ளது. ஆலயத் தொண்டும் வழிபாடும், திருமுறையும் வாழ்வும், இளையோரிற்கு சைவ சமயம் காட்டும் வாழ்க்கை நெறிமுறை ஆகிய தலைப்புக்களில் ஏதாவது ஒன்று பற்றி 200 சொற்களுக்கு குறையாது எழுதி அனுப்பவேண்டும்.

பிரிவு ஆஇல் தரம் 10, 11, 12,13 ஐச் சேர்ந்த மாணவர்கள் பங்குபற்றலாம். அளவெட்டியும் விநாயகர் வழிபாட்டின் சிறப்பும், தற்காலத்தில் சைவ சமயம் எதிர்நோக்கும் சவால்கள், விஞ்ஞான தத்துவங்களின் ஊற்றுக் கண் சைவ மெஞ்ஞானமே ஆகிய மூன்று தலைப்புக்களில் ஏதாவது ஒன்றைப் பற்றி 350 சொற்களுக்கு குறையாது எழுதி அனுப்பி வைக்க வேண்டும்.

மேற்படி கட்டுரைப் போட்டியில் பங்குபற்றும் போட்டியாளர்களுக்கான விதிமுறைகளாக, அளவெட்டியை வதிவிடமாகக் கொண்ட பாடசாலைப் பிள்ளையாக இருத்தல், கற்கும் வகுப்பை பாடசாலை அதிபர் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும், கட்டணங்கள் எதுவும் அறவிடப்பட மாட்டாது, போட்டி நடைபெறும் நாளில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் ஒரு கட்டுரையை போட்டியாளர் எழுதுதல் வேண்டும், பிரிவு அடிப்படையில் சிறந்த மூன்று கட்டுரை ஆக்கத்திற்கு பெறுமதி மிக்க பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும், பிரிவு அடிப்படையில் தலைப்புகள் '6' இற்கும் தனித்தனியே முதல் முடிவு என்ற அடிப்படையில் '18' பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களிற்கு சான்றிதழ் வழங்கப்படும், பிரிவு அடிப்படையில் உள்ள '6' தலைப்புக்களில் முதல் இடத்தினைப் பெறும் கட்டுரையாக்கம் அச்சூடக வெளியீட்டிற்காக விதந்துரைக்கப்படும், போட்டிகள் யாவும் எதிர்வரும் 05.04-2015 ஞாயிற்றுக்கிழமை காலை யாழ். அருணோதயக் கல்லூரியில் நடைபெறும், பிள்ளைகளைப் பாடசாலை சார்ந்த பொறுப்பான பாதுகாவலர் ஒருவர் அழைத்து வருதல் சிறப்பாகும், நடுவரின் தீர்ப்பே இறுதியானதாகும், விண்ணப்பங்கள் இன்று வெள்ளிக்கிழமைக்கு முன்னர் சைவ வாலிப சங்கம் கும்பிழாவளை என்ற முகவரியில் ஒப்படைக்க வேண்டும் என சைவ வாலிப சங்கத்தினர் கேட்டுக் கொள்கின்றனர்.

# இடதுசாரிகளும் மாற்றுச் சிந்தனையாளர்களும் என்ன செய்யப் போகிறார்கள்? - 03

● கருணாகரன்

ஏகாதிபத்திய எதிர்ப்பைப் பற்றிப் பேசிவரும் இடதுசாரிகளும் மாற்றுச் சிந்தனையாளர்களும் ஏகாதிபத்திய அரசியலுக்குச் செங்கம்பளம் விரிக்கும் உள்ளூர் முகவர்களை எதிர்ப்பதில்லை என்ற குற்றச்சாட்டு உண்டு. இதை இலகுவில் யாரும் மறுத்து விடவும் முடியாது.

சிங்கள இடதுசாரிகள் சிங்கள ஆட்சியாளர்களையும் தமிழ் இடதுசாரிகள் தமிழ்த் தேசிய சக்திகளையும் ஆதரிக்கும்பொழுது இந்தத் தவறு நிகழ்ந்து விடுகிறது. இதில் எல்லா இடதுசாரிகளையும் குறிக்க முடியாதென்பதையும் புரிந்து கொள்கிறோம்.

இதேவேளை, மாற்றுச் சிந்தனையாளர்களில் அநேகர் ஜனநாயகத்தின் பேரால் மேற்குலகத் தலையீடுகளுக்கு வாசல்களைத் திறந்து விடும் வகையில் சிந்திக்கின்றனர் ; செயற்படுகின்றனர்.

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குறைபாடுகளை அந்தக் கட்சியின் உள்ளும் வெளியிலும் பலரும் கடுமையாக விமர்சித்து வருகின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் போதாமையும் அதன் அடிப்படைத்தவறுகளும் மிகத் துலக்கமானவை. இதற்கு மாற்றாக சிலர் தமிழ்த் தேசிய விடுதலை முன்னணியை அடையாளப்படுத்த முற்படுகின்றனர். இவையெல்லாம் இனத்துவ அடிப்படையிலானவையே. இது அப்படித்தான் அமையும்.**

இதற்கு வாய்ப்பாக தொண்டு நிறுவனங்களின் செயற்பாடுகளும் நிதியும் பயன்படுத்தப்படுகிறது. இதில் மேற்குலகம் பலபடி முன்னேறியுமுள்ளது.

இலங்கையில் இனவாதமும் இனமுரண்களும் பிராந்திய – சர்வதேச சக்திகளின் ஆதிக்கமும் வளர்ந்து கொண்டிருப்பதற்கு எதிரான வலுவான சிந்தனைத் தளத்தையோ, ஊடகங்களையோ ஏற்படுத்தாதிருப்பது இடதுசாரிகளின் பெரும் பலவீனம்.

சில அணியினர் அல்லது சில சக்திகள் தொடர்ச்சியாகத் தங்களின் எதிர்ப்புக் குரலை வெளிப்படுத்திக் கொண்டிருந்தாலும் அதன் தாக்கவலு அதிகரிக்கப்படவில்லை என்றால், அந்த முயற்சியினால் பயனில்லை.

இதனால்தான் இனமுரண்களை வளர்க்கும் சக்திகள் பெருவளர்ச்சியடைந்து செல்கின்றன. அவையே ஆதிக்க நிலையையும் பெற்றிருக்கின்றன.

தவறான அரசியலை முன்னெடுத்துவரும் இந்த எதிர்நிலைச் சக்திகள் – இனவாதச் சக்திகள் தொடர்ந்தும் முன்னரங்கில் வெற்றியீட்டிக் கொண்டிருப்பதை அனுமதிப்பதே அறிவார்ந்த நிலையில் தவறானது. இது இடதுசாரிய மற்றும் மாற்றாளர்களின் பலவீனமல்லவா. இதற்குப் பிரதான காரணம், கருத்து நிலையில் மிகத் துல்லியமான வேறுபாடுகளைக் கொண்டு பல பிரிவு–களாக அவை பிளவுண்டு நிற்பதே.

அதாவது செயற்பட்டுக்கொண்டிருக்கும் இடதுசா–ரிய மாற்றுச் சிந்தனை அமைப்புகள் எப்பொழுதும் தங்களுக்குள் அதிகளவில் முரண்பாடுகளையும் வேற்றுமைகளையும் கொண்டுள்ளன. இது எதிர்த்தரப்புக்கு – தவறான சக்திகளுக்கு இலகுவான வாய்ப்பை அளித்து விடுகிறது.

இதனால், இடதுசாரிகளும் இடதுசாரி அரசி யலும் அதன் சிந்தனையும் அந்த அரசியலை முன்னெடுக்கும் சக்திகளும் பின்னடைந்து செல்ல வேண்டியிருக்கிறது.

தவறான அரசியல் நெறிமுறைகளை உடைய – குறுந்தேசியவாதச் சக்திகளும் அந்நிய சக்திகளுக்கான முகவர்களாகச் செயற்படுவோரும் தேவையேற்படும் போதெல்லாம் தங்களுக்குள்ளிருக்கும் வேற்றுமைகளையும் முரண்களையும் விட்டு விட்டு ஒன்றிணைகிறார்கள்.

ஆனால், மாற்றுச் சிந்தனையாளர்களும் இடதுசாரிகளும் ஒருபோதும் பொது எதிர் நிலையாளர்களுக்காக ஒன்றிணைவதில்லை.

இதனால்தான் இலங்கையின் இனமுரண்கள் கூர்மையடைந்து இனக்கட்சிகள் தோற்றமடைந்ததும் அவை வலுப்பெற்றதுமாகும். இப்பொழுது இந்த இனக் கட்சிகளுக்குச் சேவகம் செய்கின்ற நிலையி லும் இவற்றுக்குப் பின்னால் மௌனமாகச் செல்லும் நிலையிலுமே மாற்றாளர்களும் இடதுசாரிகளும் உள்ளனர்.

ஆனால், வரலாறு நல்லதொரு சந்தர்ப்பத்தை மாற்றாளர்களுக்கும் இடதுசாரிகளுக்கும் அளித்திருக்கிறது. அதிலும் தமிழ்பேசும் மாற்றாளர்கள் இதைக்குறித்து இன்னும் தீர்க்கமாகச் சிந்திக்க வேண்டியுள்ளது.

அரங்கில் செயற்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குறைபாடுகளை அந்தக் கட்சியின் உள்ளும் வெளியிலும் பலரும் கடுமையாக விமர்சித்து வருகின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் போதாமையும் அதன் அடிப்படைத்தவறுகளும் மிகத் துலக்கமானவை. இதற்கு மாற்றாக சிலர் தமிழ்த் தேசிய விடுதலை முன்னணியை அடையாளப்படுத்த முற்படுகின்றனர். இவையெல்லாம் இனத்துவ அடிப்படையிலானவையே. இது அப்படித்தான் அமையும்.

இந்த நிலையில், மாற்றுச் சக்திகளின் திரட்சி ஒன்று அவசியம். அது நிச்சயமாக மாற்றுச் சிந்த னையுடையோராலும் இடதுசாரிய அரசி யற் கண்ேடாட்ட முடை–யோரா லும்தான் முடியும். அவர்களின் திரட்சியின் மூலமாகவே புதிய அரசியல் பண்பு நிகழும். அதுவே இலங்கை முழுவதற்குமான ஒரு புதிய அலையைத் தோற்றுவிக்கக் கூடியதாகவும் இருக்கும்.

இந்த இடத்தில் இடதுசாரிகளும் மாற்றாளர்களும் புதிய நிலையைத் தமக்கு வாய்ப்பாகக் கொண்டு தமக்கிடையிலான உரையாடல்களை நிகழ்த்துவது பொருத்தமானது.

இதற்கு தேசியவாதிகளிடம் இருப்பதைப்போல




'துடக்குப்பார்க்கும் மனோநிலை'யை அனைவரும் முதற்கட்டமாகக் கடக்க வேண்டும்.

மாற்றத்தை ஏற்படுத்துவது என்பதற்கு முதல் காரியமாகச் செய்ய வேண்டியது ஒவ்வொருவருக்குள்ளும் மாற்றங்களை நிகழ்த்துவதே. அதன்வழியாகத்தான் பொதுப்பரப்பிலும் வழமைகளிலும் அடிப்படைகளிலும் மாற்றங்களை உண்டு பண்ண முடியும்.

இது மாற்றங்களுக்கான காலமே.

# சேவை உள்வீர்ப்புச் செய்யாவிடில் கல்வியமைச்சுக்கு எதிராகப் போராட்டம்

## ஆசிரிய ஆலோசகர் சங்கத் தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

உயர் நீதிமன்றத்தீர்ப்பின் பிரகாரமும், 03.03.2015 இல் கல்வியமைச்சின் செயலாளர் வழங்கியிருந்த உறுதி மொழிக்கமைவாகவும், ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு முன் இலங்கை ஆசிரிய ஆலோசகர் சேவை உள்ளீர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படாவிட்டால், கல்வியமைச்சுக்கு முன்பாக தொடர் போராட்டம் பல வடிவங்களில் ஏற்பாடு செய்யப்போவதாக அகில இலங்கை ஆசிரிய ஆலோசகர் சங்கத்தின் தலைவர் அறிவித்துள்ளார்.

மேற்படி தீர்மானம் கடந்த 29.03.2015 இல் நடைபெற்றிருந்த சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இக் கூட்டம் கொழும்பு இராஜகிரியவில் அமைந்துள்ள அத்துரலிய ரத்தின தேரரின் பௌத்த விகாரை மண்டபத்தில் நடைபெற்றிருந்தது. இதில் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் வருகை தந்திருந்த பெருந்தொகையான ஆசிரிய ஆலோசகர்கள் பங்குபற்றியிருந்தனர்.

மேலும் மேற்படி கூட்டத்தில் சங்கத் தலைவர் கலந்துரையாடலின் பின் தெரிவித்திருந்ததாவது,

2015.03.03 இல் கல்வியமைச்சின் முன் இடம்பெற்றிருந்த ஆர்ப்பாட்டப் பேரணியின் பயனாக, ஜனாதிபதியின் ஆதரவுக்கமைய, கல்வியமைச்சின் செயலாளர், சங்க உறுப்பினர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடாத்தியிருந்தார். அதில் சேவை உள்ளீர்ப்புத் தொடர்பில் சம்பளப்பட்டியல் தயாரிப் பதிலேயே முரண்பாடு காணப்படுவதாகவும், மார்ச் 28 வரை கால அவகாசம் தரும்படியும் கல்வி அமைச்சின் செயலாளர் கோரியிருந்தார். அதற்கேற்ப அன்றைய போராட்டம் கைவிடப்பட்டிருந்ததாகவும். எனினும் இது வரை செயலாளரிடமிருந்து பதில் எதுவும் கிடைக்கவில்லையெனவும் இதன் காரணமாகவே ஏப்ரல் 21 ஆம் திகதிக்குப் பின் கல்வியமைச்சுக்கு எதிராக தொடர் போராட்டத்தில் ஈடுபடுவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேற்படி தொடர்போராட்டம் 4 கட்டங்களில் நகர்த்தப்படவிருப்பதாகவும் அதற்கு நாட்டிலுள்ள அனைத்து ஆசிரிய ஆலோசகர்களும் ஒத்துழைப்புத்தரவேண்டும் எனவும் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார். முதற்கட்டமாக ஆசிரிய ஆலோசகர் சேவை தொடர்பில் கல்வி அதிகாரிகளிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் இச்சேவையின் முக்கியத்துவம் தொடர்பிலும் இலத்திரனியல் அச்சு ஊடகங்கள் மூலம் பிரசாரப் போரைத் தொடங்குவது இதன் மூலம் கல்வியமைச்சுக்கு அழுத்தம் கொடுப்பது,

2 ஆவது கட்டம் இச்சேவை உள்ளீர்ப்பு உச்சநீதிமன்றத் தீர்ப்பாகவிருப்பதனால் மீண்டும் இவ்விடயத்தைநீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்வது, மே 5 - 18 வரை ஆசிரிய ஆலோசகர்கள் பாடசாலைக்குச் செல்லாது கடமையைப் புறக்கணிப்பது இம் மூன்று கப்ப் போராட்டத்திற்கும் கல்வியமைச்சு செவிசாய்த்து தீர்வை முன் வைத்து உடனடியாகச் செயற்படுத்தத் தவறும் பட்சத்தில் 4 ஆம் கட்டமாக பௌத்த துறவி வன.டொடாம்பகல ஸ்ரீ சுகுநதேரர் தலைமையில் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிப்பது.

இவ்வுண்ணா விரதப் போராட்டத்தில் நாட்டிலுள்ள ஒவ்வொரு வலயத்திலிருந்தும். இருவர் பங்கேற்கவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (06)

# இன்றைய நிகழ்வுகள்

சந்நிதியான் ஆச்சிரமத்தின் ஏற்பாட்டில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும் விசேட நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் "குறள் காட்டும் நெறி" எனும் தலைப்பில் செஞ்சொற் செல்வர் இரா.செல்வவடிவேல் சொற்பொழிவாற்ற வுள்ளார்.

மேற்படி நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு விழா ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

அளவெட்டி மேற்கு நாகேஸ்வரம், ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் இன்று வெள்ளிக்கிழமை பங்குனி உத்தர பூசை பக்தி பூர்வமாக நடைபெறவுள்ளது.

காலை 7 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூஜைகள் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன. காலை 9 மணிக்கு விசேட சமய நிகழ்ச்சிகள், இடம்பெறும். முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து சுவாமி வீதியுலா வருவார். (68)

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

யாழ்.உரும்பிராய் இந்துக்கல்லூரியின் ஸ்தாபகர் தினமும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று கல்லூரியின் கற்பக விநாயகர் கலை யரங்கில் இடம் பெறவுள்ளது. காலை 9 மணிக்கு இடம்பெறும் அதிபர் அ.அருணந்திசிவம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் சதாசிவம் பாலபுத்திரன் கலந்து கொள்வதுடன் யாழ்.கல்வியைய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் சண்.தயாளன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# இன்றுமுதல் இடமாற்றம்

யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப் பெற்ற பஸ் கம்பனிகளின் இணைய காரியாலயம் இன்று தொடக்கம் புதிய இடத்தில் இயங்கவுள்ளது. மேற்படி காரியாலயம் இன்று முதல் 260/22, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கவுள்ளதாக யாழ். பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத் தலைவர் பொ.கெங்காதரன் தெரிவித்துள்ளார். மேற்படி இணையம் இதுவரை காலமும் இல.191, 1ஆம் குறுக்குத்தெரு, வேம்படிச்சந்தி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கி வந்தது குறிப்பிடத்தக்கது.

நாம் எதை இழந்தாலும் கௌரவத்தை மட்டும் இழக்க இடம் தரக்கூடாது. -சாக்ரடீஸ்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## எப்படித் தீர்வு வரும்?

ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவந்து தமிழர்களின் வாழ்விலும் மாற்றங்களைக் கொண்டுவரப் போவதாக ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் சொல்லியிருந்தார்கள் தமிழரசுக் கட்சியினர்.

புதிய அரசின் நூறு நாள் திட்டத்தில் அனைத்துக் கட்சிகளடங்கிய தேசிய நிறைவேற்றுச் சபையை அமைத்து, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும் சுமந்திரன் எம்.பி நேர்காணல் ஒன்றில் கூறியிருந்தார்.

மைத்திரிபால சிறிசேனவை நான் நம்புகிறேன். அவர் ஜனாதிபதியானால் 2015–ல் இனப்பிரச்சினைக்கான தீர்வு நிச்சயம் என்று தலைவர் இரா.சம்பந்தனும் தேர்தலுக்கு முன் முழங்கினார்.

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து தேசிய நிறைவேற்று சபையும் அமைக்கப்பட்டது. ஆனால் இவர்கள் அந்தக் கூட்டங்களுக்குப் போனதாகவோ அங்கு இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முன்னெடுப்புகளை வலியுறுத்தியதாகவோ செய்திகள் ஏதும் இல்லை.

புதிய அரசும் இனஅழிப்பு அரசுதான் என்று மாகாணசபையில் தீர்மானத்தை நிறைவேற்றியும், ஐநாவே இலங்கை அரசு மீதான போர்க்குற்ற விசாரணையை ஒத்திப் போடாதே என்று ஆர்ப்பாட்டம் நடாத்தியும்.... இந்த அரசுடனும் தாங்கள் தீர்வுக்குப் பேசப் போவதில்லை என்பதைத் தெளிவுபடுத்தி விட்டார்கள்.

தாங்கள் கொண்டுவந்ததாகச் சொல்லிக்கொண்ட புதிய அரசும் தீர்வைத் தராது என்று அந்த அரசு பதவிக்கு வந்த ஒரு மாதத்திலேயே இவர்கள் சொல்ல ஆரம்பிக்கிறார்கள் என்றால்.... ஏற்கனவே எந்த அரசாங்கம் வந்தாலும் தங்களால் தீர்வை எடுக்க முடியாது என்ற அடித்தெளிவுடன் இருக்கிறார்கள் – அதை ஒப்புக் கொள்கிறார்கள் என்றே அர்த்தம்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணாமல் இவர்கள் மக்களை உணர்ச்சிவசப்படுத்த போடும் கோஷங்களான இராணுவ வெளியேற்றம், காணிகளை முற்றாக மீளப்பெறுதல் போன்றனவெல்லாம் இவர்கள் கேட்பதுபோல் நடைபெறாது என்பது இவர்களுக்குத் தெரியும்.

இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டிய ஆட்சியாளர்களுடன் முறுகிக்கொண்டும், கண்ணைக் கட்டிக் கோவம் போட்டுக்கொண்டும், சிங்கள மக்களை ஒரு பொருட்டாகவே எடுக்காமலும் எப்படி தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீரும் என்று இவர்கள் மக்களைக் காத்திருக்க வைக்கிறார்கள்?

அதற்குத்தான், தேர்தல் லாபங்களுக்காக சிங்களத் தரப்பினருடனான தங்களது குலாவல்கள் முடிந்ததும், "சர்வதேசம் உன்னிப்பாக கவனிக்கிறது; வந்திறங்கத் தயாராகிறது..." என்ற எதிர்பார்க்கைகளை ஊடகங்கள் மூலம் வழங்கி மக்களைக் காத்திருக்க விடுகிறார்கள்.

நேற்றைய தமிழரசுக் கட்சிப் பத்திரிகையின் முன்பக்கச் செய்திகளைப் பார்த்தால், அவர்கள் தமிழர்களுக்கு என்னமாதிரியாக நம்பிக்கை ஊட்டி மக்களை எதற்கோ காத்திருக்கும்படி செய்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ளலாம்:

"இராணுவத்தைக் காப்பாற்றவே உள்ளகப் பொறிமுறை–ஐ.நா அறிக்கையாளரிடம் தெளிவாக எடுத்துரைத்தனர் தமிழ் சிவில் சமூகத்தினர்"

"ஐநாவின் பார்வை இலங்கையின் பக்கம் – உதவிச் செயலாளர் நாயகமும் இவ்வாரம் வடக்கிற்கு வருகிறார்"

"விக்கி – ரணில் முறுகலை கவனிக்கிறது சர்வதேசம்: யாழ் வந்த ஜேர்மன் தூதுவர் கரிசனையுடன் கேட்டறிந்தார்"

"ஐ.நா நிபுணரும் முதலமைச்சரும் மூடிய அறைக்குள் சந்தித்தனர். போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறல், இனஅழிப்புத் தீர்மானம் உள்ளிட்ட விவரங்கள் குறித்துப் பேசப்பட்டதாகக் கூறப்படுகிறது"

இத்தகைய செய்திகளை முன்பக்கத்தில் போட்டு தமிழரசுக் கட்சி மக்களிடம் என்ன நம்பிக்கையை விதைக்க முற்படுகிறது?

சர்வதேசம் இலங்கையரசை அழுத்துவதற்கான கருவிகளைக் கூர்தீட்டிக் கொண்டிருக்கிறது... அங்கிருந்துதான் எமது மக்களுக்கான தீர்வு வரப்போகி றது என்ற பொய்யான நம்பிக்கையைத் தானே?

- ஆசிரியர்

# சீன அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுப்பு

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

போர்ட் சிட்டித் திட்டம் தவிர்ந்த ஏனைய சீன அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

சீன நிதி உதவி மற்றும் கடன் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் அனைத்து அபிவிருத்தித் திட்டங்களும் தொடர்நதும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த அபிவிருத்தித் திட்டங்களின் ஊடாக கடந்த அரசாங்கம் பாரியளவில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டுள்ளது.

ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையை விடவும் குறைந்தளவான பணமே அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளத் தேவைப்படுகின்றது.

ஊழல் மோசடிகளைத் தவிர்த்து நாட்டுக்கு நன்மை ஏற்படுத்தும் சீன அபிவிருத்தித் திட்டங்களை அரசாங்கம் தொடர்ந்தும் முன்னெடுக்கும் எனவும், சீன அபிவிருத்தித் திட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை எனவும் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சீன விஜயம் தொடர்பில் விளக்கம் அளிக்கும் நோக்கில் கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# தேசிய பாடசாலைகளிலுள்ள அதிபர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

(கொழும்பு)

தேசிய பாடசாலைகளில் உள்ள வெற்றிடங்களுக்கு அதிபர்களை இணைத்துக்கொள்வதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த வருடம் டிசம்பர் 31 ஆம் திகதியுடன் அதிபர் பதவி வெற்றிடமாகும் 106 தேசிய பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் 1, 2 மற்றும் 3 ஆம் தர உத்தியோகத்தர்கள் மற்றும் இலங்கை அதிபர் சேவையில் 1 ஆம் தர உத்தியோகத்தர்களில், தகுதியான அதிபர்கள் வெற்றிடங்களுக்கு தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

அதற்கான விண்ணப்பங்கள் இந்த மாதம் 30 ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

மேல் மாகாணத்தில் 09 பாடசாலைகளுக்கும், மத்திய மாகாணத்தில் 15 பாடசாலைகளுக்கும், வடக்கில் 16 பாடசாலைகளுக்கும், கிழக்கில் 10 பாடசாலைகளுக்கும் தெற்கில் 23 பாடசாலைகளுக்கும் அதிபர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

# மகேஸ்வரன், லசந்த படுகொலை இரகசியங்கள் விரைவில் வெளிவரும்

## அமைச்சர் ஜோன் தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரி.மகேஷ்வரன் மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க ஆகியோரின் கொலை தொடர்பான இரகசியங்கள் விரைவில் வெளியிடப்படவுள்ளன.

இந்தத் தகவலை சட்டம் நீதி ஒழுங்கமைப்பு அமைச்சர் ஜோன அமரதுங்க வெளியிட்டுள்ளார்.

சிங்களப்பத்திரிகை ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜின் படுகொலை தொடர்பாக கடற்படை அதிகாரிகள் மூவர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த விசாரணைகளில் கடந்த 2006ஆம் ஆண்டு மகேஷவரனின் படுகொலை தொடர்பான இரகசியங்களும் வெளிவரும் சாத்தியங்கள் இருப்பதாக அமைச்சர் ஜோன் அமரதுங்க கூறியுள்ளார். இந்தப்படுகொலைகளுக்கு யாரால் உத்தரவிடப்பட்டது? எதறகாக? என்ற கேள்விகளுக்கான பதில்கள் விரைவில் கிடைக்கும் என்றும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார்.

# நிர்வாக சேவை பரீட்சை முடிவுகள் வெளியீடு

இலங்கை நிர்வாக சேவை தரம் 3 இற்கு ஆட்சேர்ப்பதற்காக கடந்தாண்டு நடாத்தப்பட்ட திறந்த போட்டிப்பரீட்சையில் சித்தி பெற்றவர்களது பெயர் விபரம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

அரசாங்கசேவை ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் 27.09.2014 மற்றும் 04.10.2014 களில் நடாத்தப்பட்ட பரீட்சைகளினடிப்படையில் 215பேர் வெட்டுபபுள்ளிக்குமேல் பெற்று சித்தியடைந்துள்ளனர். இவர்கள் நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்படவுள்ளனர்.

இலங்கை நிர்வாகசேவையில் காணப்படும் 172 வெற்றிடங்களை நிரப்புவதற்காகத் இத்தெரிவு இடம்பெற்றுள்ளது. மிகவிரைவில் இதற்கான நேர்முகப்பரீட்சை நடைபெறவுள்ளது. அகரவரிசைப்படி பெயர்விபரம் சுட்டிலக்கம் மற்றும் அடையாளஅட்டை இலக்கத்துடன் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்முறை நேர்முகப்பரீட்சை இரு கட்டங்களாக நடைபெறும். ஆவணங்கள் செவ்வை பார்க்கும் நேர்முகப்பரீட்சை மற்றது 5சிறு தலைப்புகளில் வினாக்களுடனான நேர்முகப்பரீட்சை. இரண்டிலும் திறமைகாட்டும் 172பேர் இலங்கை நிர்வாகசேவை தரம் 3 இற்கு நியமிக்கப்படுவார்கள். 192 சிங்களவர்கள், 17 தமிழர்கள், 6 முஸ்லிம்கள் இந்நேர்முகப் பரீட்சைக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த 215 பேரில் 43பேர் நேர்முகப்பரீட்சையில் நிராகரிக்கப்படுவர். மீதி 172பேர் நியமனத்திற்காக தெரிவாவர்.

# வடக்கில் இராணுவத்தை அகற்றப் போவதில்லை

## இராணுவத்தளபதி தெரிவிப்பு

வடக்கிலிருந்து இராணுவத்தை மீளப் பெற்றுக் கொள்ளப் போவதில்லை என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் கிருஸாந்த டி சில்வா தெரிவித்துள்ளார். கொழும்பு ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வடக்கிலிருந்து இராணுவ முகாம்களும் அகற்றிக்கொள்ளப்பட மாட்டாது என அவர் தெரிவித்துள்ளார். இராணுவப் படையினரின் தரத்தை சர்வதேச ரீதியில் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்காமல் இருப்பதனைத்தடுப்பதற்கு சகல வழிகளிலும் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதில் கூடுதல் சிரத்தை எடுத்துக்கொள்ளப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

# தமிழ்த் தலைமைகளின் துரோக அரசியல் வரலாறும், இணக்க அரசியல் ஞானமும்!

சுப்பராஜன்

**“வரலாறு முழுவதும் மற்றைய தமிழ் அரசியல்வாதிகள் அல்ல, இந்தப் பிற்போக்குத் தமிழ்த் தலைமைகளே தமிழ் மக்களுக்கு எதிராகத் துரோகம் செய்து வந்திருக்கிறார்கள். இவர்கள் உண்மையான தமிழ்த்தேசியவாதிகள் அல்லர். ஏகாதிபத்திய சக்திகளின் சிங்களப் பிரதிநிதிக–ளாக ஐ.தே.க. இருப்பது போல, இவர்கள் அதே ஏகாதிபத்திய சக்திகளின் தமிழ் பிரதிநிதிகள் என்பதே உண்மை.**

**அதனால்தான் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசுகள் பதவிக்கு வந்தால் எதிர்ப்பு அரசியல் நடாத்துவதும், ஏகாதிபத்திய சார்பு ஐ.தே.க.அரசு பதவிக்கு வந்தால் அதனுடன் கூழக்குலாவி இணக்க அரசியல் நடாத்துவதுமாக இருக்கிறார்கள். தற்போது இவர்கள் பேசும் இணக்க அரசியலும் இந்த வகையானது தான்.”**

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் பெயருக்கு 5 கட்சிகள் இருந்தாலும் அதை வழி நடாத்துபவர்களும், தீர்மானம் எடுப்பவர்களும் கூட்டமைப்பில் ஆதிக்கம் வகிக்கும் கட்சியான தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள். அதில் ஒருவர் இரா.சம்பந்தன். இன்னொருவர் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன். மூன்றாமவர் வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன்.

இந்த அணியில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா ஏன் விடுபட்டுப் போனார் என்ற கேள்வி பலருக்கு எழலாம். மாவையின் சொல்லையும் செயலையும் பார்ப்பவர்கள் அவர் பெயருக்குத்தான் தலைவராக இருக்கிறார் என்ற கருத்தைக் கொண்டிருப்பதால், அவரை விட்டுவிடுவோம். மற்றைய மூவருக்கும் இருக்கும் “தராதரங்கள்” மாவைக்கு இல்லை என்பதும் பலரின் கருத்து.

முன்குறிப்பிட்ட மூவரும் கடந்த இரண்டு மாதங்களாக ஒரு புதிய வார்த்தையைப் பேச ஆரம்பித்திருக்கிறார்கள். அது வேறொன்றும் இல்லை, “இணக்க அரசியல்” என்ற வார்த்தைதான். ஜனவரி 08 ஆம் திகதி தேர்தலில், மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகத் தெரிவாகி, கூட்டமைப்பினருக்கு மிகவும் பிடித்த ஐக்கிய தேசியக் கட்சி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஆட்சி அமைத்ததும்தான், கூட்டமைப்பினருக்கு இணக்க அரசியல் என்ற வார்த்தை ரொம்பவும் பிடித்துப்போய்விட்டது.

இதற்கு முன்பும்கூட, பல வருடங்களாக காலத்துக்குக் காலம் சில தமிழ் அரசியல்த் தலைவர்கள் இணக்க அரசியல் பற்றிப் பேசியும், செய்தும் வந்திருக்கிறார்கள். ஆனால் அப்பொழுது இணக்க அரசியல் பேசிய இவர்களை எல்லாம் முன்னர் தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி என்பனவும், பின்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் “துரோகிகள்” என வர்ணித்ததுடன், அவர்களுக்கு இயற்கை மரணம் கிடையாது எனவும் கூறி, தமிழிளைஞர்களுக்கு உசுப்பேத்தி அவர்களில் பலர் கொல்லப்படுவதற்கு வழிவகுத்தனர்.

இணக்க அரசியல் பேசியவர்களில் ஆகப்பிந்திய தமிழ் அரசியல்த் தலைவர் டக்ளஸ் தேவானந்தா. அவரையும் துரோகி என இவர்கள் வர்ணித்ததுடன், அதன் காரணமாக அவர்மீதும் சுமார் 9 தடவைகளுக்குமேல் கொலை முயற்சிகள் நடைபெற்றன. ஆனால் இன்று வடக்குத் தமிழ் மக்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிப்பதற்கு அவர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் இணைந்து பெரும் பணியாற்றிய பெருமை தலைகீழாக நின்றாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் மறுக்க முடியாது.

சரி இவையெல்லாம் ஒருபக்கம் இருக்கட்டும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருக்குத் தோன்றிய இந்தப் புதிய “இணக்க அரசியல்” நிரந்தரமாக நின்று பிடித்து, அதன் மூலம் தமிழ் மக்களுக்கு ஏதாவது நன்மை விளையுமா என்பதையும் பார்த்துவிடுவது நல்லது.

ஏனெனில் இவர்களின் முன்னைய தலைமைகளினதும், தற்போதைய தலை மையினதும், அரசியல் வரலாற்றை அறிந்தவர்களுக்கு இவர்களின் தற்போதைய இணக்க அரசியல் என்பது ஒரு “புலுடா” என்பது தெளிவாக விளங்கும்.

தமிழ்த் தலைமைகளின் வரலாற்றை எடுத்துப் பார்த்தால், எப்பொழுதெல்லாம் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசுகள் பதவிக்கு வருகின்றனவோ அப்போதெல்லாம் ஆவேசமாக இன விடுதலைப் போராட்டம் நடாத்துவதும், ஐ.தே.க. அரசாங்கம் பதவிக்கு வந்தால் தமது போராட்டங்களை எல்லாம் கைவிட்டு அந்த அரசுடன் கூடிக்குலாவி இணக்க அரசியல் செய்வதும், ஒரு தொடர்ச்சியான நடைமுறையாக இருந்து வந்துள்ளதைக் காணலாம். மற்றவர்களைத் துரோகிகள் என்று குற்றம் சாட்டும் இவர்கள்தான் தமது வரலாறு முழுவதும் தமிழ் மக்களுக்கு எதிரான துரோக அரசியல் செய்திருக்கிறார்கள்.

- சுதந்திர இலங்கையின் முதலாவது அரசாங்கம் ஐ.தே.க.வின் டி.எஸ்.சேனநாயக்க தலைமையில் அமைந்தபோது அதில் அகில தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவரான ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஒரு அமைச்சரானார். (அப்பொழுது எஸ்.ஜே.வி.செல்வநாயகம், கு.வன்னியசிங்கம், ஈ.எம்.வி.நாகநாதன் எல்லோரும் அக்கட்சியில்தான் இருந்தனர்) அந்த அரசு திட்டமிட்டு தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களைச் செய்ததுடன், இந்திய வம்சாவழி தமிழ் தோட்டத் தொழிலாளர்களின் பிரஜாவுரிமையையும் வாக்குரிமையையும் பறித்தது. இந்த நடவடிக்கையை பொன்னம்பலமும் அவரது கட்சியும் ஆதரித்து வாக்களித்தன.
- 1957 இல் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக பண்டாரநாயக்கவும் செல்வநாயகமும் ஒப்பந்தம் செய்தனர். அதை எதிர்த்து ஐ.தே.க ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையில் “கண்டி யாத்திரை” செய்து ஒப்பந்தத்தைக் கிழித்தெறிய வைத்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் சிங்கள இனவாதிகளுக்கு எதிராக பண்டார நாயக்கவின் கைகளைப் பலப்படுத்த வேண்டிய தமிழரசுக் கட்சி தேவையில்லாமல் சிங்கள சிறீ எதிர்ப்புப் போராட்டத்தை நடாத்தி இனவாதிகளுக்குத் தீனிபோட்டது.
- சமஸ்டி கொள்கையே தமது கொள்கை எனக் கூறிவந்த தமிழரசுக் கட்சி 1965 தேர்தலின் பின்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு நிபந்தனையுடன் ஆதரவளித்து தமிழர் பிரச்சினையில் சிலவற்றைத்தானும் தீர்ப்பதற்கு இருந்த வாய்ப்பை நிராகரித்துவிட்டு, கே.எம்.பி.ராஜரத்ன, ஆர்.ஜீ.சேனநாயக்க போன்ற தீவிர சிங்கள இனவாதிகளுடன் சேர்ந்து டட்லி சேனநாயக்க தலைமையிலான ஐ.தே.க அரசில் பங்கேற்று ஒன்றுமில்லாத வெறும் “மாவட்ட சபைகள்” பெறப்போவதாகச் சொல்லி, பின்னர் அதுவுமில்லாமல் ஏமாந்த வரலாறு எல்லோருக்கும் தெரிந்த ஒன்று.
- 1976 இல் வட்டுக்கோட்டையில் மாநாடு கூடி “தனித் தமிழ் பின்னர் 1977 இல் ஜே.ஆர்.தலைமையில் ஐ.தே.க அரசு அமைந்த போது அதனுடன் கூடிக்குலாவி அதிகாரமற்ற “மாவட்ட அபிவிருத்தி சபைகள்” என்ற ஏமாற்றுக்குச் சம்மதித்து இறுதியில் அதுவும் இல்லாமல் போனது வரலாறு.
- இலங்கையின் சுதந்திர தினத்தையும், அதன் சிங்கக் கொடியையும் புறக்கணிக்கிறோம் என கடந்த 60 ஆண்டுகளுக்கும் மேலாகச் சொல்லி வந்த தமிழ் தலைமை, அதைக் கைவிட்டு சம்பந்தன் ரணிலுடன் கைகோர்த்து சிங்கக் கொடி பிடிக்கவும், இவ்வருட சுதந்திர தின விழாவில் ஐ.தே.க அரச பிரதிநிதிகளுடன் வீற்றிருக்கவும் வழி வகுத்திருக்கிறது.
- புலிகளுடனான இறுதிப் போரின் போது முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக் கணக்கான தமிழர்களை இலங்கை அரச படைகள் “இனப்படுகொலை” செய்ததாகக் குற்றஞ்சாட்டிய தமிழ் தேசியக் கூட்டமைப்பு, அதற்கான முழுப்பழியையும் மகிந்த ராஜபக்ஷ மீது சுமத்திவிட்டு, 2010 ஜனாதிபதித் தேர்தலின் போது அந்த யுத்தம் முழுவதையும் களத்தில் நின்று வழிநடாத்திய முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகவை வெளிப்படையாக ஆதரித்தது.
- அதேபோல மகிந்த அரசில் 10 வருடங்களாக முக்கிய அமைச்சராகவும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலராகவும், இறுதி யுத்த நேரத்தில் மகிந்த நாட்டில் இல்லாத 2 வாரங்கள் நாட்டின் பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்த மைத்திரிபால சிறிசேனவை இவ்வருடம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் கூட்டமைப்பு ஆதரித்தது.

இவ்வாறாக தமது வரலாறு முழுவதும் மற்றைய தமிழ் அரசியல்வாதிகள் அல்ல, இந்தப் பிற்போக்குத் தமிழ் தலைமைகளே தமிழ் மக்களுக்கு எதிராகத் துரோகம் செய்து வந்திருக்கிறார்கள். இவர்கள் உண்மையான தமிழ் தேசியவாதிகள் அல்லர். ஏகாதிபத்திய சக்திகளின் சிங்களப் பிரதிநிதிகளாக ஐ.தே.க இருப்பது போல, இவர்கள் அதே ஏகாதிபத்திய சக்திகளின் தமிழ் பிரதிநிதிகள் என்பதே உண்மை.

அதனால் தான் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான அரசுகள் பதவிக்கு வந்தால் எதிர்ப்பு அரசியல் நடாத்துவதும், ஏகாதிபத்திய சார்பு ஐ.தே.க அரசு பதவிக்கு வந்தால் அதனுடன் கூடிக்குலாவி இணக்க அரசியல் நடாத்துவதுமாக இருக்கிறார்கள். தற்போது இவர்கள் பேசும் இணக்க அரசியலும் இந்த வகையானதுதான்.



ஏனெனில் இவர்களது சகபாடியான ஐ.தே.க இப்பொழுது ஆட்சிக் கட்டிலில் இருக்கிறது. தற்செயலாக அடுத்த பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றி பெற்று ஆட்சி அமைத்தால் மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதையாக, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மீண்டும் எதிர்ப்பு அரசியல் செய்ய ஆரம்பிப்பதை நிச்சயமாகக் காணமுடியும்.

அதனால்தான் தமது இணக்க அரசியல் பற்றி அண்மையில் கருத்துத் தெரிவித்த வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், “நாம் சொல்லும் இணக்க அரசியல் மற்றவர்களுடையது போன்றது அல்ல” எனப் பொடி வைத்துப் பேசியிருக்கிறார்.

(நன்றி: வானவில் 51)

# எதிர்க்கட்சித் தலைவர் யார்? தூக்கமின்றித் தவிக்கும் சபாநாயகர்

எதிர்க்கட்சித் தலைவர் யார் என்பது குறித்து தீர்மானிக்க முடியாமல், சபாநாயகர் சமல் ராஜபக்ஷ இரவெல்லாம் தூக்கமின்றி தவிப்பதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் 7 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது, எதிர்க்கட்சித் தலைவர் குறித்த விவகாரத்துக்கு பதிலளிக்க வேண்டிய நிலையில் உள்ளார் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ.

அதற்காக, நாடாளுமன்ற மரபுகள், சம்பிரதாயங்கள் தொடர்பான நூல்களை படிப்பதிலேயே அவர் நேரத்தைச் செலவிட்டு வருகிறார்.

அவர் இரவில் கூட தூங்காமல், நூல்களைப் படித்து தமது முடிவு மற்றும் அதற்குத் தேவையான அடிப்படைகளை நியாயங்களை ஆராய்ந்து வருகிறார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த நிமால் சிறிபால டி சில்வா எதிர்க்கட்சித் தலைவராகத் தொடர்வதற்கு நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் பலவும், எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

அதேவேளை, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐ.தே.க. ஆகிய கட்சிகளையடுத்து, நாடாளுமன்றத்தில் அதிக உறுப்பினர்களைக் கொண்ட கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புககே எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட வேண்டும் என்று பெரும்பாலான தமிழ், முஸ்லிம் கட்சிகள் கோரியுள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சிகளான, மக்கள் ஐக்கிய முன்னணி, ஜனநாயக இடதுசாரி முன்ணணி, தேசிய சுதந்திர முன்னணி ஆகிய கட்சிகள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு, எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கக் கூடாது என்று சபாநாயகரிடம் தெரிவித்துள்ளன.

தேசிய நிறைவேற்றுச் சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அங்கம் வகிப்பதைச் சுட்டிக்காட்டியே, இந்தக் கட்சிகள் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன.

அதேவேளை, தினேஸ் குணவர்த்தனவை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்க வேண்டும் என்று இந்தக் கட்சிகள் கோரி வருவதுடன், இதற்கு ஆதரவாக சுமார் 60 வரையிலான சுதந்திரக் கடசி உள்ளிட்ட கட்சிகளின் உறுப்பினர்களின் கையெழுத்தை திரட்டியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தநிலையில், யாரை எதிர்கட்சித் தலைவராகத் தெரிவு செய்வது என்று தெரியாமல், சபாநாயகர் குழப்பமடைந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பௌத்தத்தை அழிக்கும் சூழ்ச்சியே 19 ஆவது திருத்தச் சட்ட யோசனை

## தினேஷ் தெரிவிப்பு



19 ஆவது திருத்தச் சட்டம் பௌத்த மதத்தை அழிக்கும் முயற்சியாகவே கருதப்பட வேண்டுமென மஹஜன ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

பௌத்த மதத்தை அழிக்கும் ஓர் சூழ்ச்சித் திட்டமாகவே 19 ஆம் திருத்தச் சட்டத்தை கருத வேண்டியுள்ளது.

19 ஆவது திருத்தச் சட்டத்தின 33 ஆம் சரத்தில் சமயம் தொடர்பிலான பகுதியில் இந்த சூழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்த சரத்தின் அடிப்படையில் ஜனாதிபதி நடவடிக்கை மேற்கொண்டால் பௌத்த மதத்தை பாதுகாக்க முடியாது. இந்த நிலைமையை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

அரசியலமைப்பு மாற்றம் என்பது என்ன என்பதனை நாடு அறிந்திருக்கவில்லை. மக்களுக்கு தெரியாமல் அரசியலமைப்பை மாற்றும் நாடு உலகில் வேறு எங்கும் கிடையாது.

அரசியல் அமைப்பின் 9 ஆம் சரத்தின் அடிப்படையில் பௌத்த மதத்தை பாதுகாக்க அரசாங்கம் கடப்பாடுடையது.

அந்த விடயங்களில் எவரும் கை வைக்கக் கூடாது. அவ்வாறு மாற்ற வேண்டுமாயின் சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டுமென தினேஷ் குணவர்தன சிங்கள பத்திரிகையொன்றுக்கு செவ்வியளித்துள்ளார்.

# அமைச்சுப் பதவியிலிருந்து விலகினார் திஸ்ஸ கரலியத்த



அண்மையில் அமைச்சுப் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட திஸ்ஸ கரலியத்த தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அமைச்சராக பதவி வகித்து வந்த கரலியத்த, அண்மையில் புதிய அரசாங்கத்தின் அமைச்சுப் பதவியை ஏற்றுக்கொண்டார்.

எனினும் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் தொடர்ந்தும் பழிவாங்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். தேசிய அரசாங்கம் தொடர்பில் கிராம மக்கள் மத்தியில் தெளிவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் நூறு நாள் திட்டம் பூர்த்தியாக உள்ள நிலையிலும் ஐக்கிய தேசியக் கட்சியினர் தொடர்ந்தும் மக்களை பழிவாங்கி வருவதாகத் தெரிவித்துள்ளார். நல்லாட்சியில் ஒரு தரப்பினர் மட்டும் நன்மை அடைவதனை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பதவியை இராஜினாமா செய்வது குறித்த கடிதத்தை ஜனாதிபதிக்கும், நாடாளுமன்ற செயலாளருக்கும் அனுப்பி வைத்ததாகத் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதியாக வருவாரா சம்பிக்க பொதுமக்களே தீர்மானிப்பர்

## என்கிறார் வர்ணசிங்க

பாட்டளி சம்பிக்க ரணவக்க இலங்கையின் ஜனாதிபதியாக வருவாரா இல்லையா என்பதைத் தீர்மானிப்பது பொது மக்கள் என ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகப் பேச்சாளர் நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும் இரு ஜோசியக்காரர்கள் உருவாகியுள்ளதாகவும் அவர்கள் தற்போது சம்பிக்க குறித்து பேசுவதாகவும் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் குறிப்பிட்டார்.

காமினி வியங்கொட மற்றும் ரஞ்சித் தேவசிறி ஆகிய இருவரே அவர்கள் என்றும் முன்னர் அவர்கள் புலிகளுக்கு சார்பாகவும் கருத்து வெளியிட்டுள்ளதாகவும் நிஷாந்த குறிப்பிட்டுள்ளார்.

அவர்கள் குறித்து அதிகம் பேசவில்லை என்றும் அவர்களின் கருத்து கவலை அளிப்பதாகவும் முடிந்தால் விவாதத்திற்கு வருமாறு சவால் விடுப்பதாகவும் அவர் கூறினார். 19 ஆவது திருத்தச் சட்டம் சூழ்ச்சி என்றும் அவர்

# ஒரு பில். டொலர் மானியத்தை இலங்கைக்கு வழங்கும் சீனா



சீனாவினால் மேற்கொள்ளப்பட்ட கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தை இடைநிறுத்த அரசாங்கம் உத்தரவிட்ட பின்னரும், இலங்கைக்கு ஒரு பில்லியன் டொலர் மானியக் கொடைகளை வழங்க சீனா முன்வந்துள்ளதாக, அரசாங்கப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த வாரம் சீனாவுக்கு மேற்கொண்ட பயணத்தின் விளைவாகவே, இந்த மானியக் கொடைகள் கிடைத்துள்ளதாக, அமைச்சர் ராஜித சேனாரத்ன கொழும்பில் நேற்றுமுன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில் குறிப்பிட்டார்.

கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் தொடர்பான எந்த நிபந்தனைகளுமின்றியே, இந்த மானியக் கொடைகளை வழங்க சீனக் குழுவினர் முன்வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பீஜிங்கில் நடந்த பேச்சுக்களின் போது, சீன அதிபர் ஜி ஜினபிங் மற்றும் அவரது அதிகாரிகள் துறைமுக நகரத் திட்டம் குறித்து எதுவுமே குறிப்பிடவில்லை. ஆனால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அது குறித்து விளக்கமளித்திருந்தார்.

சுற்றுச்சூழல், சட்டம், காணி உரிமை, தேசிய மற்றும் பிராந்திய பாதுகாப்பு விவகாரங்களைக் கருத்திற்கொண்டு இது குறித்து ஆராய்வதாக அவர் தெரிவித்திருந்தார் என்றும் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

# வெள்ளைவான் விவகாரம் கோத்தாவே "கோட்பாதர்"

## கூறுகிறார் மேர்வின்



கடந்த அரசாங்க காலத்தில் பொது மக்கள் மத்தியில் பீதியைக் கிளப்பியிருந்த மற்றும் முக்கிய பிரமுகர்களைக் கடத்திய அல்லது அவர்கள் காணாமற்போக காரணமாகவிருந்த வெள்ளை வான் கலாசாரத்தின் தந்தை கோத்தாபய ராஜபக்ஷ என முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவே இதன் கோட் பாதர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். அவரது மோசமான சில நடவடிக்கைகளுக்கு அவர் தன்னையும் பயன்படுத்திக் கொண்டதாகவும் மேர்வின் மேலும் தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி நேர்காணலொன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# மகசின் சிறைச்சாலை பாதுகாப்புக் குறைப்பு

பாரியளவு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் தமிழீழ விடுதலைப்புலிச் சந்தேக நபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள மகசின் சிறைச்சாலையின் பாதுகாப்புக் குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாரியளவு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய பல தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிக்கப்படுகிறது.

இது வரை காலமும் சந்தேக நபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள பகுதிக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

எனினும் குறித்த இராணுவப் பாதுகாப்பை நீக்கிக் கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இஸ்ரேல் ஆயுதப் பயிற்சி பெற்றுக் கொண்ட தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களும் இந்தப் பகுதியல் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கபட்டிருந்த பயங்கரவாத சந்தேக நபர்கள் பல சந்தர்ப்பங்களில் உணவுத் தவிர்ப்பு உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களை நடாத்தியிருந்தனர். இவ்வாறான ஓர் நிலையில் இராணுவப் பாதுகாப்பு அகற்றப்படடமை பாரிய சிக்கலை ஏற்படுத்தக் கூடுமென சிறைச்சாலை அதிகாரியொருவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தேசிய பாதுகாப்பிற்கு முன்னுரிமை அரசிடம் கோருகிறார் மகிந்த

அரசாங்கம் தேசிய பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கோரியுள்ளார்.

கடுவெல, கொரதொட்ட பத்தினி தேவாலயத்தில் நடைபெற்ற அங்குரார்ப்பண நிகழ்வு ஒன்றில் நேற்றுமுன்தினம் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவிததுள்ளார். அங்கு அவர் தொடர்கையில்,

தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல்களை நாடு எதிர்நோக்கியுள்ளது. 40 ஆண்டு கால அரசியல் அனுபவம் உடையவன் என்ற ரீதியில் தேசிய பாதுகாப்பு விடயத்தில் பேரம்பேசக் கூடாது என்ற அறிவுரையை புதிய அரசாங்கத்திற்கு வழங்குகின்றேன்.

நாட்டை ஐக்கியப்படுத்தி சுதந்திரத்தை ஏற்படுத்தியே ஜனவரி மாதம் 9 ஆம் திகதி நான் புதிய அரசாங்கத்திடம் நாட்டை ஒப்படைத்தேன்.

தேசிய பாதுகாப்பை உறுதி செய்த என்னை சோதிக்காது, நாட்டுக்கு ஏற்பட்டுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல்களை புதிய அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

எனினும், எனது பொருட்கள் இருப்பதாகத் தெரிவித்து அங்கும இங்கும் தேடுதல் செய்வதில் அரசாங்கம் கூடுதல் நேரத்தை செலவிடுகின்றது.

என்னுடன் எவரேனும் பேசினால் நீதிமன்றில் உத்தரவு பெற்றுக்கொண்டு சென்று அவர்சது வீடுகள் சோதனையிடப்படுகின்றன.

வீடுகளை சோதனையிட உரிமை உண்டு என்ற போதிலும் இவ்வாறான இழிவான செயற்பாடுகளில் ஈடுபடக்கூடாது.

பௌத்த விஹாரைக்குச் சென்றாலும் சில தலைவியர் என்னை கேலி செய்கின்றார்கள். என்னுடன் வரும் மக்கள் சோற்றுப் பொதிகளுக்காக வருவதாக கிண்டல் செய்கின்றார்கள்.

என்னை அவமானப்படுத்தினால் பரவாயில்லை. எனினும், என்னுடன் வரும் மக்களை அவமானப்படுத்த வேண்டாம் என மகிந்த ராஜபக்ஷ கோரியுள்ளார்.



# சொல்லாத சேதி

தமிழ் ஊடகங்கள் சொல்லாதவையும், சொல்ல மறுப்பவையும்

எஸ். அனசூயா

# இலங்கை அரசாங்கத்தின் பொருளாதார மேதமை!

ஜனவரி 8ஆம் திகதிய ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி, மாற்றத்தை ஆதரித்து, மகிந்த ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்புவோம் என்று பலரும் ஊடகங்கள் வாயிலாகவும், முகப் புத்தகம் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களிலும் முழங்கித்தள்ளினார்கள்.

இந்த மாற்றத்தின் மூலம் இலங்கைத் தேசமும் காப்பாற்றப்பட்டு, தமிழ் மக்களின் பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டுவிடும் என்று அடித்துச் சொல்லிய இவர்கள், அதுபற்றி சிறிய சந்தேகத்தை எழுப்பியவர்களையெல்லாம் மகிந்தவின் ஆதரவாளர்கள், துரோகிகள், அடிவருடிகள் என்று திட்டித் தீர்த்தார்கள்.

இறுதியில், தாம் விரும்பிய மாற்றத்தை ஏற்படுத்துவதில் அவர்கள் வெற்றியும் பெற்றார்கள்.

ஆனால், அதன்பின், மாற்றத்தின் மூலம் எதையெல்லாம் சாதிப்போம் என்று சொன்னார்களோ அதுபற்றி அவர்கள் மூச்சும் விடுவதாக இல்லை.

மட்டுமன்றி, தாம் பிரகடனப்படுத்திய எதுவுமே நடந்தேறவில்லையே என்ற எந்தப் பொறுப்புணர்வையும் அவர்கள் வெளிப்படுத்தவில்லை.


மாறாக, இன்னும் தேர்தலில் தோற்றுப்போன மகிந்தவைத் திட்டித் தீர்ப்பதிலேயேதான் இன்பம் கண்டுகொண்டிருக்கிறார்கள்.

இவர்களை என்னென்பது?

குறைந்தபட்சம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவக்கூடிய வெளிநாட்டு முதலீட்டு விவகாரங்களில்கூட உறுதியான கொள்கையைக் கடைப்பிடிக்க முடியாமல், ஜனாதிபதி மைத்திரிபால ஒன்றையும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அவரது அமைச்சரவை பரிவாரங்கள் இன்னொன்றையும் கூறிக்கொண்டிருக்கும் நிலைமை பற்றி யாரும் அலட்டிக்கொள்வதாக இல்லை.

இலங்கையில் எதிர்பார்க்கப்பட்ட 7.5 சதவீத பொருளாதார வளர்ச்சி எட்டப்படவில்லை என்றும், தற்போதைய அரசியல் சூழ்நிலைகளால் முதலீடுகள் இல்லாமல்போவதே அதற்குக் காரணம் என்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி சொல்லியிருப்பதையும் எவரும் செவியில் போட்டுக்கொள்வதாகத் தெரியவில்லை.

கொழும்புத் துறைமுக நகரத் திட்டம், ஆசியாவிலேயே மிக உயர்ந்த கோபுரமாக திட்டமிடப்பட்ட தாமரைக் கோபுரம், இலங்கைக்கு அதிக வருமானத்தை ஈட்டித் தரும் என்று எதிர்பார்க்கப்பட்ட அவுஸ்ரேலியாவின் முன்னணி வர்த்தகர் ஜேம்ஸ் பாக்கரின் 300 பில்லியன் முதலீட்டுடனான சூதாட்ட விடுதியுடன் கூடிய உல்லாச விடுதித் திட்டம், வடக்குக்கான அதிவேக நெடுஞ்சாலை என்று, நீண்டுசெல்லும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களும், கடந்த அரசாங்கத்தினால் திட்டமிடப்பட்டது என்ற ஒரே காரணத்துக்காக நிறுத்தப்பட்டு வருவது பற்றியும் யாரும் கவலைப் படுவதாகத் தெரியவில்லை.



கடுமையான சட்டங்கள், இறுக்கமான நிலைப்பாடுகளுடன் மூடிய பொருளாதாரமாக இருந்த சீனா, அதன் அயராத உழைப்பு காரணமாக, உலகின் பலம் பொருந்திய பொருளாதாரமாக, ஆசியாவின் பொருளாதார வல்லரசாக உயர்ந்தது.

அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளால் சர்வாதிகார நாடு என்று விமர்சிக்கப்பட்ட அந்த சீனா, பின்னர், அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மனி மற்றும் பல ஐரோப்பிய நர்டுகளில் பெரும் முதலீடுகளைச் செய்தது.

சரிவடைந்துவந்த பொருளாதாரத்தால் சிரமப்பட்ட பல மேற்குலக நாடுகளை சீனப் பொருளாதார பலம் பல வழிகளில் காப்பாற்றியதாக பொருளியல் வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்வாறு, தமது நாட்டு பொருளாதார வளர்ச்சிக்கு சீனாவின் முதலீடுகளை நம்பியிருக்கும் அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மனி உள்ளிட்ட நாடுகள், இலங்கையில் சீனாவின் முதலீட்டுக்கு நேரடி மற்றும் மறைமுக எதிர்ப்புக் காட்டுகின்றன.

சீனாவின், 21ஆம் நூற்றாண்டுக்கான பட்டுப்பாதை திட்டம் எங்கே பொருளாதார ரீதியாக தம்மை இரண்டாம் நிலைக்குத் தள்ளிவிடுமோ என்ற அச்சம் காரணமாக, மொத்தச் சுயநல நோக்குடன் இலங்கையில் சீனாவின் முதலீடுகளுக்கு மேற்குலகம் முட்டுக்கட்டை போடுகிறது.

இவர்களின் விசுவாசிகளான இன்றைய இலங்கை ஆட்சியின் பிரதான பங்காளர்கள், தமது மேற்குலக விசுவாசத்தைக் காட்டுவதற்காக சீன முதலீடுகளை ஒவ்வொன்றாக நிறுத்தி வருகின்றனர்.

பதிலாக, அமெரிக்க ஆதிக்கத்திலிருக்கும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஐரோப்பிய நாடுகளின் முதலீடுகள் மூலம் இலங்கைப் பொருளாதாரத்தை மேம்படுத்தப்போவதாக இந்த ஆட்சியாளர்கள் பிரசாரம் செய்கின்றனர்.

வட, ஆசியாவின் பொருளாதார வல்லரசாக இருக்கும் சீனாவின் மிகப்பெரும் முதலீடுகளை நிறுத்திவிட்டு, தங்களுடைய நாட்டு பொருளாதாரத்துக்கே சீனாவை நம்பியிருக்கிற மேற்குலக நாடுகளின் உதவியுடன் இலங்கைப் பொருளாதாரத்தை வளர்த்துவிடலாம் என்று கூறும் நமது ஆட்சியாளர்களின் அறிவை என்னென்பது?

இந்த அறிவையே மேதமை என்று போற்றி, மாற்றத்தை ஏற்படுத்திவிட்டோம் என்று மார்தட்டிக்கொண்டு திரியும் எமது வாக்காளப் பெருமக்களைப் பற்றி இதற்குமேல் இனி என்னதான் சொல்ல முடியும்?

# தமிழை சரியாக உச்சரிக்காதவர்கள் மத்தியில் மூன்று நூல்களின் வெளியீடு பாராட்டுக்குரியது

## யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் தெரிவிப்பு

(யாழ்.நிருபர்)

தமிழ் மொழியைச் சரியாக உச்சரிப்பதற்கே மிகவும் கஷ்ரப்படுகின்ற பலரை நான் பார்த்திருக்கிறேன். இத்தகைய சூழ்நிலையில் ஒரே நாளில் மூன்று நூல்களை வெளியிடுவது என்பது மிகப்பெரிய சாதனையாகும்.

இவ்வாறு இலங்கை குமரித் தமிழ்ப் பணிமன்ற நிறுவுநர் நா.வை.குமரிவேந்தன் ஆக்கிய உலக உயர்தனிச் செம்மொழி செந்தமிழ் தமிழர் இலக்கிய இலக்கணம் திருக்குறள், ஒளவை நூல்கள் ஆகிய மூன்று நூல்களின் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய யாழ்ப்பாணத்திற்கான இந்தியத் துணைத்தூதர் ஆ.நடராஜன் குறிப்பிட்டார்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் துணை முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற இந்நிகழ்வின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், சப்ரகமுவ மாகாணத்தில் எவ்வாறு மிகச்சிறந்த இரத்தினக்கற்கள் காணப்படுகிறதோ அவ்வாறே யாழ்.மாவட்டத்திலும் மிகச்சிறந்த எழுத்தாளர்களும், புத்தி ஜீவிகளும் வாழ்கின்றனர்.

இன்று தமிழ்மொழியைக் கூட சரியாக உச்சரிக்கத் தெரியாதவர்கள் பலரை நான் பார்த்திருக்கிறேன்.

அத்தகைய தமிழர்கள் மத்தியில் ஒரேநாளில் மூன்று நூல்களை வெளியிடும் நா.வை.குமரிவேந்தனின் பணி பாராட்டுக்குரியது. நிறைந்த தமிழ்ப் பற்றாளரான அவர் மகேந்திரராசா என்ற தனது பெயரையே தூய தமிழில் குமரிவேந்தன் என்று மாற்றியமைந்துள்ளார்.

அழகிய தீவான நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட குமரிவேந்தன் நூல்கள் எழுதியதால் யாழ்ப்பாணத்தில் பெருந்திரளான மக்கள் மத்தியில் வெளியீட்டு விழா நடைபெறுகிறது. யாழ்ப்பாணத்து அறிஞர்கள் பலரின் நல்ல உரைகளைக் கேட்க முடிகிறது. இவ்வாறு அறிஞர்கள் பலரும் நூல்களை எழுதி வெளியீட்டு விழாக்களை நடாத்த வேண்டும் அந்த விழாக்களில் நாங்களும் நல்ல தமிழறிஞர்கள் பலரின் உரைகளைக் கேட்கக் கூடியதாக இருக்கும் எனவும் குறிப்பிட்டார்.

உலக உயர்தனிச் செம்மொழிச் செந்தமிழ் என்ற நூலை பிரதமவிருந்தினரின் பாரியார் திருமதி. சாந்திநடராசன் வெளியிட்டு வைக்க இலங்கை மின்சார சபை பதில் பொது முகாமையாளர் வ.சுப்பிரமணியம் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார் தமிழர் இலக்கிய இலக்கணம் என்ற நூலை தா.ச.சொலமன் அடிகளார் வெளியிட்டு வைக்க சமூகசேவையாளர் சு.கலாநாதன் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார். தமிழர் மெய்யியல் கோட்பாடு என்ற நூலை வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா வெளியிட்டு வைக்க பள்ளி முதல்வர் மேரிதிரேசா பசுபதி முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

யாழ்.மாவட்ட நர்டாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் இந்நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புப் பிரதிகளை வழங்கினார். வாழ்த்துரை, வெளியீட்டுரை மதிப்புரை என்பவற்றை முறையே பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, பேராசிரியர் தி.வேல்நம்பி, தமிழருவி த.சிவகுமாரன், தாவீது சதானந்தன் சொலமன் அடிகளார், புலவர் அ.வெ.அரியநாயகம், றோயல் கல்லூரி துணை முதல்வர் மா.கணபதிப்பிள்ளை ஆகியோர் நிகழ்த்தினர். (10)

# துவிச்சக்கர வண்டி வழங்கல்



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2015ஆம் ஆண்டு செயற்றிட்டத்தின் கீழ் இளைஞர் கழகங்கள் சுய வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது இதனொரு கட்டமாக யாழ்ப்பாணம் சங்குவேலி கிராமத்திலுள்ள வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட பாடசாலை மாணவி ஒருவருக்கு கந்தரோடை இளைஞர் கழகத்தால் அண்மையில் துவிச்சக்கர வண்டி வழங்கி வைக்கப்பட்டது. (160)

# சபாலிங்கம் கேட்போர்கூட அரங்கம் யாழ்.இந்துவில் இன்று திறப்பு

யாழ்.இந்துக் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட சபாலிங்கம் ஞாபகார்த்த கேட்போர் கூட அரங்கம் இன்று காலை 8.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. அதிபர் சு.தயானந்தராஜா தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் இந்த அரங்கத்தினை யாழ்.இந்துவின் முன்னாள் அதிபர் சு.பொன்னம்பலம் திறந்து வைக்கவுள்ளார்.

400 இருக்கைகள் கொண்ட இவ் அரங்கமானது முன்னை நாள் அதிபர் சபாலிங்கத்தின் மகனான ச.ஜோதிலிங்கத்தினால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. சபாலிங்கம் ஞாபகார்த்த இக் கேட்போர் கூடம் முற்றிலும் புதிய வசதிகளுடனும் நவீன மயத்துடனும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (48)

# கிரிக்கெட் நிர்வாகத்தில் அரசியல் இலங்கையை எச்சரிக்கும் ஐ.சி.சி

கிரிக்கெட் நிர்வாகத்தில் தேவையின்றி அரசாங்கம் தலையீடு செய்தால் உறுப்புரிமையை இலங்கை இழக்க நேரிடும் என சர்வதேச கிரிக்கெட் சபை எச்சரித்துள்ளது.

கிரிக்கெட் இடைக்கால நிர்வாக சபையை அமைத்ததன் ஊடாக ஏதேனும் அரசியல் தலையீடுகள் இடம் பெற்றிருந்தமை நிரூபிக்கப்பட்டால் இலங்கை சர்வதேச கிரிக்கெட் பேரவை உறுப்புரிமையை இழக்கும் என ஐ.சி.சி அறிவித்துள்ளது.

இவ்வாறு உறுப்புரிமை தற்காலிக அடிப்படையில் ரத்து செய்யப்பட்டால, உலகக் கிண்ணப் போட்டித் தொடர் போன்ற சர்வதேச கிரிக்கெட் பேரவையின் போட்டிகளில் இலங்கை பங்கேற்க முடியாது.

கிரிக்கெட் நிர்வாகத்தில் தேவையின்றி அரசியல் தலையீடு செய்யப்பட்டால் அது பேரவையின் 2.9 பி சரத்திற்கு புறம்பானது என தெரிவிக்கப் பட்டுள்ளது.

கிரிக்கெட் நிர்வாகத்தில் ஏதேனும் முறைகேடுகள் இடம் பெற்றிருந்தால் அது குறித்து நம்பகமான பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தி நடவடிக்கை எடுப்பதில் எவ்வித தவறும் கிடையாது என சர்வதேச கிரிக்கெட் பேரவையின் பிரதம நிறைவேற்று அதிகாரி டேவிட் ரிச்சர்ட்சன் தெரிவித்துள்ளார்.

புதிய விளையாட்டுத்துறை அமைச்சர் நவீன் திஸாநாயக்க அண்மையில் இடைக்கால கிரிக்கெட் சபையொன்றை நிறுவி அதன் பொறுப்புக்களை முன்னாள் வீரர் சிதத் வெத்தமுனியிடம் ஒப்படைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மஹேலவிற்கு முக்கிய பதவி




இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் கௌரவ பதவி ஒன்றை ஏற்றுக் கொள்ள இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜயவர்த்தன இணக்கம் தெரிவித்துள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அதன்மூலம் இலங்கை கிரிக்கெட்டை முன்னேற்ற மஹேல எதிர்பார்த்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நடந்து முடிந்த உலகக் கிண்ண போட்டியுடன் ஒருநாள் கிரிகெட் போட்டிகளில் இருந்து மஹேல ஓய்வு பெற்றுள்ளார். மஹேலவுக்கு தற்போது 37 வயது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஹபீஸிற்கு சென்னையில் பந்துவீச்சு பரிசோதனை



பாகிஸ்தான் சகலதுறை ஆட்ட வீரர் மொஹமட் ஹபீஸ் பந்து வீச்சு பரிசோதனைக்காக எதிர்வரும் 9 ஆம் திகதி சென்னை செல்லவுள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கட் சபை அறிவித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் 9 ஆம் திகதி சென்னை ராமச்சந்திரா பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள ஐ.சி.சியின் அங்கீகாரம் பெற்ற பரிசோதனை மையத்தில் ஹபீஸிற்கு பந்து வீச்சு பரிசோதனை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொஹமட் ஹபீஸின் பந்து வீச்சு சர்வதேச கிரிக்கட் சபை விதிமுறைகளுக்கு முரணாக அமைந்திருப்பதாகத் தெரிவித்து கடந்த 2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சர்வதேச போட்டிகளில் பந்து வீச தடை விதிக்கப் பட்டது.

அதன் காரணமாக கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்ற டெஸ்ட் தொடர்களில் விளையாடுவதற்கு மொஹமட் ஹபீஸிற்கு தடை விதிக்கப்பட்டது. எனினும் உலகக்கிண்ண தொடரில் துடுப்பாட்ட வீரராக களமிறங்க அனுமதி வழங்கப்பட் டது.

இந்நிலையில் காலில் ஏற்பட்ட காயம் காரணமாக அண்மையில் நடைபெற்று முடிந்த உலகக்கிண்ண தொடரிலும் ஹபீஸ் விளையாடவில்லை.

இந்நிலையில், தனது பந்து வீச்சு தொடர்பில் தீவிர கவனம் செலுத்தி வரும் ஹபீஸ் சர்வதேச கிரிக்கட் சபையின் பந்து வீச்சு பரிசோதனையை மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.சி.சி.தலைவர் பதவி விலகினார் முஸ்தபாகமால்



சர்வதேச கிரிக்கட் சபை தலைவர் பதவியிலிருந்து முஸ்தபா கமால் நேற்று ராஜினாமா செய்துள்ளார்.

ஹஸ்ரத் ஷக்பலால் சர்வதேச விமான நிலையத்தில் வைத்து செய்தியாளர்களிடம் முஸ்தபா கமால் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது, தனது ராஜினாமா கடிதத்தினை சர்வதேச கிரிக்கட் சபைக்கு அனுப்பியுள்ளதாக தெரிவித்துள்ள முஸ்தபா கமால் ஐ.சி.சி அரசியலமைப்பு விதிமுறைகளுக்கு ஏற்ப பணியாற்றுவதற்கு தனக்கு அனுமதி அளிக்கப்படவில்லை எனவும் இந்த விதிமுறைகளை மீறி தன்னால் பணியாற்ற முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இத்தகைய நிலைமை கிரிக்கட்டில் இருக்கும் போது அவை விளையாட்டை பாதிப்படைய செய்வதாக குறிப்பட்டுள்ள முஸ்தபா இது குறித்து ஐ.சி.சி ஆய்வு செய்ய வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துளளார்.

அதேவேளை உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு கிண்ணத்தை வழங்குவதற்கு தனக்கு அனுமதி மறுக்கப்பட்டதால் தனது உரிமை பறிக்கப்பட்டதாக தான் எண்ணியதாகவும் குறிப்பிட்டுள்ளார்

இதேவேளை இவரது பதவி விலகலை ஏற்றுக்கொண்டுள்ளதாக ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

## மேலும் ஒருவருடம் விளையாட சங்காவிற்கு அழைப்பு



இலங்கை அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்காரவை மேலும் ஒரு வருடம் அணிக்காக விளையாடுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே விளையாட்டுத்துறை அமைச்சர் நவீன் திசாநாயக்க இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இலங்கையை எதிர்காலத்தில் விளையாட்டில் தலைசிறந்த நாடாக மாற்ற வேண்டும் என்பதை கருத்திற்கொண்டு அவர் இந்த தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த உலக கிண்ண கிரிக்கெட் போட்டிகளுடன் சர்வதேச ஒருநாள் போடடிகளிலிருந்து சங்கக்கார ஓய்வு பெற்றுள்ளமையயடுத்தே அமைசசர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## நரைனின் பந்துவீச்சு மீளவும் சோதனை



மேற்கிந்திய தீவுகள் அணியின் சுழற்பந்து வீச்சாளர் சுனில் நரைனின் பந்து வீச்சு மீண்டும் ஒருதடவை சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என இந்திய கிரிக்கட் சபைத் தலைவர் ஜக்மோகன் டால்மியா தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல் போட்டிக்கான தமது அணி வீரர் சுனில் நரைன் மீதான பந்து வீச்சுத் தடையை நீக்க வேண்டும் என கொல்கத்தா நைட் றைடர்ஸ் அணி நிர்வாகம் இந்திய கிரிக்கட் சபையிடம் அண்மையில் கோரிக்கை முன்வைத்தது.

இந்நிலையில் இந்தக் கோரிக்கை தொடர்பாக ஆராய்ந்த இந்திய கிரிக்கட் சபை இவ்வாறு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜக்மோகன் டால்மியா தெரிவிக்கையில், நரைனின் பந்து வீச்சினை மீள் பரிசீலனை செய்தல் தொடர்பாக கொல்கத்தா நைட் றைடர்ஸ் அணி நிர்வாகத்தினருடன் தான் பேசியதாக குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி சுனில் நரைனின் பந்து வீச்சு சோதனை சென்னை ஸ்ரீ ராமச்சந்திரா பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரெண்டன் மக்கலத்திற்கு சேர் றிச்சட் ஹாட்லீ விருது



நியூசிலாந்து கிரிக்கெட் சபை சார்பில் ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரர், வீராங்கனைக்கான விருதுகள் வழங்கும் விழா ஒக்லாந்தில் நேற்று முன் தினம் நடந்தது.

இதில் இந்த ஆண்டுக்கான நியூசிலாந்தின் சிறந்த கிரிக்கெட் வீரராக கப்டன் பிரன்டன் மெக்கலம் தேர்வு செய்யப்பட்டார்.

சமீபத்தில் நடந்த உலக கோப்பை போட்டியில் ஆக்ரோஷமான கப்டனாக செயற்பட்டு அணியை முதல் முறையாக இறுதிப்போட்டிக்கு அழைத்துச் சென்றதில் முக்கிய பங்கு வகித்த மெக்கலத்துக்கு கவுரவமிக்க சேர் ரிச்சர்ட் ஹாட்லீ விருது வழங்கப்பட்டது.

ஆண்டின் சிறந்த டெஸ்ட் வீரர், ஒருநாள் போட்டி வீரர், 20 ஓவர் போட்டி வீரர் ஆகிய மூன்று விருதுகளையும் கனே வில்லியம்சன் தட்டிச் சென்றார். நியூசிலாந்து பெண்கள் கிரிக்கெட் அணியின் கப்டன் சுசி பேட்ஸ், ஆண்டின் சிறந்த வீராங்கனையாக தேர்வானார்.

# க.பொ.த.(சா/த) பெறுபேறுகள்

## தீவக வலயம்

**யாழ்ற்ரன் கல்லூரி**
எஸ்.கமலேஸ்வரி-8ஏ,எஸ், பி.கோபிதா-7ஏ,எஸ், ரி.சயந்தன்-6ஏ,2பி,சி, வி.வேதராணி-5ஏ,2பி,சி, எம்.நவநீதா-5ஏ,2பி,2சி, எம்.தர்ஷிகா-5ஏ,2சி,எஸ், கே.ஜெயமதுசன்-4ஏ,3பி,2எஸ், ரி.திருமகள்-4ஏ,3பி,சி,எஸ், பி.கவிதா-3ஏ,பி,3சி,2எஸ், கே.அஜந்தா-3ஏ,பி,2சி,2எஸ்,

**ஊர்காவற்றுறை புனித மரியாள் பெண்கள் பாடசாலை**
மேரி அல்வீனா-4ஏ,பி,2சி,எஸ், நிவேதிகா-3ஏ,3பி,3சி,ஜி.தனுசா-3ஏ,2பி,2சி,2எஸ், நிரோஜினி- 2ஏ,4பி,2சி,எஸ்,

**கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் கல்லூரி**
ரி.தனுஷிகா-3ஏ,பி,2சி,2எஸ், ஆர்.கிருஷாந்தி-2ஏ,3பி,3சி,எஸ், ஜே.நிதர்ஷினி-ஏ,4பி,2சி,எஸ், மேரிகனியா- ஏ,4பி,2எஸ்

**நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்**
ஜே.ரூபகரன்-ஏ,2சி,4எஸ்,

**நெடுந்நீவு றோ.க.மகளிர் கல்லூரி**
டில்க்சனா மேரி-ஏ,5சி,2எஸ், கிறிஸ்ரினா-ஏ,2சி,5எஸ், சரிதா-2பி,3சி,3எஸ்,

**நாரந்தனை றோ.க.வித்தியாலயம்**
இந்துஜா-4ஏ,2பி,சி,எஸ்,

**நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ர வித்தியாலயம்**
ரி.லக்சனா-4ஏ,பி,2சி,எஸ், பி.நிமலகாந்தனா-3ஏ,2பி,3சி, பி.சுபதிகா-ஏ,2பி,4சி,எஸ், பி.தீவனா-ஏ,5சி,2எஸ், எஸ்.லகீபன்-2பி,4சி,2எஸ்

**தம்பாட்டி அ.த.க.பாடசாலை**
ரி.சுமிதா-ஏ,5பி,சி,எஸ், கே.நித்திரன்,ஏ,2பி,3சி,எஸ், ரி.தர்ஷிகா-ஏ,பி,2சி,2எஸ், என்.றுஜிதா-பி,சி,4எஸ்,

**புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தியாலயம்**
எஸ்.கோகிலன்-ஏ,2பி,3சி,2எஸ், ஜே.துஸ்யந்தினி-2ஏ,பி,2சி,2எஸ், எம்.பிரியா-ஏ,2பி,3சி,2எஸ்,

**காரை.சுந்தரமூர்த்தி வித்தியாலயம்**
வி.றெனோசன்-5ஏ,2பி,சி,எஸ்,

**மண்டைதீவு ம.வி**
ரி.நியூட்டன்-2பி,3சி,எஸ், ஜே.செல்வராஜா-2பி,2சி,3எஸ்

**கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.-**
ரி.பார்த்தீபன்-8ஏ,எஸ், எஸ்.விதுஷா-6ஏ,2பி,எஸ், கே.அபிராமி-5ஏ,பி,சி,எஸ், எஸ்.விஷாலினி-4ஏ,4பி,எஸ், இ.பவானந்தன்-4ஏ,2பி,சி,எஸ், ஜே.தர்மிதா-4ஏ,பி,4சி,

**வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயம்**
யு.கௌசலா-4ஏ,2பி,3சி, ரி.ரஜிதா-3ஏ,5பி,,எஸ்.ஜெசிந்தன்-2ஏ,2பி,3சி,எஸ், வை.சுஜிந்தன்-2ஏ,5சி,எஸ்,

**வேலணை மத்திய கல்லூரி**
சி.கஜானனன்-8ஏ,சி, ம.நிரூஷன்-6ஏ,பி,சி,எஸ், சோ.கீர்திகா-6ஏ,சி,எஸ், க.பிரியங்கா-5ஏ,3சி,எஸ், கு.துஷாந் தினி-4ஏ,2பி,2சி,எஸ், உ.கனிஷ்ரன்-4ஏ,3பி,சி, க.கரிகரன்-4ஏ,3பி,சி, ரா.நிவோதிகா-3ஏ,2பி,2சி,எஸ், கு.ஜனனிகா-3ஏ,பி,3சி,எஸ், இ.சாலினி-3ஏ,பி,3எஸ், இ.எதர்சிகா-2ஏ,4பி,2சி,எஸ், சி.பவ்வியா-2ஏ,3பி, 3சி,எஸ், உ.ஜீவராஜ்-2ஏ,4பி,2சி ,எஸ், சி.சருபன்-2ஏ,3பி,சி,எஸ்., டே.தக்ஷனா-2ஏ,3பி,3சி,

**நெடுந்தீவு ம.வித்தியாலயம்**
ர.டிலாஜினா-ஏ,2பி,3சி,3எஸ்,

**அனலைதீவு சதாசிவம் ம.வி.**
ம.கீர்த்திகன்-3ஏ,3பி,சி,எஸ், க.மாலதி-ஏ,பி,3சி,3எஸ், லி.பவன்-ஏ,4சி,3எஸ்

**நயினாதீவு ம.வி.**
ஜெ.கிருசாலினி-3ஏ,2பி,சி,2எஸ்

## தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி

வி.சங்கீத்-9ஏ, ப.ரஜிவர்மன்-9ஏ, க.துளசிகன்-7ஏ,பி,சி, வி.விக்னேஸ்-7ஏ,பி,எஸ், யோ.அனுஷா-6ஏ,2பி,சி, சி.குணமேகலா-6ஏ,2பி,சி, பு.ஹம்சத்வனி-6ஏ,2பி,எஸ், மு.லஷ்சனா-5ஏ,3பி,எஸ்,க.கோபிகன்-5ஏ,2பி,சி,எஸ் த.திலக்ஷன்-5ஏ,2பி,சி, க.நிறஞ்சன்-5ஏ,2பி,சி, சி.சுபாங்கன்-5ஏ,2பி,சி, சு.சுகம்பிரதா-5ஏ,பி,2சி,எஸ் த.ராஜகுமார்-5ஏ,3சி, பி.கிறிஸ்சிகா-5ஏ,2பி,சி, எஸ், கே.விதுர்சன்-5ஏ,2பி,2சி, நா.நிதர்சன்-4ஏ,2பி,3சி, கே.வேனுஜா-4ஏ,2பி,சி,2எஸ். மு.ஜெனிஸ்ராஜ்-4ஏ3பி,சி,எஸ்.

## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

க.விபுலன்-8ஏ,சி, நி.எ.ஜீவப்பிரகாஸ்-8ஏ,எஸ்,செ.சாருஜன்-7ஏ,2பி, லோ.பிரியெந்தன்-7ஏ,2பி, ல.நிக்ஸ்மன்-7ஏ,பி,எஸ், ர.சஞ்சீவன்-6ஏ,3பி, ம.டெலக்சன்-6ஏ,2பி,எஸ்,செ.கஜிந்தன்-6ஏ,பி,2சி, பு.சஞ்சீவராம்-5ஏ,3பி,சி, த.நீராஜா-5ஏ,4பி,ஆ.டனந்-5ஏ,2பி,சி,எஸ்,லோ.றபிசாந்-5ஏ,பி,3சி,நி.சுவஸ்திகன்-5ஏ,பி,சி,எஸ்,நா.விதுர்சன்-4ஏ,4பி,சி, ற.சிந்துஜன்-4ஏ,2பி,3சி, பே.அங்கதன்-4ஏ,2பி,3சி. பா.அகீபன்-4ஏ,பி,4சி, அ.சுஜீவன்-4ஏ3சி,2எஸ்,நெ.ஜோ.தேவராஜ்-4ஏ,பி,2சி,2எஸ்,கி.கோபிகன்-3ஏ,2பி,4சி,சி.சாருஜன்-3ஏ,3பி,3சி. ஆ.சுஜீபன்-3ஏ,2பி,4சி, சி.சாரங்கன்-3ஏ,2பி,3சி,எஸ், பா.காந்தரூபன்-3ஏ,2பி,2சி,2எஸ், ந.ஹனுசாந்-3ஏ,6சி

**ஆங்கில மொழி மூலம்**
ஜே.இ.போல்பிரதீப்-7ஏ,2பி. க.கௌசிகன்-5ஏ,4பி

## அருணோதயக் கல்லூரி, அளவெட்டி

சி.வர்சிகா -7ஏ,பி,சி, இ.இளங்குமரன்- 7ஏ,பி,சி, சி.ஜெதுர்சன்-7ஏ,பி,சி, சே.ஸ்ரெலின்ராஜ்-6ஏ,3பி, கே.கவுணியன்- 6ஏ,பி,2சி, த.பிரதீபன்- 6ஏ,பி,சி,எஸ், பா.கஜானா-6ஏ,சி,எஸ், யு.டிலக்சன்-5ஏ,3பி,சி, ஜெ.பிரியங்கன்- 5ஏ,பி.2சி, சி.நிரோஜினி-5ஏ,பி,2சி,எஸ், கு.சுபீனா- 5ஏ,3பி, க.லக்சன்-4ஏ,4பி, த.ஜதுர்சன்- 4ஏ,2பி,2சி, எஸ்,உ.துசாந்தன்-4ஏ,பி,4சி, ந.அபினயசுரபி-4ஏ,பி,சி,3எஸ்

## யாழ்.சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

சி.வினோஜா-6ஏ,2பி,சி, ஜெ.மேனுஜா-6ஏ,2பி,சி, ந.அஜிந்தன்-6ஏ,2பி,எஸ், ச.ஜெதுஷா-6ஏ,பி,சி,எஸ், ஞா.விதுசிஜா-5ஏ,2பி,2சி, வ.டிலக்சன்-5ஏ,2பி,சி, ச.இசைப் பிரியன்-4ஏ,4பி,சி,த.புருசோத்தமன்-4ஏ,3பி,2சி, க.நித்தி யானந்தினி-4ஏ,3பி,சி, எஸ்,த. பேணுதர்சிகா-4ஏ,2பி,3சி. பு.நிக்ஷன்-4ஏ,2பி,2சி,எஸ், அ.லிபின்சன்-4ஏ,பி,2சி,2எஸ், த.லவண்ஜா-3ஏ,2பி,3சி. ஜெ.நிறோஜினி-3ஏ,2பி,2சி,2எஸ். ப.கெறசிகா-3ஏ,2பி,2சி,2எஸ். வி.பாணுஷா-3ஏ,பி,3சி,2எஸ், ம.சஞ்சிகா-3ஏ,பி,3சி,எஸ், ர.டிலக்ஷனா-3ஏ,2பி,2சி,2எஸ். ஜெ.நிரூஜா-3ஏ,2பி,2சி,2எஸ். கு.சஜீபன்-3ஏ,பி,3சி,எஸ். அ.நிரோஜன்-3ஏ,பி,2சி,எஸ். கு.தர்மிசன்-3ஏ,3பி,2சி,எஸ். ஜெ.சிவந்துஜன்-3ஏ,4பி,சி

## யாழ்.நாகர்கோவில் மகாவித்தியாலயம்

பி.ரனிஸ்ரலா -3-ஏ,4பி,சி,எஸ், ரி.கௌசிகா-2ஏ,3பி,2சி,2எஸ். எஸ்.ஹரிதாஸ்-2ஏ, 3சி, 2எஸ், எஸ்.நிறஞ்சனா ஏ, 3சி, 2எஸ். பி.சிந்துஜா-ஏ, 2சி, 3எஸ்

## மல்லாவி மத்திய கல்லூரி

ர.றஜிந்தன்-7ஏ,பி,எஸ், பி.பிரவீனா-3ஏ,2பி,3சி,ஏ.சஜீரினா-3ஏ,பி,சி,4எஸ்

(17,160)

# புதிய ஆசிரிய ஆலோசகர் சேவையை நூறு நாள் திட்டத்தில் அமுல் படுத்துக

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அரசின் 100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் கல்வியமைச்சு புதிய ஆசிரிய ஆலோசகர் சேவையை அமுல்படுத்த வேண்டும். அத்துடன் கடந்த நவம்பரில் கல்வியமைச்சில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய கடமை நிறைவேற்று உதவிக் கல்விப் பணிப்பாளர்களை நிரந்தரமாக்க வேண்டும்.

இவ்வாறான கோரிக்கையை கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் வி.இராதாகிருஸ்ணன் ஆகியோரிடம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் விடுத்துள்ளது.

சங்கத்தலைவர் வி.ரி.சகாதேவராஜா, பொதுச்செயலாளர் சரா.புவனேஸ்வரன் ஆகியோர் ஒப்பமிட்டு அனுப்பிய கோரிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

கல்விப்புலத்தில் பொதுவாக நிலவுகின்ற குறைபாடுகள் பிரச்சினைகள் தொடர்பாக தங்களை கல்வியமைச்சில் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியிருந்தோம். இதுவரை அதில் போதுமான முன்னேற்றம் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை.

குறிப்பாக நீண்டகாலமாக இழுபறிநிலையிலிருந்து வரும் ஆசிரியஆலோசகர் சேவையை அமுலாக்குவதில் தாமதம் ஏன் காட்டப்படுகிறதென்று விளங்கவில்லை. அண்மையில் இதுதொடர்பாக அவர்கள் நாடு தழுவியரீதியில் ஒருநாள் பகிஷ்கரிப்பை செய்தனர். எனவே புதுவருடத்திற்கு முன்பாக அச்சேவையை அமுலுக்கு கொண்டு வர வேண்டும்.

அதுபோல கடந்த 15வருடங்களுக்கு மேலாக உதவிக்கல்விப் பணிப்பாளர்களாக சேவையாற்றியவர்களை நிரந்தரமாக்க பலதடவைகள் முயற்சித்தும் இழுபறியாகியது.

100 நாள் வேலைத் திட்டத்திற்குள் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் தகுதியானோரை தெரிவு செய்து புதுவருடத்திற்கு முன்பாக நிரந்தரமாக்க நடவடிக்கை எடுங்கள்.

நாடுபூராக வெற்றிடம் நிலவுகிறது. கிழக்கில் நிலவும் கல்விநிருவாக சேவை வெற்றிடம் தொடர்பில் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஊடக அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

கடந்தகாலங்களில் இவ்விதம் ஓரிரு வருடங்கள் கடமையாற்றியவர்களை இ.க.நி.சேவைக்கு உள்ளீர்த்து நிரந்தரமாக்கியமை ஒன்றும் தெரியாதவிடயமல்ல. ஆனால் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக உதவிக் கல்விப் பணிப்பாளர்களாக கடமையாற்றி வருவோரை இவ்விதம் அரசாங்கம் ஏமாற்றி அலைக்கழித்து வருவது அவர்களது சேவையை கொச்சைப்படுத்துவதற்கு ஒப்பானதாகும்.

ஆசிரியர்கள் அதிபர்களுக்கான விடுமுறை போன்ற பல சலுகைகளையும் வழங்காது கல்வி நிருவாக சேவைக்குரிய முழு வேலைகளையும் வாங்கிவிட்டு இப்படி இழுத்தடிப்பது நல்லாட்சிக்கு இலக்கணமாகாது. எந்தவொரு பிரிவினருக்கும் அநீதி இழைக்கப்படலாகாது.

ஒன்றில் அவர்களை நிரந்தரமாக்க வேண்டும். அல்லது அதற்கான காரணத்தைச் சொல்லி நீதிதேட அனுப்புங்கள்.

இன்னும் அதிபர் ஆசிரியர்களை புதிய பிரமாணக்குறிப்பின் படி உள்வாங்கும் செயற்பாடுகள் நடைபெற்று முடியவில்லை. பல பிரச்சினைகள் அப்படியே கிடப்பிலுள்ளன. ஒரு மாதத்திற்கொரு தடவை சந்திப்பதென்று கூறப்பட்டது. இரு மாதங்கள் கடந்து விட்டன.

கல்வியில் அரசியல் தலையீடு இருக்கமாட்டாதென்று கூறப்பட்டது. ஆனால் அன்று பல மாகாணங்களில் பெரும்பாலான விடயங்களில் அரசியல் தலையீடு நிலவுகின்றது. தேவையானால் நிரூபிக்கத் தயாராகவிருக்கின்றோம்.

சாதாரண அதிபர் நியமனம் ஆசிரியர் இடமாற்றம் போன்ற விடயங்களில் தலையீடு நிலவுகின்றன. அவையெல்லாம் நிறுத்தப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரியில் தற்போது வெளியான க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களை முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி உதயராணி முனீஸ்வரன் கடந்த செவ்வாய்க்கிழமை கல்லூரிக்கு நேரில்சென்று பாராட்டி வாழ்த்தினார். (160)

# கிளிநொச்சி ம.வி.முன்னிலைபெற அர்ப்பணமான சேவையே காரணம்

## அதிபர் பங்கயச் செல்வன் புகழாரம்

மாணவர்களின் விடாமுயற்சியும், ஆசிரியர்களின் அர்ப்பணமான கற்பித்தல் செயற்பாடுகளுமே கிளிநொச்சி மாவட்டத்தில் சாதாரணதரப் பரீட்சையில் தமது பாடசாலை முதல்நிலை வகிப்பதற்கு காரணமென, கிளிநொச்சி மகா வித்தியாலய அதிபர் அரசரட்ணம் பங்கயச்செல்வன் தெரிவித்தார்.

காலைநேர வகுப்புகள், மாலைநேர வகுப்புகள் மற்றும் மேலதிக வகுப்புகள் என்பன மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கு காரணமாக அமைந்ததாகக் குறிப்பிட்ட கிளிநொச்சி மகா வித்தியாலய அதிபர் அ.பங்கயச்செல்வன்,

உள்ளூர் மற்றும் வெளியூர் ஆசிரியர்கள் போக்குவரத்து சிரமங்களையும் பாராது மாணவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்க வேண்டும் என்கின்ற நோக்கில் கற்பித்தல் செயற்பாடுகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டதாகக் கூறினார். முதன்நிலைப் பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கள் தனியே கல்வியுடன் மட்டும் நின்றுவிடாமல், விளையாட்டிலும் ஈடுபட்டு சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர்.

எனவே, கிளிநொச்சி மாவட்டத்தில் தமது பாடசாலை முதல் நிலைக்கு வந்தமைக்கு அயராது பாடுபட்ட ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு தமது வாழ்த்துக்களைக் கூறிக் கொள்வதாகவும், கிளிநொச்சி மகாவித்தியாலய அதிபர் அரசரட்ணம் பங்கயச்செல்வன் தெரிவித்தார்.

# உலக நாடக விழா

**உலக நாடக தினம் 2015 ஐ முன்னிட்டு மார்ச் 27இல் கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத் துறையில் நீலாவணனது அரங்கப் பணி பற்றிய உரைகளும் உரையாடல்களும் நிகழ்த்தப்பட்டன.**

**துறைத் தலைவர் கலாநிதி வ. இன்பமோகன் தலைமையில் கு. ரவிச்சந்திரன், பா. மோகனதாஸன் ஆகியோர் உரைகளை நிகழ்த்தினர். சு. சந்திரகுமாரின் தொகுப்புரையுடனும், திருமதி. நிலுஜா ஜெகநாதனின் நன்றியுரையுடனும் நடைபெற்ற நிகழ்ச்சி கலாநிதி சி. ஜெயசங்கரது ஆற்றுப்படுத்தலில் கலந்துரையாடலாக முன்னெடுக்கப்பட்டு நிறைவு பெற்றது.**

நவீன அரங்க பாரம்பரியங்களோடு மேற்கிளம்பும் நீலாவணன் அவர்களின் பங்களிப்புக்களை உரையாடுவதாகவே கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை ஏற்பாடு செய்த நிகழ்வு அமைந்திருந்தது. மற்ற எல்லாக் கலைகளையும் விட மனிதப் பண்பியல்களை வெளிக்கொணரும் நாடகக் கலை சர்வதேச தினமாக கொண்டாடப்படும் இந்நாட்களில் நீலாவணனை கொண்டாடுவது மன நிறைவைத் தருவது.

பெரிதும் கவிஞராகவே அறியப்பட்ட நீலாவணனின் நாடகத்துறை பேசப்படவில்லை என்பதை விட நமது கல்வித்துறை பாரம்பரியமும் நவீன ஆய்வு முறைகளும் தொழில் சார்ந்த ஒன்றுக்கு தகுதிப்படுத்த துணை போவதாலும் நமது சூழலில் மறக்கப்படுவது சாத்தியமானதே.

இன நல்லுறவு பற்றியும் கூடி வாழல் தொடர்பாகவும் தேர்தல் காலங்களில் கதையாடப்படும் ஒன்றாக மாறிவிட்ட இக்காலத்தில் இன நல்லுறவை வலுப்படுத்தும் சாட்சியமாக நீலாவணனின் இக்கால நாடக முயற்சிகள் அமைந்திருப்பது வியப்பைத் தருகிறது. ஏறத்தாழ அரைநூற்றாண்டிற்கு முன்பிருந்த கலை ஊடாட்டங்கள் இன்றில்லாமல் போனதற்கான வரலாற்றுக் காரணங்களை தேடியாக வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துகின்றன.

நீலாவணனின் பாசறையில் வளர்ந்தவரும் அவர்களின் தோழர்களில் ஒருவருமான கவிஞர் மு.சடாட்சரம் அவர்கள் இந்நிகழ்வில் நீலாவணனின் நாடக நினைவுகளை இரை மீட்டினார். 50களுக்குப் பின்னரான கிழக்கு மக்களின் நவீன நாடகங்கள் குறித்து விரிவான ஆய்வுகளை மேற்கொண்டு வரும் விரிவுரையாளர் கு.ரவிச்சந்திரன் நீலாவணனின் பா நாடகங்களைப் பற்றிய நுட்பமான பார்வைகளை முன்வைத்தார். கிரேக்க, சமஸ்கிருத, ஆசிய பாரம்பரிய நாடக முறைமைகளையும் உத்திகளையும் உட்கொண்டு செரித்தவராகவே அவரது நாடகங்கள் மிளிர்கின்றன என ரவிச்சந்திரன் குறிப்பிட்டார்.

நாடக பிரதியாக்கம், நடிகர் தெரிவு, ஒத்திகை, பயிற்சி, ஒப்பனை பாரம்பரிய கூத்தரங்கின் . அரங்கியற் கூறுகள் அனைத்தையும் கொண்டவையாகவே நீலாவணனின் நாடகங்கள் அமைந்துள்ளன. வெகுஜன மக்களை ஈர்க்கக் கூடியதாகவும் மோடிப்படுத்தப்பட்டதாகவும் இவரது நாடகங்கள் உள்ளன. மொத்தத்தில் அனைத்தையும் உட்கொண்ட அரங்க முறைமையை நீலாவணன் 60களிலேயே கிழக்குச் சூழலிலே உருவாக்கி காட்டியுள்ளார்.



மழைக்கை, சிலம்பு, துணை, மனக்கண் ஆகிய நடாகங்கள் தொகுக்கப்பட்டுள்ளதோடு இன்றுவரை சிலாகிக்கவும் படுகின்றன. நீலாவணனின் நாடகங்களில் பங்கேற்று நடித்தவர்கள் இன்றும் உயிர் வாழ்வதாகவும் அவர்கள் அனைவரையும் இணைத்து மீண்டும் அந்நாடகங்களை மீளுருவாக்கம் செய்து அதில் நடித்தவர்கள் மற்றவர்களும் பார்த்து ஆய்வை மேலும் ஆழமாக பதிவு செய்ய வேண்டும் எனவும் ரவிச்சந்திரன் தனது ஆய்வுரையில் குறிப்பிட்டார்.

நீலாவணனின் குடும்பப் பின்புலம், அவரது ஏனைய துறை பங்களிப்புகள், அவரது காலத்து ஆளுமைகள், அரசியல் ஈடுபாடு போன்ற பல தகவல்களை எழுத்தாளர் மோகனதாஸ் வழங்கினார். வேளாண்மை, ஒட்டுறவு. நீலாவணன் காவியம், ஒத்திகை, நீலாவணன் பா நாடகங்கள் போன்றவை பதிப்புப் பெற்ற நூல்களாகும். பதிப்புப் பெறாமலும் பல பிரதிகள் உள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். நீலாவணனின் இதழியல் செயற்பாடு குறித்தும் பேசப்பட்டது. வீ.சி.கந்தையா, பூபாலப்பிள்ளை போன்றவர்களிடம் பயின்ற நீலாவணன் தன்னுடைய நாடக முயற்சிகள் வாயிலாகவும் எழுத்தாளர் சங்க உறவினூடாகவும் பல இளந்தலைமுறையினரையும் உருவாக்கி விட்டுச் சென்றுள்ளார்.

ஒடுக்கப்பட்ட விளிம்புக்குத் தள்ளப்பட்ட மக்களின் குரலாகவே நீலாவணனின் கவிதைகுரலும் அரங்க வெளிப்பாடும் அமைந்துள்ளது. எம்.ஏ.நு·.மான், மருதூர் கொத்தன், மருதூர் கனி, மு.சடாட்சரம் போன்றோர் மழைக்கை நாடகத்தில் நடித்து அதற்குச் சிறப்பு சேர்த்துள்ளனர். வி.ஆனந்தன், பாலமுனை பாரூக், முல்லை போன்றோர் நீலாவணனின் பாசறையில் வளர்ந்து பிற்காலத்தில் இலக்கியத்திலும் சமூக செயற்பாட்டிலும் பிரகாசித்தவர்களாவர்.

நீலாவணன் வேகமாக செயற்படுபவர். அவரது வேகத்திற்கு யாரும் ஈடுகொடுக்க முடியாது என்று நீலாவணனின் பாடும் மீன் இதழின் மற்றைய செயற்பாட்டாளரான மு.சடாட்சரம் தனது அனுபவ பகிர்வில் குறிப்பிட்டார். மழைக்கை நாடகத்தில் தான் நடித்த தருணங்களை நினைவுபடுத்தினார். பல்வேறு சமூக நெருக்கடிகள் துரை மற்றும் போடிமாரின் அதிகார கெடுபிடிகளுக்கு மத்தியில் ஒரு சமூக செயற்பாட்டாளராக நீலாவணன் தனது அரங்கியலை முன்னெடுத்தமை சாதனை என்றே நினைக்கத் தோன்றுகின்றது. அரங்கியல் துறையில் பேசாப் பொருளாக ஆக்கப்பட்டிருந்த நீலாவணனின் அரங்கச் செயற்பாடுகளை இன்றைய உலக நாடக தினத்தில் இணைத்துக் கொண்டு பயணிக்கும் கலாநிதி சி.ஜெயசங்கர் அவர்களின் பணி மகிழ்ச்சி தருகிறது.

**- ஏ.பி.எம். இத்ரீஸ்**

# முடிவை மாற்றும் தந்திரம்!

காஷ்மீருக்கு ராணுவத்தை அனுப்பியதை காந்தியே ஒத்துக் கொண்டார். கடைசிவரை காஷ்மீர் மகாராஜா சுதந்திரமாக இருக்கவே முயற்சி செய்தார். இந்தியாவுடனும் சேர விரும்பவில்லை. பாகிஸ்தானுடனும் சேர விரும்பவில்லை. நாம் சும்மா இருந்திருந்தால் காஷ்மீர் பாகிஸ்தானுக்குத்தான் போயிருக்கும். ஜம்முதான் நமக்கு வந்திருக்கும்.

பௌத்தர்களின் லடாக்கை திபெத்திற்குக் கொடுக்க வேண்டியதாகியிருக்கும்.

ஜின்னா அவசரப்பட்டு ராணுவத்தை சிவில் உடையில் அனுப்பிக் காஷ்மீரைப் பிடிக்கத் திட்டமிட்டார். அப்போதுதான் காஷ்மீர் மகாராஜா இந்தியாவுடன் சேருகிறேன் என்று காங்கிரசிடம் கையெழுத்திட்டார். பிறகுதான் இந்திய விமானங்கள் ரராணுவத்தினரைக் கொண்டு போய்க் காஷ்மீரில் இறக்கி பாகிஸ்தான் ராணுவத்தினரை ஒரு பகுதியிலிருந்து விரட்டி அடித்தன.



பாகிஸ்தானில் இருந்த ராணுவத் தளபதி ஒரு வெள்ளைக்காரன். இந்தியாவில் அப்போது ராணுவத் தளபதி கரியப்பா. லெப்டினன்ட் கமாண்டர் ஜெனரல் திம்மையா போர்க்களத்தில் இருந்தார். பாகிஸ்தானியர்களைத் துரத்தியடித்தவர் திம்மையாதான். ஆதனால்தான் காஷ்மீரின் ஒரு பகுதி இன்னும் இந்தியாவிடம் இருக்கிறது.

இந்தியாவில் அப்போது கவர்னர் ஜெனரலாக இருந்த மவுன்ட் பேட்டன் தன்னுடைய வெள்ளைக்கார கமாண்டர் தோற்றுப் போவதை விரும்பவில்லை. அதற்காக நேருவைச் சரிசெய்து ஐ.நா.விற்குக் காஷ்மீர்ப் பிரச்சினையைக் கொண்டு செல்லத் தந்திரமாக ஏற்பாடு செய்து விட்டார்! உடனே நேரு தளபதி திம்மையாவைப் போனில் கூப்பிட்டுப் போரை நிறுத்தச் சொன்னார்.. தளபதி திம்மையா பாகிஸ்தான் ராணுவத்தை அடித்துத் துரத்த ஒருவாரம்தான் அவகாசம் கேட்டார். நேருவோ முடியாது, உடனே போரை நிறுத்து என்று உத்தரவிட்டார்.

மீண்டும் 3 நாள்களாவது கொடுங்கள் என்று திம்மையா கேட்டார். அதற்கும் பிரதமர் நேரு சம்மதிக்கவில்லை.

நேரு தொலைபேசியில் பேசியதை யுத்தத்தின் சத்தத்தில் சரிவரக் கேட்கவில்லை என்று சமாளித்துக்கொண்டு, பாகிஸ்தான் ராணுவத்தை திம்மையா விரட்டி அடித்திருக்க வேண்டும். கடற்படைத் தளபதி நெல்சன் இப்படித்தான் செய்தார்.

பிரிட்டிஷ் கடற்படைத் தளபதி நெல்சனுக்கு ஒரு கண் பார்வைக் குறைவுடையது. அவருடைய உயர் அதிகாரி படையைப் பின்வாங்குமாறு நெல்சனுக்கு உத்தரவிட்டார். அப்போது யுத்தம் உக்கிரமாக நடந்து கொண்டிருந்தது. அந்தக் காலத்தில் கப்பல் தளத்திலிருந்து கொடிகளை அசைத்து அதன் சமிக்ஞைகள் மூலம்தான் செய்திகளைத் தெரிவிப்பது வழக்கம்.

டெலஸ்கோப் மூலமாகப் பார்த்து இந்த சமிக்ஞைகளைப் புரிந்துகொள்ள வேண்டும்.

படையை வாபஸ் வாங்குமாறு வந்த உத்தரவை நெல்சன் தனது குறைபாடுடைய கண் மூலமாக டெலஸ்கோப்பில் பார்த்துவிட்டு, வாபஸ் வாங்கும் உத்தரவுக்கான சமிக்ஞை தனக்கு வரவில்லை என்று தனக்கு வசதியாகச் சொல்லிவிட்டு யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தி விட்டார்.

இதேபோல் காஷ்மீரில் சண்டை செய்து கொண்டிருந்த திம்மையாவும் தொலைபேசிப் பேச்சு யுத்த இரைச்சலில் சரியாகக் கேட்கவில்லை என்று சொல்லிவிட்டு யுத்தத்தைத் தொடர்ந்திருந்தால் முழுக் காஷ்மீரும் இந்தியா வசம் வந்திருக்கும்.

"பலாத்காரம்" பற்றிய காந்தியின் கருத்தை அந்தந்த சூழ்நிலைக்கு ஏற்பத்தான் பரிசீலிக்க வேண்டும்.

**('அருட்செல்வருடன் நேர்காணல்கள்' என்ற நூலில் நா.மகாலிங்கம்)**

# மூட்டு வலிக்கு முடக்கத்தான் கீரை!



❁ இது வேலிகளில் காட்டுச் செடியாக வளர்ந்து கிடக்கும் ஒரு வகை கீரை.

❁ இலை துவர்ப்புச் சுவையுடையது.

❁ இதனை எண்ணெய்யில் வதக்கி மிளகாயும், உப்பும் சேர்த்து துவையல் செய்து உணவில் சேர்த்துச் சாப்பிட சுவையாக இருக்கும்.

❁ கீரையை சிறிது சிறிதாக நறுக்கி வெங்காயம் அதிகமாகச் சேர்த்து வறை செய்தும் சாப்பிடலாம்

❁ துவரம் பருப்பு, பாசிப் பருப்பு மற்றும் வேறு பருப்புகளுடன் இந்தக் கீரையைச் சேர்த்து எண்ணெயில் வதக்கியும் சாப்பிடலாம். மூட்டு வலி, கை - கால் வலி, முதுகு வலி, உடல்வலி ஆகிய அனைத்து வலிகளும் அகலும்.

❁ முடக்கத்தான் கீரையுடன் வெல்லம் சேர்த்து, நெய்யில் வதக்கி உட் கொண்டால் கண் சம்பந்தப்பட்ட நோய்கள் தீரும்.

❁ இக்கீரையின் சாற்றைக் காதில் விட்டால், காது வலி நிற்கும்.

❁ கட்டிகளில் வைத்துக் கட்டினால், அவை உடைந்து புண் ஆறும்.

❁ தோசை மாவுடன் கலந்து தோசை செய்து சாப்பிட்டால் வாயுத் தொல்லை நீங்கும்.

❁ பெண்களின் மாதவிடாய் தொடர்பான பிரச்சினைகளுக்கு இந்தக் கீரையின் சாறு ஒரு மேசைக் கரண்டி போதும்.

# அமெரிக்காவின் எதிர்ப்பையும் மீறி ஆசிய வங்கியில் இணையும் நாடுகள்....!!




சீனா தலைமையில் உருவாக்கப்படும் புதிய ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியில், பல்வேறு அமெரிக்க ஆதரவு நாடுகளும் இணைந்து வருகின்றன. இதனால் அமெரிக்கா அதிர்ச்சியில் ஆழ்ந்திருக்கிறது., உலக வங்கியின் ஆதிக்கத்தை குறைக்கும் வகையில் சீனா தலைமையில் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (ஏ.ஐ.ஐ.பி) உருவாக்கப்பட்டு வருகிறது. சீனா தலைமையில் உருவாகும் இந்த வங்கியில் ஆசிய வங்கியின் உறுப்பு நாடுகள் அனைத்தும் இணைந்து வருகின்றன.

இதன் மூலம் எதிர்காலத்தில் உலகவங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு நிதியை பெற வேண்டும் என்ற முறை தகர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் மேற்கத்திய நாடுகளின் ஆதிக்கமின்றி ஆசிய நாடுகள் எளிதாக நிதிகளை பெற்று முன்னேற முடியும் என்ற நிலை உருவாக்கப்பட்டு வருகிறது.

சீனாவின் தலைமையில் உருவாக்கப்படும் இந்த ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் ஸ்தாபக உறுப்பினர்களாகும் ஒப்பந்தத்தில் இந்தியா, தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ், பாகிஸ்தான், வங்கதேசம், புருனே, கம்போடியா, கஜகஸ்தான், குவைத், லாவோஸ், மியான்மர், மங்கோலியா, நேபாளம், ஓமன், கத்தார், இலங்கை, உஸ்பெகிஸ்தான் மற்றும் வியட்நாம் ஆகிய 21 ஆசிய நாடுகள் கையெழுத்திட்டிருக்கின்றன.

முன்னாள் ஆசிய வளர்ச்சி வங்கியின் துணைத் தலைவரும், சீனாவின் துணை நிதியமைச்சருமான இன்லிகுன், ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த வங்கியில் தற்போது ஆசிய பிராந்தியத்தில் உள்ள ரஷ்யா உள்ளிட்டு 31 நாடுகள் உறுப்பினர்களாகி உள்ளன. இவை தவிர்த்து அமெரிக்காவின் ஆதரவு நாடுகள் மற்றும் மேற்கத்திய நாடுகள் இந்த வங்கியில் இணைவதற்கு தொடர்ந்து ஆர்வம் தெரிவித்து வந்தன.

அதனைத் தொடர்ந்து அவுஸ்திரேலியா, ஆஸ்திரியா, டென்மார்க், பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, லக்சம்பெர்க், நெதர்லாந்து, ஸ்பெயின், நியூசிலாந்து, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகள் உறுப்பினர்களாக இணைய விருப்பம் தெரிவித்து விண்ணப்பித்திருக்கின்றன. இதே போல் பிரேசிலும் உறுப்பினராக விருப்பம் தெரிவித்து விண்ணப்பித்திருக்கிறது. முன்னதாக, கடந்த வருடம் அக்ரோபர் மாதம், ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியில் உறுப்பு நாடாக இணைவதை அவுஸ்திரேலியா புறக்கணித்தது. ஆனால் வங்கியின் வளர்ச்சிப் போக்கினை கண்டு, தாங்கள் மட்டும் புறக்கணிக்கப்பட்டு விடுவோமோ என்ற அச்சத்தில் தற்போது விண்ணப்பித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் வளர்ச்சியை கண்டு தற்போது, அமெரிக்கா ஆத்திரத்தில் இருந்து வருகிறது. அதன் வெளிப்பாடாக சீனா தலைமையிலான வங்கி, சர்வதேச அதிகார பிரச்சினையில் முரண்பாட்டை ஏற்படுத்தும், ஊழல் மற்றும் நிர்வாக முறைகேடுகள் ஏற்படலாம் என தனது அவதூறுப் பிரசாரத்தை தற்போதே அமெரிக்கா துவக்கியிருக்கிறது. வங்கியை உருவாக்கும் உறுப்பு நாடுகள் பட்டியலில் பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி மற்றும் பிரித்தானிய நாடுகள் சில வாரங்களுக்கு முன் இணைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

(நன்றி: தீக்கதிர்)

# ஊரும் உலகமும்

## கட்சிக்காரரைக் கைவிட்டார் பண்டாரநாயக



1956 பொதுத் தேர்தலில் விவியன் குணவர்த்தன லங்கா சமசமாஜக் கட்சி வேட்பாளராக கொழும்பு வடக்குத் தொகுதியில் போட்டியிட்டார். அப்போது இத்தொகுதி கொட்டாஞ்சேனை, கொலொன்னாவ, தெமட்டகொட, பொரளை, கிராண்ட்பாஸ், கொச்சிக்கடை ஆகிய பகுதிகளை உள்ளடக்கியிருந்தது. எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயகவின் தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளராக டாக்டர் டபிள்யூ.டீ.சில்வாவும் அத்தொகுதியில் போட்டியிட்டார்.

சில்வாவுக்கு வெற்றிவாய்ப்பு இல்லையென்றும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான வாக்குகளை அவர் பிளவுபடுத்தி விடுவார் என்றும் கருதிய விவியன் பண்டாரநாயகவைச் சந்தித்து இதுபற்றிப் பேச முடிவு செய்தார்.

கொழும்பு வடக்கு வழமையாக ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சார்பான தொகுதி என்றும் நேரடிப் போட்டியில் தன்னால் வெற்றியீட்ட முடியும் என்றும் எதிரணி வாக்குகள் பிளவுபடுவது ஐக்கிய தேசியக் கட்சிக்கே வாய்ப்பாக அமையும் என்றும் விவியன் கூறியதை அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த பண்டாரநாயக "நீங்கள் உங்கள் பிரசாரத்தைச் செய்யுங்கள்; வேண்டியதை நான் செய்கிறேன்" என்று கூறி விவியனை அனுப்பி வைத்தார். பிரசார முடிவு திகதிக்கு இரண்டு தினங்கள் முன்னதாக இது நடந்தது.

சில்வா நான்கு இறுதிப் பிரசாரக் கூட்டங்களை ஏற்பாடு செய்திருந்தார். இரண்டு கூட்டங்களில் மாத்திரம் பேசிய பண்டாரநாயக ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராகப் போட்டியிடும் இரண்டு பிரதான வேட்பாளர்களில் வெற்றிவாய்ப்பு உள்ளவருக்கு வாக்களியுங்கள் எனக் கூறினார். அந்த உரை விவியனின் வெற்றிக்கு வழிவகுத்தது.

## செட்டியாருக்கு செங்கொடி கசந்தது



இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு கட்சியின் பிரசாரப் பாடல்களை இசைத்தட்டில் பதிவதற்குத் தீர்மானித்தது. கே.சீ.எஸ். அருணாசலம் பாடல்களை எழுதினார். எம்.பி.சீனிவாசன் இசையமைத்தார்.

பாடல்களை இசைத்தட்டில் பதிவு செய்யும் சரஸ்வதி ஸ்ரோர்ஸ் ஏ.வி. மெய்யப்பச் செட்டியாருக்குச் சொந்தமானது. ஒரு பாடலில் செங்கொடி என்ற வார்த்தை இருந்ததால் பாடல்களைப் பதிவு செய்யவேண்டாம் என்று செட்டியார் சொல்லிவிட்டார். பாடல்களை இசைத்தட்டில் பதிவு செய்யும் வேறெந்த நிறுவனமும் தமிழ் நாட்டில் அப்போது இல்லாததால் வேறு வழியின்றிச் செங்கொடி என்பதை நம்கொடி என்று மாற்றினார்கள்.

## சதுரி மாணிக்கம்

இந்தியாவின் இந்துக் கோவில்களில் தெய்வப்பணி செய்யவும் ஆடல், பாடல் நிகழ்த்தவும் நிரந்தரமாகத் தேவரடியார்கள் இருந்தனர். இவர்களில் இரு வகையினர் உண்டு. தெய்வப்பணி தெய்வத்திற்குத் தங்கள் செல்வங்களுடன் தங்களை அர்ப்பணிக்கும் செல்வந்தக் குடும்பப் பெண்கள் ஒரு வகையினர். மற்ற வகையினர் ஏழைப் பெண்கள். வறுமை நிலையிலுள்ள பெற்றோர் தங்கள் பெண்களைக் கோவில் பணிக்கு அர்ப்பணித்து அதற்குப் பிரதியுபகாரமாகப் பயிர் செய்வதற்கேற்ற காணிகளைப் பெற்றனர். இவை தேவரடியாரின் ஜீவிதம் எனப்பட்டன. தெய்வப் பணிக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு ஏழைத் தேவரடியாள் மாணிக்கம். ஆலயத்தில் நடனம் ஆடுவதால் சதுரி மாணிக்கம் என்று அழைத்தனர்.



தேவரடியார்களின் எண்ணிக்கை அதிகரித்தபோது ஆலயத்துக்குச் செலவும் அதிகரித்ததால் ஜீவிதமாகக் கொடுத்த காணிகளைத் திரும்பப் பெறுவதற்கு ஆலய நிர்வாகம் தீர்மானித்தது. தேவரடியார் குடும்பங்கள் இதற்கு எதிராகப் போராட்டம் நடாத்தியபோது அப்போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் சதுரி மாணிக்கம் கோவில் கோபுரத்தில் ஏறிக் கீழே விழுந்து தற்கொலை செய்தாள். ஜீவிதக் காணிகளைத் திரும்பப் பெறும் முடிவு கைவிடப்பட்டது.

# ஐ.தே.க. அரசின் மேற்கத்தைய சார்புக் கொள்கை நாட்டுக்கு கேடு விளைவிக்கும்!



நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதி முறைமை முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் லங்கா சமசமாஜக் கட்சி உறுதியான நிலைப்பாட்டில் உள்ளதாக அக்கட்சியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்திருக்கிறார். தேர்தல் முறைச் சீரமைப்பு சம்பந்தமாகவும் கட்சி தொடர்ந்தும் வலியுறுத்தும் என்றும் கூறியிருக்கிறார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்; நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை நாட்டை மிகப்பெரிய அளவுக்கு நாசம் செய்துள்ளது. அதை முற்றாக மாற்ற வேண்டும். அடுத்த பாராளுமன்றப் பொதுத் தேர்தல் தீர்க்கமான ஒன்றாகும். ஐக்கிய தேசியக் கட்சியை மக்கள் தெரிவு செய்தார்களானால், அது சர்வாதிகார ஆட்சி ஏற்பட வழிவகுக்கும். இதற்கு தாய்லாந்து, எகிப்து போன்ற நாடுகளில் வலதுசாரி இராணுவங்கள் நாட்டின் அதிகாரத்தை எடுத்துக் கொண்டதை உதாரணமாகக் கூறலாம்.

ரணில் விக்ரமசிங்க மேற்குலகின் சொற்படி செயற்படுகின்றார். ஐ.தே.கவின் "ஸ்ரீலங்காவின் மீள் எழுச்சி" என்பது மேற்குலகின் நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றும் திட்டமாகும். அது அமுல்படுத்தப்பட்டால், மக்கள் தமது சொந்தக் கிணறுகளிலிருந்தும், குளங்களிலிருந்தும் நீர் எடுப்பதற்கும் பணம் செலுத்த நிர்ப்பந்திக்கப்படுவார்கள். பல்தேசியக் கம்பனிகள் நாட்டுக்கு உதவுவதாகச் சொல்வது, நாட்டின் வளங்களை ஒட்ட உறுஞ்சுவதற்கே ஆகும்.

எனவே தற்போதைய ஐ.தே.க. அரசாங்கத்தின் மேற்கத்தைய சார்புக் கொள்கைகள் நாட்டுக்கு கேட்டையே விளைவிக்கும். முன்னைய ஆட்சியில் ஊழல், உறவினர்களுக்குச் சலுகைகள், வீண்விரயம், முறைகேடுகள் போன்றவை இருந்ததை நாம் ஏற்றுக் கொள்கிறோம். அந்தத் தவறுகளை நீக்கி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளை சமசமாஜக் கட்சி ஆதரிக்கும்.

தற்போதைய அரசாங்கம் தேசியப் பிரச்சினைகள் சம்பந்தமாக வாக்குறுதி அளித்த எவற்றையும் நிறைவேற்றும் அறிகுறிகளையே காணோம். ஐ.தே.க. சொல்லும் தேசிய அரசாங்கம் என்ற திட்டம் போலியானது. அதை எமது கட்சி எதிர்க்கின்றது. ஆக இரண்டாம் உலக யுத்த காலத்தில் பிரித்தானியாவில் வின்சன் சேர்ச்சில் தலைமையில் அமைக்கப்பட்ட தேசிய அரசாங்கத்தைத் தவிர, உலகில் வேறு எந்தவொரு நாட்டிலும் தேசிய அரசாங்கங்கள் வெற்றிகரமாகச் செயற்பட்டதாக வரலாறு இல்லை.

**- சமசமாஜக் கட்சி தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண**

# வன்னி மூலையில் ஒரு அதிசயக் கிராமம்

## மம்மில் என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க புனித காட்டுப் பூமியது

எமக்குத் தெரியாமலே எமக்கருகில் ஆயிரம் விடயங்கள் பரந்து கிடக்கலாம். அதை அறிந்தவர் கூறும் போது பலருக்கு அதிசயமாக இருக்கும் சிலருக்கு கட்டுக்கதையாக இருக்கும் வாருங்கள் இக் கிராமத்தை நோக்குவோம்.

**அமைவிடம்**

யாழ் - கண்டி வீதியில் மாங்குளம் சந்தியிலிருந்து ஒட்டுசுட்டான் போகும் பாதை வழியே சென்றால் 4 கிலோமீற்றரில் ஒலுமடுச் சந்தி வருகிறது. இதிலிருந்து வடக்கே பிரிந்து செல்லும் விமான ஓடு பாதைக்கான காட்டு வழிப்பாதை வழியே எட்டுக் கிலோ மீற்றர் புலுமலுச்சிநாத குளம் மற்றும் அம்பகாமம் போன்ற காட்டுக் கிராமங்களைக் கடந்து சென்றால் நாம் அடையும் இடம் தான் மம்மில் என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க அதிசயக் கிராமமாகும். போரின் முன்னர் 155 குடும்பங்கள் இருந்த இவ்விடத்தில் தற்போது 115 குடும்பங்கள் வாழ்கின்றன.



**சிறப்பு**

இவ்வூரின் சிறப்புக்குக் காரணம் அங்கிருக்கும் பிள்ளையார் ஆலயமாகும். அப்பிள்ளையாரின் பெயர் தான் மம்மில் என்பதாகும். இவ் ஆலய வாசலால் தான பழைய யாழ் - கண்டி வீதி அமைந்திருந்தமை வரலாற்று உண்மையாகும். கண்டியின் ராஜசிங்கன் மற்றும் சங்கிலியனுக்கான தொடர்பாடல் பாதையாக இருந்தது இதன் வாசலாகும். இப்பாதையானது காட்டு வழியே கரிப்பட்ட முறிப்பை (கரிபட்ட முறிப்பு - கரி என்பது யானையாகும்) சென்றடைந்து கனகராயன் குளத்தைச் சென்றடைந்து இப்போதைய கண்டி வீதியுடன் இணைகிறது. இப்போது புதிய கண்டி வீதியில் செல்வோர் முறிகண்டிப் பிள்ளையாரை (முறிகண்டிப்பிள்ளையார்) வணங்கிச் செல்வது போல் பண்டைய காலத்தில் மம்மிலாரை வணங்கியே செல்வார்கள்.

**ஊரின் சிறப்பு**

இவ்வூர் மக்கள் வாழ்ந்த வாழ்க்கை முறையானது ஒரு சமூகத்துக்கு மிக மிக எடுத்துக்காட்டானது. ஆனால் நாகரிக உட்புகுத்தலாலும் வழிகாட்டியாக இருந்த பெரியவர் மறைந்ததன் காரணமாகவும் ஒரு சில மாற்றங்கள் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை முறை வித்தியாசமானது. இந்த ஊருக்கென்று ஒரு வைத்தியசாலை இதுவரை இருந்ததில்லை. இளைய சமுதாயம் நோய்கள் சார்ந்த விடயங்களுக்காக வைத்தியசாலை சென்றாலும் வயோதிபர்கள் யாருமே வைத்தியசாலை சென்றதில்லை. ஒரு வயோதிபர் குறிப்பிடும் போது சொன்னார் 'தடிமன் காய்ச்சலைத் தவிர வேறு வருத்தம் வந்ததாக தனக்கு நினைவில்லையாம்'

இவர்களது உணவுமுறையே இதற்குக்காரணமாக இருந திருக்கலாம். 3 நேரமும் சோறு தான் சாப்பிட்டார்கள். விசேட நாட்களில் எம் வீடுகளில் விதம் விதமான பலகாரம் சுடுவது போலத் தான் விசேட நாட்களில் அங்கே பிட்டு, தோசை போன்ற உணவுகள் சமைக்கப்படும்.

பொருட்களை பண்டமாற்று முறையிலேயே மாற்றிக் கொள்வார்கள். உங்கள் வீட்டுத் தோட்டத்தில் உள்ள மிளகாயை பக்கத்து வீட்டுக்காரருக்குக் கொடுத்



தால் அவர் உங்களுக்கு தன் தோட்டத்தில் இருந்து வெங்காயம் கொடுப்பார்.

அதே போல வயல் வேலைகளுக்கு முன்னரே திட்டமிட்டபடி ஒவ்வொருவரது வயலுக்கும் மற்றவர் மாறி மாறிப் போய் உதவுவார்கள். அதனால் கூலியாளோ பணமோ அவர்களில் தாக்கம் செலுத்துவதில்லை.

அதை விட முக்கியமாக இன்னொரு பழக்கம் இவர்களில் இருக்கிறது. ஒரு வீட்டில் மரண நிகழ்வு நடந்து விட்டால் ஒரு மாட்டு வண்டிலில் சென்று ஒவ்வொரு வீடாக உணவுப் பொருட்களை சேகரிப்பார்கள் சேர்த்த பொருட்களை அவ்வீட்டுக்குக் கொண்டு சென்று ஒரு மாதம் வரை மாறி மாறி நின்று அவர்களே சமைத்துக் கொடுப்பார்கள்.

5 ஆம் தரம் வரை அமைந்த பாடசாலை இருந்தாலும் உயர்தரத்திற்காக 14 கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் மாங்குளம் பாடசாலைக்கு செல்வார்கள். ஆனால் இங்கிருந்தும் 4 மாணவருக்கு மேல் பல்கலைக்கழகம் தெரிவானமை ஒரு சிறப்பான விடயமாகும்.

இந்தளவு கட்டுக் கோப்பான ஒழுக்கமுறை எந்த மன்னனால் எப்படி உருவானது என்ற கேள்வி எல்லோர் மனதிலும் எழக் கூடும்.

**காரணம் யார்?**

அக்கிராமத்தில் அமைந்திருக்கும் மம்மில் பிள்ளை யார் என்ற நாயகனே இத்தனைக்கும் காரணம்.

சாதாரணமாக நாம் கல் தடக்கினால் கூட அம்மா என்று தான் கத்துவோம் ஆனால் அங்கிருப்பவர்கள் கல் தடக்கினாலும் மம்மிலாரே என்று தான் சொல்வார்கள். அந்தளவுக்கு அவர் மீது நம்பிக்கை. இவ்வாலயத்தில் பெரும் திருவிழாவாக சித்திராப் பௌர்ணமி கொண்டாடப்படுகிறது. அதற்கடுத்ததாக ஆவணிச் சதுர்த்தி கொண்டாடப்படும்.

இன்றும் கூட பாம்பு கடித்து நுரை வருபவரைக் கூட வைத்தியசாலை கொண்டு செல்வதில்லை. ஆலயத்தில் கொண்டு வந்து வீபூதி போட்டு விட்டு ஆளை அங்கேயே வைத்திருப்பார்கள். அவர் எழுந்ததும் ஒரு பொங்கல் போட்டு விட்டுச் செல்ல வேண்டியது தான்.

மாங்குளம் சூழலில் இருக்கும் இராணுவத்தளபதியிலிருந்து ஒவ்வொரு இராணுவ வீரனுக்குமே அவர் மேல் மிகுந்த பயம்.

8 கிலோமீற்றருக்கு நடுக்காட்டு வழியாகச்செல்லும் அப்பயணத்தில் இராணுவம் மறித்தால் மம்மில் போகிறேன என்று சொன்னால் போதும் ஒரு பரிசோதனை கூட இருக்காது. இத்தனைக்கும் என்ன காரணம். மக்கள் மீளக்குடியமர்த்தப்படுவதற்கு முன்னர் இராணுவ



வீரர்கள் சிலர் இராணுவ சீருடையுடன் கோவல் மரத்தில பூ பிடுங்கச் சென்றிருக்கிறார்கள். கோவிலிலிருந்து 9 பேருக்கு பாம்பு கடித்ததாம். ஆனால் யாருக்குமே எதுவுமே நடக்கவில்லை.

இவ்வூரில் உங்களுக்கு களவு ஏதாவது போய் விட்டால் ஒவ்வொரு வெள்ளியும் மக்கள் கூடும் நேரம் தொலைத்தவர் கோவிலுக்குவாசுகி செல்வாராம் 'மம்மிலாரிடம கட்டப் போகிறேன்' என்பார். இப்படி ஒரு ஊசி தொலைந்தால் கூட மம்மிலாரிடம் முறையிட்டால் களவெடுத் தவருக்கு மரணம் தான் என்பது அவர்களது நம்பிக்கை. அப்படி களவெடுத்த பலர் திடீரென இறந்தும் இருக்கிறார்கள்.

சிறுத்தைகள் வசித்த பகுதியாகையால் பலர் தனியே சிறுத்தையிடம் மாட்டுப்பட்டிருக்கிறார்கள். அப்போது 'மம்மிலாரே காப்பாற்றும்' என்றால் சரியாம் அப்படிச்சொல்லி சிறுத்தை மற்றும் குழுவன் மாடு (மதம் பிடித்த யானை போன்றவை) போன்றவற்றிடம் இருந்து தப்பியவர்கள் இருக்கிறார்கள்.

1998இல் நடந்த ஜெயசிக்குறு போரால் இவ்வூரில் இருந்து மக்கள் இடம் பெயர்ந்தார்கள். அதன் பின்னர் இறுதி யுத்தத்தில் இடம் பெயர்ந்தார்கள். அந்த உக்கிர யுத்தத்தில் கூட இவ்வூரைச சேர்ந்த 4 பேர் தான் மரணித்திருக்கிறார்கள்.

**ஆலயத்தின் புதுமைகள்**

இவ் ஆலயமானது பல புதுமைகளைக் கொண்டிருந்தாலும் எனக்குத் தெரிந்த சிலதைப் பகிர்கின்றேன்.

1. யாழ்ப்பாணத்தில் பிரபலமான மகப்பேற்று மருத்துவர் பவானி அவர்களை பலருக்குத் தெரிந்திருக்கும். இவருடைய குழந்தை ஒன்று நரம்பியல் தொடர்பான பிரச்சினையால் பாதிக்கப்பட்டு 12 வயது வரை பேசவே இல்லை. அக் குழந்தையை அவர் இந்தியா போன்ற அந்நிய நாட்டுக்குக் கொண்டு சென்றும் குணமாகாத நிலையில் சக மருத்துவரான தர்மேந்திரா (முழங்காவில் வைத்தியசாலையில் நீண்டகாலம் பணியாற்றியவர்) அவர்கள் தனக்கு நடந்த அனுபவத்தைச் சொல்லியிருக்கிறார். அவருக்கு நீண்ட காலம் குழந்தை இல்லாமல் இருந்த போது அங்கே சென்று நேர்த்தி வைத்ததன் பின்னர் தான் குழந்தை பிறந்ததாம்.




இவரும் தனது குழந்தையை அங்கே கொண்டு சென்றிருக்கிறார். அங்கே இருக்கும் பூசகர் (பார்ப்பனியம் சார்ந்தவர்கள் அங்கு இல்லை) குழந்தைக்கு விபூதி இட்டு விட்டு 'குழந்தை மம்மில் என்று சொல்லு' என்றிருக்கிறார். பிறந்து 12 வருடம் பேசாத குழந்தை முதல் முதலாக மம்மில் என்ற சொல்லைக் கூறியதாம்.

2. என் இரு நண்பர்களுக்கு நடந்த கதையிது. இருவரும் வெற்றி பெற்றதால் பெயரை மறைக்க வேண்டிய தேவையில்லை. இன்று 3 பிள்ளைகளுடன் இருக்கும் வாசுகி மற்றும் கலைச் செல்வன் என்பதே அவர்கள் பெயர்களாகும்.

இதில் வாசுகி அக்கா நான் மருத்துவம் படிக்கும் போது என்னோடு தாதியியல் கற்றவர். அதே போல கலைச்செல்வன் அண்ணா நான் பயிற்சியில் நின்ற முள்ளியவளை மாஞ்சோலை வைத்தியசாலையில் வேலை செய்தவர். இருவரும் மச்சான் மச்சாள் முறை தான் ஆனால் அவரது விருப்பத்துக்கு வாசுகி அக்கா நீண்ட நாட்களாக சம்மதிக்கவில்லை. வாசுகி அக்காவுக்கு வெளிநாட்டு வரண் ஒன்று தயாராக அவர் வெளிநாடு செல்வதற்கான ஆயத்தங்கள் ஆரம்பமானது (முன்னர் கள்ளப் பாதையால் என்றாலும் வெளிநாடு போய் அங்கே திருமணம் செய்வார்கள்).

கலைச் செல்வன் அண்ணா மனம் தளராமல் மம்மிலுக்கு 6 செவ்வாய் தொடர்ந்து சைக்கிளில் சென்றிருக்கிறார். வாசுகி அக்காவுக்கு பாஸ்போட் அலுவல் எல்லாம் முடிந்து கிளம்புவதற்கான முழு ஆயத்தமும் தயார். (அவர் அப்பா கண்டிப்பானவர்). 7 ஆவது செவ்வாய் இவர் போய் வந்த பின்னர் மாலை தானாகச் சென்று கேட்டாராம் என்னை எங்கை யாவது கூட்டிக் கொண்டு போங்கள் என்று இன்றும அவாவைக் கேட்டால் சொல்லுவா 'சுதா நான் பொய் சொல்லேலை எனக்கே என்ன நடந்தது என்று தெரியாது' என்பார்.

இன்னும் பல புதுமைகள் இருந்தாலும் பதிவின் நீட்சி கருதி சுருக்கிக் கொள்கிறேன்.



# நேரக்கட்டுப்பாடின்றி பயணிக்கும் வவுனியா தனியார் பேருந்துகள்

## சிரமங்களை எதிர்நோக்கும் மக்கள்

வவுனியா தனியார் பேருந்து சங்கத்தினர் நேரக் கட்டுப் பாட்டை பின்பற்றாமையால் மக் கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

முல்லைத்தீவு தனியார் சங் கத்தின் பேருந்துகள் நெடுங் கேணி ஊடாக வவுனியா பேருந்து நிலையத்தை சென்றடைவதில் நேரக் கட்டுப்பாட்டை பின்பற் றாமையே இப்பிரச்சினைக்கு காரணமாக அமைகின்றது.

முல்லைத்தீவு தனியார் பேருந்து நிலையத்திலிருந்து புறப்படும் பேருந்துகள் நேரக் கட்டுப்பாட்டுடன் குறிப்பிட்ட நேரத்துக்கு புறப்படுகின்ற போதும் அவை நெடுங்கேணி தனியார் பேருந் நிலையத்தில் இருந்து வவுனியா நோக்கிப் புறப்படும் போது நேரககட்டுப்பாட்டைக் கடைப்பிடிப்ப தில்லை இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிா கொள்கின்றனர்.

இவ் விடயம் தொடர்பாக வவுனியா பேருந்து சங்கத்தலை வரைத்தொடர்பு கொண்டு கேட்ட போது இது தொடர்பாக தம்மால் எந்த வித நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை என பதில ளித்தார்.

நேரக் கட்டுப்பாடின்றி பேருந் துகள் புறப்படுவதால் பேருந்து கள் ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக் கொண்டு பயணம் செய் வதாகவும் இதனால் விபத்துக் கள் ஏற்படுவதற்கு ஏதுவாக அமை வதாகவும் தெரிவிக்கப்படுகின் றது.

அது மட்டுமன்றி நேரக் கட்டுப் பாடின்றி பேருந்துகள் புறப்படுவ தால் சரியான நேரத்தைக் கணிக்க முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். நேர அட்ட வணைக்கமைவாக பேருந்துகள் புறப்பட்டால் தமது செயற்பாடு களை இலகுவாக மேற்கொள்ள முடியும் எனவும் மக்கள் தெரி விக்கின்றனர்.

முல்லைத்தீவிலிருந்து பேருந்து புறப்படும் போது நேர அட்ட வணை கடைப்பிடிக்கப்படுவது போல் வவுனியா நெடுங்கேணி பேருந்து நிலையத்தில் இருந்து புறப்படும் போதும் நேரக் கணிப்பீடு கடைப்பிடிக்கப்படுவ தற்கு உரிய அதிகாரிகள் நடவ டிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள் ளனர். (40)

## மீளாய்வுக்கு விண்ணப்பிக்கலாம்

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் கடந்த திங்கட்கிழமை வெளியாகி இருந்தன.

பெறுபேறுகளில் திருப்தி இல்லாத மாணவர்கள் தமது பெறு பேறுகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்களை எதிர் வரும் 24 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு பரீட்சை கள் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது. பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கான பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பப்படிவம் பெறுபேற்றுப் பட்டியலுடன் இணைத்து அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும் தனியார் பரீட்சார்த்திகளுக்கான மாதிரி விண்ணப்பப் படிவம் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படவுள்ளதாகவும் பரீட்சைகள் திணைகளம் தெரிவித்துள்ளது.

# அழகககங்களின் சம்மேளனம் வடக்கில் அங்குரார்ப்பணம்

வடமாகாண அழகககங்களின் சம்மேளனம் கிளிநொச்சி மாவட் டத்தில் கடந்த 22ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்து வைக் கப்பட்டதாக யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கங்க ளின் ஒன்றியம் தெரிவித்துள் ளது.

இவ் அங்குரார்ப்பண நிகழ் வின் போது யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கங்களின் ஒன்றியத்திடம் விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைவாக 8கிளை சங்கங்களுடனும் கலந்து ஆலோசித்து சில தீர்மானங்களும மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களாக எல்லாக்கிளை களுக்கும் ஞாயிற்றுக்கிழமை வாராந்த விடுமுறை எனவும், திங் கள் முதல் வெள்ளிவரையும் காலை 7.மணிமுதல் இரவு 9 மணிவரையும் திறக்கப்பட வேண் டும் எனவும் இதனைவிட சனிக் கிழமைகளில் மாத்திரம் காலை 7 மணி தொடக்கம் இரவுவரை நீடிக்கப்பட்டுள்ளதாகவும் தீர்மா னிக்கப்பட்டது.

மேற்படி தீர்மானங்கள் சிகை ஒப்பனையாளர் சங்கங்களின் ஒன்றியத்தால் அமுல்படுத்தப்ப டும் இதனை மீறுவோருக்கு எதி ராக சட்டநடவடிக்கை எடுக்கப் படும் என யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கங்களின் ஒன்றியத் தலைவர் என். பிரபா கரன் தெரிவித்தார்.

# கம்பன் கோட்டத்தில் ‘வித்தகம்’ நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கம்பன் கழகம் நடாத்தும் வித்தகம் நிகழ்வு நாளை சனிக்கிழமை நல்லூர் கம்பன் கோட்டத்தில் இடம்பெறவுள்ளது. மாலை 5.30 மணிக்கு இடம்பெறும் இந்நிகழ்வில் யாழ். பல் கலைக்கழக ஓய்வு நிலை பேரா சிரியர் எஸ். சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறவுள் ளது.

இதன்போது சிந்தனை யரங்கு சிறப்புற இடம்பெறவுள் ளது.



யாழ். பல்கலையின் 4ஆம் வருட ஊடககற்கைகள் பிரிவு மா்ணவர்களின் ‘விசைச்சிறகுகள்’ சஞ்சிகை கடந்த செவ் வாய்க்கிழமை மாலை பல்கலைக்கழக கைலாசபதி கலையரங் கில் வெளியிட்டு வைக்கப்பட்டபோது... (48)

# இன்று தீர்த்தோற்சவம்

(சுன்னாகம்)

சுன்னாகம் தாளையடி ஸ்ரீ ஹரிஹா புத்திர ஐயனார் ஆல யத்தின் வருடாந்த மஹோற் சவத்தின் தீர்த்தோற்றசவம் இன்று நடைபெறவுள்ளது.

மேற்படி ஆலயத்தின் வரு டாந்த மஹோற்சவம் கடந்த 24ஆம் திகதி கொடியேற்றத் துடன் ஆரம்பமாகியது நேற்றைய தினம இரதோற்சவம் இடம் பெற்றது.

இன்று முற்பகல் தீர்த்தோற்ச வம் நடைபெறும் என ஆலய பரிபாலனசபையினர் அறிவித் துள்ளனர். (33)

# பதிவிருக்கப் பெட்டகம்

இளையராஜாவின் மேற்கு–கிழக்கு இசை இணைப்பு முயற்சிகள் ரசமானவை; மேதைமைக்குரியவை என்கி றார் விஞ்ஞானி ராஜா ராமண்ணா. பழுத்த அனுபவம் மிகுந்த பியானோ நிபுணரான ஹாண்டல், இளையராஜாவிடம் அழைத்துச் சென்ற மேல்நாட்டு இசைக்கலைஞர்கள் அனை வரும் இளையராஜாவின் கிரகிப்பு ஆற்றலையும், திரைப் படக் காட்சிக்கு ஏற்றபடி நொடிப்பொழுதில் இசை அமைத்து அதை வாத்திய கோஷ்டிக்குத் தெரிவித்து ஒலிப்பதிவு செய் யும் திறமையையும் கண்டு வியந்திருக்கிறார்கள் என்கிறார். நாற்பதாண்டுகளாக இந்தியத் திரைப்படத் துறையில் பெரு மதிப்புக்குரியவராக இருந்து வரும் நௌஷாத் அவர்கள் இளையராஜாவிடம் கற்க நிறைய இருக்கிறது என்கிறார். இவை எல்லாம் சாதாரணமாகக் கிடைக்கக்கூடிய பாராட்டு கள் அல்ல. – அசோகமித்திரன்

கிராமிய இசைப் பாணி, கர்நாடக சாஹித்தியங்கள், மேற் கத்திய செவ்வியல் முறைகள் மூன்றையும் சரியான கலவை யில் இணைத்து இனிமையான பாடல்களாகக் கொடுத்தது இளையராஜா செய்த அபாரமான சாதனை. இசையின் சட்ட கத்தினுள் இருந்த எண்ணிலடங்கா சாத்தியங்களை இவர் பாடல்கள் திறந்து காட்டின. பலர் இளையராஜாவின் திரை யிசை மூலம், கர்நாடக சங்கீத நுணுக்கங்களை எதிர்ப்பா ரதயில் சென்றடைந்தது வேறெங்குமே நடக்காத மாற்று நிகழ் வுகளாகும். பல ராகங்களை திரைப்பாடல்களில் கையாண்ட இவரின் பாண்டித்தியத்தைப் பற்றித் தனிப் புத்தகமே எழுத லாம். மேலும், ஒரு குறிப்பிட்ட இசைப் பாணியை மட்டுமே திரை யிசையில் நிகழ்த்த முடியும் என்ற கருத்தை மாற்றி, பின்னணி இசையைத் தமிழ்ப் படங்களில் மிக முக்கியமான கதாபாத் திரமாகவே ஆக்கிய சாதனையும் இவரது. – ரா.கிரிதரன்

இளையராஜாவின் திரையிசைப் பாடல்களைக் கேட்டே ராகங்கள் பற்றிய அறிவை வளர்த்துக் கொண்டவன் நான். மாயாமாளவகௌளை – லலிதா வித்தியாச விவரம், இளைய ராஜா மூலமே எனக்குத் தெரிய வந்தது. உன்னால் முடியும் தம்பி திரைப்படத்தில் “இதழில் கதை எழுதும் நேரமிது” என்ற பாடலை அட்டகாசமாக லலிதா ராகத்தில் அமைத்திருந்தார் ராஜா. அப்போது நான் ஆர்மோனியம் வாசிக்க ஆரம்பித்திருந தேன். மெல்ல பிடிபட்டது. மாயாமாளவகௌளையில் பஞ் சமம் இல்லையென்றால், அது லலிதா. அட... இதுதானா!


அந்த வகையில் லலிதாவிலிருந்து பஞ்சமத்தைத் தொட்டு மாயாமாளவகௌளையை வாசிக்கிறேன். “மாசறு பொன்னே வருக” தேவர்மகன் பாடல் பேசுகிறது. “மஞ்சள நிலாவுக்கு” முதல் இரவு படப் பாடல் குதியாட்டம் போடுகிறது. “மதுர மரிக்கொழுந்து வாசம்” எங்க ஊரு பாட்டுக்காரன் பாடு கிறான். (அதுவும் இந்தப் பாடலின் சரணத்தில் ராஜா விளை யாடியிருக்கும் விளையாட்டு, அபாரமானது). கர்நாடக சங் கீதத்தின் அடிப்படை “ஸரிகமபதநி” ஸ்வர வரிசைகளை சொல் லிக் கொடுக்கப்படும் இந்த ராகத்தில் ராஜா போட்டிருக்கும் பாடல்கள் எண்ணிக்கையிலடங்காதவை. – சுகா

‘ஒரு யாத்ரா மொழி’ (இயக்கம் – பிரதாப் போத்தன்) படத்தின் பின்னணி இசைப் பதிவு நடந்து கொண்டிருந்தது. ஒலிப்பதி வுக் கூடத்தின் விளக்குகள் அணைக்கப்பட்டன. படத்தின இறுதிக்காட்சி திரையில் ஓடியது.

காட்சி ஓடி முடிந்து விளக்குகள் ஒளிர்ந்தன. இளைய ராஜா ஹார்மோனியம் வைத்த மேசையில் அமர்ந்து ஸ்வரக் குறிப்புகள் எழுதிக் கொண்டிருந்தார். சில நிமிடங்கள் எழுதி முடித்ததும் “நரசிம்மன்” என்று குரல் கொடுத்தார். நரசிம் மன் வந்து பிரசாதம் வாங்குவது போல அந்தத் தாள்களை வாங்கினார். ஒவ்வொரு இசைஞராக வந்து அவரவர் வாத்தி யத்தின் பகுதியை வாங்கிப் போனார்கள். எல்லா வாத்தியங் களும் ஆயத்தமாகிய கலவை ஒலி கேட்டது. இளையராஜா உத்தரவிட்டதும் இசைக்கோர்ப்புத் தொடங்கியது. கருவிகள் ஒத்தியங்கி ஒரு மையத்தை நோக்கிக் குவிந்தன. அது காட் சியில் தொற்றியது. சில நிமிடங்களுக்கு முன்பு மங்கலாக இருந்த காட்சியின் உணர்ச்சிக் கோலம் இப்போது தெளி வாகப் புலன்களில் பதிந்தது.

ஒரு காட்சியை ஒலியாகப் பார்ப்பவரை என்னவென்று சொல்வது என்று அன்று யோசிக்கத் தொடங்கினேன். இன் றும் யோசித்துக் கொண்டிருக்கிறேன். அவரைப் பொறுத்து மேதை என்பது தக்கையான வார்த்தை. – சுகுமாரன்





யாழ்.மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழா நேற்று அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் தலைமையில் நடைபெற்றது. இதில் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும், பிரதம விருந்தினராக கலந்துகொண்ட இலங்கை வங்கியின் வடக்கு மாகாண உதவிப் பொதுமுகாமையாளர் பாலரட்ணம் நந்தகுமாரின் பாரியார் பரிசில்களை மாணவர்களுக்கு வழங்குவதையும், மாணவர்களையும் காணலாம். (படங்கள்-ஆர்.இராஜகுமார்)

# விமானம் கூட சொந்தமில்லை பிரதமர் ரணில் வருத்தம்

விமானம் ஒன்றுகூட சொந்தமில்லாத ஒரே விமான சேவை நிறுவனத்தைக் கொண்ட நாடு இலங்கையேயாகும் என பிரதமர் ரணில். விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எங்கள் விமான சேவை நிறுவனங்களிடம் பஸ், லொறி உள்ளிட்ட ஏனைய வாகனங்களே உண்டு.

ஸ்ரீலங்கன் விமான சேவை நாட்டுக்கு பெரும் சுமையாகவே காணப்படுகின்றது.

விமான சேவை நிறுவனத்தில் இடம்பெற்றுள்ள ஊழல் மோசடிகள் குறித்து விசாரணை செய்யப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

விமான சேவை நிறுவனத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் குறித்து மூவர் அடங்கிய ஆணைக்குழு விசாரணை நடாத்தியது.

குறித்த விசாரணை அறிக்கை அலரி மாளிகையில் வைத்து நேற்று முன்தினம் பிரதமரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதன் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

# 219 தமிழ் அரசியல் கைதிகளே சிறைகளில் தடுத்து வைப்பு

## நீதி அமைச்சர் தெரிவிப்பு



பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களில் தற்போது 219 தமிழ் அரசியல் கைதிகள் மாத்திரமே தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக. நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் தடுப்பில் உள்ளோர் குறித்து உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் வெளியிடப்பட்டுவரும் தகவல்கள் அனைத்தும் உண்மைக்குப் புறம்பானதென அவர் கூறினார்.

சர்வமதத் தலைவர்கள் பேரவையுடனான விஷேட சந்திப்பு நேற்று முன்தினம் நீதி அமைச்சில் இடம் பெற்றது.

இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே நீதியமைச்சர் இந்த தகவலை வெளியிட்டார்.

இவ்வாறு தடுப்பில் உள்ளவர்களில் 134 பேரின் விசாரணைகள் இறுதிக்கட்டத்தை அடைந்திருப்பதாக கூறினார்.

60 பேர் மீதான விசாரணைகள் தொடர்வதாகவும், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களில் 9 பேர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதுதவிர குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட 45 பேர் புனர்வாழ்வளிக்கப்பட்டு வருவதோடு, நீதிமன்றத்தினால் விசாரிக்கப்பட்டு 54 பேர் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டுள்ளதாகவும் நீதியமைச்சர் குறிப்பிட்டார்.

# பரமர் சங்கமம்



"மாறி மாறி வரும் சகட வாழ்க்கை" எண்டு பின்னை சும்மாவே சொல்லி வைச்சவை. யானைக்கொருகால மெண்டால் பூனைக்கும் ஒருகாலம் வருமெண்டதும் கிட்டத்தட்ட அதுபோல தான் பாருங்கோ!

உலகம் எண்ட பூமி தன்னைத்தானே சுத்த நாளிகைக் கணக்குப் போட்டிருக்கினம். ஒருநாள்மாற இருபத்து நாலு மணி நேரமில்லையே? ஒருவருடம் உருள 365 நாளெண்டும் போட்டிருக்கினம். உப்புடி எங்கடை ஆளுற அரசாங்கங்களும் ஐஞ்சுவரிசத்தாலை மாறி வேறை அரசாங்கம் வருகுது.

ஒருவர் ஜனாதிபதியா ரெண்டு முறைக்குமேலை இருக்கக் கூடா தெண்ட சட்டம் இதை மீறுறதுக்காக அந்தரப்பட்டு ரெண்டு முறேலும் பத்து வருசங்களுக்கு ஆண்டிருக்கலாம், முடியேல்லை எட்டு வரிசம் தானே ஆண்டவர்.

அந்தரம் அவதந்திரமெண்டே மாதிரிப் போச்சு! போன வரிசம் வன்னீல புலிகளை மீளுருவாக்க முயற்சித் தேண்டு ஜெயக்குமாரி எண்டவரைக்கைது செய்தவை. அவரோடை மகள் விபூசிகாவைச் சிறுவர் நன்நடத்தை ஆச்சிரமத்தில் தடுத்து வைத்தவை.

விபூசிகா பூப்பு நீராட்டும் ஆச்சிரமத்திலே தாயாரின்றி நடந்தும் முடிஞ்சே! இப்பதாயையும், மகளையும் எந்தப் பயங்கரவாதக் குற்றங்களும் நிரூபிக்க முடியாமல் விடுதலை செய்துள்ளனர். எண்டாலும் பரீட்சை நடைபெறுவதால் ஏப்ரல் 4 ஆம் திகதிவரை விபூசிகா ஆச்சிரமத்தில் தாயாரின் அனுசரனையுடன் விடப்பட்டிருப்பதாகவும் செய்திகள் வந்தன.

இதுக்கிடேல்ல மனித நடைமுறை வாழ்க்கேலை மெல்லத்தான் உருளும் உலக உருண்டை ஒரு சுற்று உறுண்டு வந்து தரித்துள்ளது. கடந்த வரிசம் மார்ச் மாதமளவில் பாதுகாப்புத் துறையால் உள்ளுக்கை தள்ளப்பட்ட ஜெயக் குமாரியும், மகள் விபூசிகாவும் விடுதலையாகி வெளியிலை வந்திட்டினம்.

கடந்த ஜனவரி 8 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் மகிந்த அரும்பொட்டில் அதுவும் தமிழ் பேசும் மக்களின் வாக்குகளால் மண்ணைக் கவ்வி வீட்டுக்கு அனுப்பப்பட்டதாலை எல்லாமே தலை கீழா மாறிப்போச்சு!

பேச்சரிபட்டதுபோலை மகிந்தரும் தன்ரை குடும்ப அங்கத்தினரை ஆட்சி அதிகாரங்களில முக்கிய இடங்களில் குறிப்பாய் சகோதரங்கள்ளை வைச்சதாலை பசிலும், பெண்சாதியும் அமெரிக்காக்கு ஓடிச்சினம். இஞ்சை நிண்ட கோத்தாபய வளமாக மாட்டுப்பட்டுக் கொண்டு முளிக்கிறார்.

காலித் துறைமுகக் கடற்பிராந்தியத்தில் மிதக்கும் ஆயுதக்கப்பல் சம்பந்தமான குற்றச்சாட்டை விசாரணைக்கு எடுத்த காலிநீதி மன்றால் கோத்தாபயர் அடுத்த தவனேலை நீதிமன்றில் முன்நிலைப்படுத்தப்பட வேண்டுமென உத்தரவிட்டிருக்கு.

"அரசன் அன்றறுப்பான் தெய்வம் நிண்டறுக்கும்" எண்டமாதிரி பாதுகாப்பு அமைச்சு செயலாளர் இருக்கேக்கை ஜெயக்குமாரியேம். விபூசிக்காவையும் பிரிச்சு வைச்சவர் அந்தச் சட்டப்படி நீதிமன்றேற தாயும், மகளும் வெளியிலை வந்திட்டினம்.

கார்மாக்ஸ் சொன்னார் உலகிலெதுவும் தேக்க நிலை அடைவதில்லை: மாறிக் கொண்டே இருக்குமெண்டு அதுபோலை மாறி மாறிவரும் சகடவாழ்க்கையைத்தானை அரசனெண்டாலும், ஆண்டியெண்டாலும் அனுபவிக்க வேண்டி இருக்கு. இல்லையே பின்னை சொல்லுங்க பாப்பம்....

# உதயசிறிக்கு பொதுமன்னிப்பு



சிகிரியாவில் பளிங்குச் சுவரில் தனது பெயரை எழுதி, புராதன சின்னத்துக்கு சேதம் விளைவித்ததாக குற்றம்சாட்டப்பட்டு, தம்புள்ள நீதிமன்றத்தினால் இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட மட்டக்களப்பைச் சேர்ந்த சின்னத்தம்பி உதயசிறி என்ற இளம் பெண்ணுக்கு பொதுமன்னிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான ஆணையில ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினமிரவு ஒப்பமிட்டுள்ளதாக, நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குறித்த பெண்ணை பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யுமாறு தாம் செய்த பரிந்துரைக்கு அமைவாக அது தொடர்பான ஆணையில், ஜனாதிபதி கையெழுத்திட்டதாகவும், இதனையடுத்து அடுத்த சில நாட்களுக்குள் அவர் விடுதலை செய்யப்படுவார் என்றும் விஜேதாச ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

கடந்த பெப்ரவரி மாதம் 14 ஆம் நாள் உலக பாரம்பரியமாக கருதப்படும் சிகிரிய வளாகத்தில் கவி வரிகள் உள்ள பகுதியில் இரு சொற்தொடர்களை கிறுக்கியதாக மேற்படி இளம் பெண் மீது குற்றம்சுமத்தப்பட்டது.

இதன் அடிப்படையில், தம்புள்ள நீதிவான் நீதிமன்றம் குறித்த பெண்ணுக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்திருந்தது.

இதையடுத்து அவர் அனுராதபுர சிறைச்சாலையில் தண்டனையை அனுபவித்து வந்த நிலையிலேயே, பொதுமன்னிப்பு அளிக்க ஜனாதிபதி முடிவு செய்துள்ளார்.

# 35 மதுபான போத்தல்கள் முழங்காவிலில் மீட்பு

(கிளிநொச்சி)

முழங்காவில் - நாகபடுவான் ஜெகநாதன் குடியிருப்பு பகுதியில் அண்மையில் பொலி ஸார் நடாத்திய தேடுதல் நடவடிக்கையின் போது, ஒரு தொகுதி மதுபானப் போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து முழங்காவில் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி ஆரியவன்சா தலைமையிலான குழு இந்தத் தேடுதல் நடவடிக்கையினை மேற்கொண்டது.

இதன்போது, சட்டவிரோதமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த 35 அரச மதுபான போத்தல்கள் கைப்பற்றப்பட டதோடு. சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபரை தடுத்து வைத்து விசாரணைகளுக்கு உட்படுத்தி வருவதாக முழங்காவில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# 313 முதியவர்களுக்கு மாதாந்தம் நிதியுதவி


(கொழும்பு)

சமூக சேவைகள் அமைச்சின் முதியோர் தேசிய செயலகத்தால் 70 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் 2,000 ரூபா உதவித் தொகையை துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் 313 முதியவர்கள் பெற்றுவருவதாக துணுக்காய் பிரதேச செயலாளர் எஸ்.குணபாலன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், எமது பிரதேச செயலக பிரிவில் 20 கிராம அலுவலர் பிரிவுகளையும் சேர்ந்த முதியவர்களுக்கு இந்த உதவித் தொகை வழங்கப்பட்டு வருகின்றது. இதற்காக மாதாந்தம் 6 இலட்சத்து 26 ஆயிரம் ரூபா சமூக சேவைகள் அமைசசால் அனுப்பி வைக்கப்படுகின்றது.

பிரதேச செயலக பிரிவில், சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட 7 பேர் தலா 500 ரூபாவும், காச நோயால் பாதிக்கப்பட்ட 3 பேர் தலா 500 ரூபாவும், புற்று நோயால் பாதிக்கப்பட்ட 19 பேர் தலா 500 ரூபாவும் மாதாந்தம் பெற்று வருகின்றனர். இதற்கான நிதியை சமூக சேவைகள் அமைச்சு வழங்கி வருகிறது என்றார்.

43.



(1).கிழித்தல் (2).வெட்டுதல் (3).திறத்தல்

**(14).பின்வரும் வினாக்களில் இலக்கங்களும் எழுத்துக்களும் ஏதோ ஒரு வகையில் தொடர்பு கொண்டுள்ளன. அவற்றை நன்கு அவதானித்து இடைவெளிக்குப் பொருத்தமான இலக்கத்தை இடுக.**

44.

| 2 | 4 | 6 | ........ |
|---|---|---|---|
| ஆ | D | ஈ | H |

(1).10 (2).8 (3).12

45.

| | 2 | |
|---|---|---|
| 4 | 8 | 16 |
| | 32 | |

| | 3 | |
|---|---|---|
| 6 | 12 | 24 |
| | ........ | |

(1).48 (2).47 (3).35

**(15).பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்துக்களில் காட்டப்பட்ட சொல்லுக்குப் பொருத்தமான சொல்லை விடைகளில் இருந்து தெரிக.**

46.ஆசிரியின் மனதை புண்படுத்தாது விடின் நேரம் தப்பாது
(1).மனம் - தவறாது (2).மனசாட்சி - ஞாபகம் (3).உள்ளம் - சரியாக

47.நேரத்தின் மூலம் உச்ச பயனைப் பெற்றால் எமது இலக்கை அடையலாம்
(1).பொருத்தமான,தோல்வி (2).உயர்,குறிக்கோளை (3).சரியான,தோல்வி

48.இடுக்கண் வரும் போது கலங்குதல் கூடாது
(1).துன்பம்,மகிழ்தல் (2).துன்பம்,வருந்துதல் (3).இன்பம்,வருந்துதல்

49.அடாது மழை பெய்தாலும் விடாது நாடகம் நடக்கும்
(1).கலக்கம், தொடர்ந்து (2).ஓயாது,தொடர்ந்து (3).ஓயாது,ஆடாது

50.அடி உதவுவது போல அண்ணன் தம்பி உதவார்
(1).உதை,சகோதரர் (2).நுனி,சகோதரர் (3).கடைசி,உற்றார்

### நேற்றுமுன்தினம் பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(01).1. 3 2. 3 (02).3. சிலந்தி 4.எட்டுக்கண்கள் 5.வலை 6.புதுமை
7.1.கண் 2.கால் 8.நாம் 9.செயற்கை
(03).10.கைப்புண்பார்ப்பதற்குக் கண்ணாடி வேண்டுமா? 11.வழிப்போக்கன் காட்டுவழியாக கால்கடுக்க நடந்தான்
(04).12.கடற்கரையில் சிறிய கற்கள், ஊரிகள், சிப்பிகள் ஆகியவற்றைச் சேகரித்தேன்
13."தாயகத்தின் தலைவனே" வருக! வருக! என்று மக்கள் வரவேற்றனர் (05).14. இளநீர்
15.தலையணை (06).16.ஆசிரியரும், மாணவர்களும் பாடசாலைக்குப் போனார்கள் (07).18.உறவினர்கள்
19.முன்னேறியுள்ளது 21.ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? (09).22.எனக்குப் பெரிய கண்கள் உண்டு
23.எனக்கு காற்றில் பறக்க முடியும் (10).24.library 25.computer
(11).26.புத்தகம் தாருங்கள் 27.சுகதுக்கம் எப்படி (12).28.2 29.3 30.2 31.2
32.1 33.2 34.3 35.1 36.4 37.2 38.1 39.3 40. 41.1
42.1 43.4 44.3 45.3 46.2 47.3 (13).48.3069 49.1 50.104
51.242ரூபா 52.4kg 300g 53.2070 54.6m 20cm 55.1.44பேருக்கு 2.22பாண்கள்
56.1.50m 2.84சதுரம்

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



## தரம் - 4 பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I
1 மணி 30 நிமிடம்

# கல்வி முரசு



**(01).பின்வரும் பாடலை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**


செவ்விளநீர் மரங்கள் இரண்டு
தென்னை மரங்கள் இரண்டு
இரண்டு மரங்களுக்கும் பூக்கள் இரண்டு
பூக்களிரண்டிற்கும் காய்கள் இரண்டு

01.தரப்பட்டுள்ள மரங்கள் எவ்வகையைச் சேர்ந்தவை
(1).ஒரு வித்திலைத்தாவரம் (2).நீர்த்தாவரம் (3).இருவித்திலைத்தாவரம்

02.மேற்கூறிய தாவர இனத்தைச் சேர்ந்த தாவரம்
(1).மா (2).பாக்கு (3).தேயிலை

03.விதை இன்றி முளைக்கக்கூடிய தாவரம் எது?
(1).பாக்கு (2).தென்னை (3).தேயிலை

**(02).தென்னை, வாழை, வேம்பு, ஈரப்பலா என்பவற்றை நாம் இலகுவில் இனங்காணமுடியும்.**




04.இவற்றில் எமது அன்றாட வாழ்வில் பயன்படும் இலை ........................


05.மருந்துப்பொருளாக பயன்படுவது ........................

06.ஈர்க்கில் பெற பயன்படும் இலை ........................

07.பல விதைகளையுடைய காயை உருவாக்கும் தாவரம் ........................


**(03).அடுத்து வரும் உருவத்தை வரைக.**

08.





........................

09.




........................

10.




........................

**(04). பொருத்தமான விடையை எழுதுக.**

11. அலெக்சான்டர் கிரகாம்பெல் - தொலைபேசி எனின் யோன் லோகி பெயார்ட்
(1). புகையிரதம் (2). தொலைக்காட்சி (3). கணனி

12. தந்திரம் - நரி எனின் சாந்தம்
(1). எலி (2). பசு (3). பூனை

13. ஒளிக்கு இருட்டு எனின் வரவிற்கு
(1). செலவு (2). பசி (3). குளிர்

14. பசிக்கு உணவு எனின் நோய்க்கு
(1). மருந்து (2). ஓய்வு (3). விடுதலை

15. கப்பலுக்கு கடல் எனின் விமானத்திற்கு
(1). தெரு (2). ஆகாயம் (3). ஓடை

16. வருடத்திற்கு மாதம் போல் நாளுக்கு
(1). நிமிடம் (2). செக்கன் (3). கிழமை

**(05). பின்வரும் சொற்கூட்டத்தை அவதானித்து இடைவெளிக்குரிய ஆங்கிலச்சொல்லின் கீழ் கோடிடுங்கள்**

17. தை - January
மாசி - february
பங்குனி - march
சித்திரை - ............ (December, April, May)

**(06). பொருத்தமான சொல்லை இடைவெளியில் எழுதுக.**

18. யானையின் ஒலி பிளிறல் எனின் குதிரையின் ஒலி ..............................
(1). கத்தல் (2). கனைப்பு (3). கதறல்

19. எலிக்குப் பூனை போல் பாம்புக்கு ..............................
(1). தவளை (2). கீரி (3). பல்லி

20. அடுத்துவரும் சொல்லை எழுதுக
(1). பகல் - இரவு - காலை - ..............................

21. பிழையாக எழுதி உள்ள சொல்லின் கீழ் கோடிடுங்கள்
(1). வருமானம் (2). பெறுமானம் (4). அரவாரம் (4). கடிவாளம்

22. மேலே பிழையாக எழுதப்பட்ட சொல்லைச் சரியாகத் திருத்தி எழுதுக ..............................

**(07). கீழ்வருவனவற்றை அவதானித்து இடைவெளியை நிரப்புங்கள்**

23. தச்சன் - வாள்
மேசன் - சீமெந்து
எழுத்தாளன் - பேனை
உழவன் - ............... (நெல், ஏர், எருமை)

24. பாதரட்சை - கால்
கடிகாரம் - மணிக்கட்டு
மாலை - கழுத்து
கை - ............... (கவசம், மோதிரம், காப்பு)

**(08). பின்வரும் சொற்களுக்குள் காணப்படுகின்ற சமத்தன்மை அடைப்பினுள் எழுதப்பட்டுள்ளது. எனினும் ஒரு சொல் வித்தியாசமாக உள்ளது. அதைத்தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுங்கள்**

25. கதிரை, காற்றாடி, மேசை, அலுமாரி → தளபாடம்
26. கால், கை, பாதம், குடல் → உறுப்புக்கள்

**(09). அடைப்பினுள் தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புங்கள்**
(அந்தம், ஞாயிறு, குழந்தை, பெண் ஆடு, நாடு, உணவு, குதிரை, பசி)

27. சூரியன் - ..............................



28. தேசம் - ..............................
29. சிசு - ..............................
30. ஆகாரம் - ..............................
31. முடிவு - ..............................
32. மறி - ..............................

**(10). மேற்கூறிய கூடுகளை அவதானித்து பின்வரும் கூற்றுக்கள் "சரியா" அல்லது "பிழையா" என அடைப்பினுள் எழுதுக.**

அ. தென்னை
கடலை
உப்பு

ஆ. சீனி
மண்வெட்டி
கிலோமீற்றர்

33. வயலில் வேலை செய்யத் தேவையான பொருள் ஒன்றுகூடு "அ" இல் உள்ளது (..............................)
34. தானிய வகை ஒன்று கூடு "அ" இல் உள்ளது (..............................)
35. நகரங்களுக்கிடையிலான தூரத்தை அளக்கும் அலகு ஒன்று கூடு "ஆ" இல் உள்ளது (..............................)
36. கடலில் இருந்து பெறப்படும் வெள்ளை நிறப்பொருள் ஒன்று கூடு "ஆ" இல் உள்ளது (..............................)

**(11). சொற்களை ஒழுங்காக்கி அர்த்தமுள்ள வசனம் ஒன்றை எழுதுக**

37. நாய் / காத்தது / பிள்ளையார் / உண்டியலை / கோயில்
..............................


**(12). பின்வரும் பாடலை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**


அந்த மரத்தில் பழுத்த வாழை
இந்த மரத்தில் பழுத்த வாழை
அந்த மரத்திலும் இந்த மரத்திலும்
சீப்பு சீப்பாக பழுத்த வாழை


(38) - (39) கூற்றுக்கள் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் அடைப்பினுள் எழுதுக.

38. இங்கு சீப்பு சீப்பாக உள்ளது பூக்கள் ( )
39. இங்கு நான்கு மரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன ( )
40. இம்மரத்தின் எப்பகுதி கோயில்களில் மாலை தயாரிக்கப்படுகின்றது
(1). பூ (2). நார்
(3). இலை (4). வேர்

**(13). பின்வரும் உருவுக்குப் பொருத்தமான சொல்லை தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

41.

(1). கூடு (2). குகை (3). மரப்பொந்து

42.

(1). மழை (2). வெயில் (3). காற்று



# பாவத்தின் படுகுழியிலிருந்து பாவிகள் நாம் மீண்டெழுவோம்...

இயேசு கிறிஸ்து சிலுவையில் அறைந்து உயிர்நீத்த நாளை பெரிய வெள்ளி என்று கிறிஸ்தவர்களால் துக்க நாளாக அனுஷ்டிக்கப்படுகினறது.

இன்று தலையிலே முள்முடி சூட்டப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப் பட்டு இறைமகனாம் இயேசு கிறிஸ்து எம் பாவங்களுக்காக சிலுவையில் அறையப்பட்ட கடைசி நிமிடத்திலும் கூட தந்தையே இவர்கள் அறியாமல் செய்கிறார்கள் இவர்களை மன்னியும் எனக்கூறிக்கொண்டே தனது வாழ்வுப் பயணத்தை முடித்துக்கொண்டார்.

ஆம் அன்பார்ந்த இறைமக்களே இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு மரித்தார் என்பதல்ல பெரிய வெள்ளி. இறைவனால் படைக்கப்பட்ட மக்கள் இறைவனை மறந்து தான்தோன்றித்தனமாக தமக்கு விரும்பிய வழிகளில் சென்று இறைவனுக்கு விரோதமாக இறைவனுடைய மகிமையைக் காணமுடியாது பாவம் என்ற இருளில் மூழ்கியிருந்த நிலையில் இவர்களுக்காகவே இறைவன் தனது ஒரே மகனை மனிதனாகப் படைத்து பாவம் என்னும் தடைச்சுவரை சிலுவை மரணத்தின் மூலம் தகர்த்து மனுக்குலத்துக்கு விடுதலையைத் தந்தார். இன்றைய நாளே பிரிவும் உறவும் மீண்டும் சந்தித்த நாள் எனக் கூறப்படுகின்றது.

அதாவது இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை என்று வேதம் மிகத் தெளிவாகக் கூறுகின்றது.

பிரிவும் உறவும் சந்தித்த இடத்திலேயே பிரிந்திருந்த உறவை மீண்டும் சீர்படுத்த இரத்தம் சிந்தப்பட வேண்டியதாக இருந்தது. அந்த இரத்தத்தினாலேயே எமது பாவங்கள் மன்னிக்கப்பட்டன. அதுமட்டுமன்றி கிறிஸ்துவின் ஆத்மா, உடலை உலக மக்களின் விடுதலைக்காக அர்ப்பணித்துள்ளார்.

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே! சிலுவையில் தொங்கிய இயேசு கிறிஸ்து தனது உடல், உயிர், ஆன்மா ஆகிய மூன்றையும் எமக்காகத் தியாகம் செய்துள்ளார். தனது இரத்தத்தையும் உடலையும் எமது மறுவாழ்வுக்காக அர்ப்பணித் துள்ளார்.

அருட்சாதனங்களின் மூலம் இறைவனுடைய பிள்ளைகளாக தேர்ந்தெடுக்கப்பட்ட நாம் எமது வாழ்வில் எதைச் செய்தோம், அயலவர்கள் மத்தியில் அன்புடன் வாழ்ந்தோமா? சக பணியாளர்களுடன் நட்புணர்வை வளர்த்தோமா? பாடசாலைகளில் பணிபுரியும் இடங் களில் அர்ப்பணிப்புடன் பணியாற்றி னோமா? இல்லாதவர்களுக்கு கொடுத்தோமா? போட்டி பொறா மையை மறந்தோமா? விட்டுக் கொடுத்து வாழ்ந்தோமா? பிள்ளை களை சரிவர வழிநடாத்தினோமா? இறை விசுவாசத்தைக் கடைப்பிடித் தோமா? இந்தத் தவக்காலத்தில் இறைவனுக்கு உகந்தவர்களாக வாழ்ந்தோமா? சிந்திப்போம்.

தந்தையே இவர்கள் அறியாமல் செய்கிறார்கள் இவர்களை மன்னியும் எனக்கூறிய தேவன் எமது வாழ்வில் தெரிந்தும் தெரியாமலும் நாம் எம் வாழ்வில் செய்த பாவங்களையும், எம்மைச் சூழ்ந்தவர்களுக்கு நாம் இழைத்த கொடுமைகளையும், எமது நாவினால் தேவையற்ற வார்த்தை களைப் பிரயோகித்து எத்தனையோ உள்ளங்களை வருத்தியிருப்போம், எமது செயற்பாடுகளின் மூலம் நோகடிக்கப்பட்டவர்கள் என பல்வேறு பாவங்களைப் புரிந்து எமது வாழ்வையே இருட்டாக்கி சேறுபடிந்த உள்ளத்துடன் வாழ்கின்றோம்.

மனிதன் பலவீனமானவன், தவறுகள் தவிர்க்கப்படவேண்டியது. இயேசு கிறிஸ்து மூன்று முறை தரையிலே வீழ்ந்து எழுந்து நடந்து தனது இறுதி இலக்குவரை நடைபோட்டார். மனிதர்களாக நாமும் பலமுறை பாவங்களில். துன்பங்களில் வீழ்கின்றோம் மனித பலவீனங்கள் படுகுழியில் தள்ளுகின்றன இதனால் பலர் மீள எழ முடியாது தத்தளிக்கின்றனர். இதிலிருந்து மீள எழுச்சிபெற்று இறை அருளை வேண்டி அதிலிருந்து மீளவும் எழல் வேண்டும். நாமும் பாவங்களிலிருந்து விடுதலைபெற்று நற்பிரஜைகளாக வாழ முயற்சிப்போம்...

- சுகுணா

## இராமச்சந்திர இலிங்கேஸ்வரர் ஆலயத்தில் பங்குனி உத்தர அஷ்டோத்திரம் இன்று

(திருநெல்வேலி)

நல்லூர் சிவஞானி ஸ்ரீ இராமச்சந்திர மகாரிஷியின் பங்குனி உத்தர அஷ்டோத் திர (108) சங்காபிஷேகம் இன்று. வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் உள்ள ஸ்ரீ இராமச்சந்திர இலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

பங்குனி உத்தரதினமே மகாரிஷி சமாதி அடைந்த புனித தினமாகும். நல் லதை மட்டுமே பேசி, நல்லதை மட்டுமே செய்து, எதுவித பேதமும் பாராட்டாது அனைவரும் இன்புற்றிருக்க வேண்டும் என வாழ்ந்து காட்டிய நல்லூர் ஸ்ரீ இராமச்சந்திர மகரிஷி இந்துக்களுக்காக மட்டுமல்ல, கிறிஸ்தவ, இஸ்லாமிய, பௌத்த, சிங்கள மக்களது பூரண அன்புக்கும் பாத்திரமானவர். அன்னார் காட்டிய அன்பு, நம்பிக்கை, அடைக்கல வழி எமது இறை திருப்பாதம் பணிந்து நடக்க வேண்டியது நாட்டுக்கும் நமக்கும் நானிலம் முழு வதற்கும் நன்மை பயப்பதாகும்

திருமூலனாரின் வழிகாட்டலை உல கிற்கு உயர்த்தி அனைத்துலகையும் ஒரு குடும்பமாக்க ஆரியதிராவிட ஒருங் கிணைப்பைத் தமது பன்மொழி ஆற்ற லால் ஒரேமொழி என நிரூபித்து இன, மத, மொழி, சாதி, கடந்த ஒரு புதிய உலகை உருவாக்கத் தாம் வாழ்ந்துகொண்டிருந்த 1977.05.03 வரைக்குமான காலகட்டம் வரை அரும்பாடு பட்டவரே நல்லூர் தந்த இராமச்சந்திர மகாரிஷி என்னும் வெளளை அண்ணா சுவாமிகள்.

மகரிஷி அவர்கள் சேர் பொன்னம் பலம் இராமநாதனின் செயலாளராக இருந்த சிவத்தமிழ்ச் சீலர் சங்கரப்பிள்ளை அவர்களைத் தந்தையாக ஏற்றவர்.

தாயார் மீனாட்சி அம்மாளோ ஈழத்துப் பெண் சித்தர் எனப் போற்றப்பட்டவரும், நல்லூர் திருநெல்வேலி, கீரிமலை, தென்னிலங்கை, கதிர்காமம், கடல் கடந்து திருச்செந்தூர் எங்கணும் மடாலயங்களை தமது ஆன்மீகப் பணிகளைத் தொடர்ந்து வாழ்ந்த நல்லூர் சடையம்மா சுவாமிகளின் வழி வந்தவர்.

இறையருளால் இவர்களுக்கு வாய்த்த ஏக புத்திரனே சிவாம்சம் பொருந்திய இராமச்சந்திர மகாரிஷி எனப் பின்னாள் அனைவரும் போற்றித் துதிக்கப்பெற்ற இராமச்சந்திரனார் என்னும் வெள்ளை அண்ணை ஆவார்.

அதியற்புத மகரிஷியின் பெருமை ஒலிக்க இராமச்சந்திர இலிங்கேஸ்வரராக எம் பெருமான் தமது மகிமையினை உயர்த்தி வரும் திருத்தலமே கொழும் புத்துறையில் உள்ள தையல்நாயகி சமேத ஸ்ரீ இராமச்சந்திரராய் அற்புத அருள் சூழ்ந்து நிற்கிறது. (137)

## புனிதமும் புண்ணியமும் நிறைந்த பங்குனி உத்தரம் இன்று



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல சிவபெருமானுக்கும் சக்தியாகிய உமாதேவியாருக்கும் உரிய தினம் தான் இந்தப் பங்குனி உத்தரம். இன்றைய பங்குனி உத்தர நன்னாள், ஒரு புனிதமும் புண்ணியமும் நிறைந்த சிறப்புத் திருநாளாகும்.

ஆதிபராசக்தியான அம்பிகை உமாதேவியார் மலையரசனின் மகளாக அவதாரம் செய்து சிவபெருமானைக் கைப்பிடித்துத் திருமணம் செய்த நாளும் இந்தப் பங்குனி உத்தரமேயாகும்.

இன்றைய இந்தப் பங்குனி உத்தர விரதமிருந்தால் திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணம் விரைவில் நடைபெறும். இன்றைய பங்குனி உத்தர விரதத்தை நோற்க விரும்புவோர் காலையில் எழுந்து புனித புண்ணிய நீராடித் தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்து சந்தியா வந்தனம் முடித்து சிவாலய தரிசனம் செய்யவேண்டும்.

இன்று காலை எதுவும் உண்ணாமல் விரதங்காத்து தேவார திருவாசகங்களை ஓதிய வண்ணம் இருக்கவேண்டும். மதியம் ஒரு பொழுது உண்டு முடியுமாயின் வேறு சிவனடியார்களுக்கு அன்னதானமும் செய்யலாம். இரவு பழமும் பாயாசமும் உண்ணவேண்டும் என்பது நியதி.

இன்றைய பங்குனி உத்தர விரதமானது சிவபெருமானுடைய கல்யாணத்துடன் சம்பந்தப்பட்டிருப்பதால் இது கல்யாண சுந்தரவிரதம் எனவும் அழைக்கப்படுகின்றது.

சிவன் கோவில்களில் மஹோற்சவம் நிகழ்ந்து இன்று தீர்த்தோற்சவமாகிப் பௌர்ணமியும் வெள்ளிக்கிழமையும் ஆகிய இன்றைய நல்ல நாளில் ஆயத்தங்கள் செய்து நாளை திருக்கல்யாணம் நடைபெறும். இன்றும் நாளையும் விரதங்காத்து விசேட அபிஷேக ஆராதனை பூசை வழிபாடுகளில் ஈடுபட்டால் நல்ல பலன் கிடைக்கும்.

ஆதலால், இன்றைய பங்குனி உத்தர நன்னாளில் சிவபெருமானையும் சக்தியாகிய உமாதேவியாரையும் ஒன்றாக வழிபாடியற்றி வாழ்வில் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ நம்மை நாமே தயார்ப்படுத்திக் கொள்வோமாக.

கலாபூஷணம்
இராசையா ஸ்ரீதரன

## முரசின் இன்றைய பலன்

(03.04.2015 வெள்ளிக்கிழமை)

ஜய வருஷம் பங்குனி மாதம் 20 ஆம் திகதி.
சதுர்த்தி - திதி. சித்தாமிர்தம்- யோகம்.
உத்தர நட்சத்திரம் முன்இரவு 09.28 வரை. பின் அத்தம்.
இராகு காலம் 10.40 - 12.10 வரை. சுபநேரம் 06.10 - 07.40 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.



**மேடம்**: அட்டமத்துச் சனியின் கோசரத்தால் முரண்பாடு தக்க வைத்தல்.

**ரிஷபம்**: பொருட்களை விற்பனை செய்ய மனைக்கு வருபவரில் விழிப்பாக இருத்தல்.

**மிதுனம்**: ஆயுட்பலவீனமான பிள்ளையை விற்றுவாங்க முயற்சித்தல்.

**கடகம்**: நீர்த்தேக்கத்தில் சிக்கிய வேளை அயலவரால் காப்பாற்றப்படல்.

**சிம்மம்**: சந்தேகம் தீர்ந்ததால் கவின் நிலை தக்கவைத்தல்.

**கன்னி**: வியாழ சுகம் இருப்பதினால் புதிதாக மனைகோல ஆரம்பித்தல்.

**துலாம்**: நிறைகுறைவு கண்டதினால் களேபரம் ஏற்படல்.

**விருச்சிகம்**: இடைநடுவில் இறக்கப்பட்ட பயணம் மீண்டும் ஆரம்பித்தல்.

**தனுசு**: ஈகோ உன்னத நிலையில் இருந்தமையினால் சுமுகமான உறவு பாதிக்கப்படல்.

**மகரம்**: கடன்பெற முயற்சித்த வேளை பிறர் தடுத்து விடல்.

**கும்பம்**: எதிரியைக் கண்ட விடத்து பதகளிப்பும் அச்சமும் ஏற்படல்.

**மீனம்**: வாகனப் போட்டா போட்டியினால ஏற்பட விருந்த அபாயம் நூலிழையில் தப்பிவிடுதல்.

# ஊட்டச்சத்துக் குறைபாட்டால் குழந்தைகள் இறப்பு

## மகாராஷ்டிராவில் அவலம்



மகாராஷ்டிரா மாநிலத்தில் கடந்த 10 மாதங்களில் ஊட்டச் சத்து குறைபாடு காரணமாக குழந்தைகளின் இறப்பு விகிதம் அதிகரித்துள்ளதாக குழந்தைகள் நல அமைச்சர் வித்யா தாக்கூர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியுள்ளதாவது, ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக குழந்தைகளின் இறப்பு விகிதம் அதிகரித்துள்ளது, மேலும் நந்தர்பர் மாவட்டத்தில் 662 குழந்தைகளும், பால்காரில் 418 குழந்தைகளும் தானே மாவட்டத்தின் பிவாண்டி பகுதியில் 197 குழந்தைகளும இறந்துள்ளன.

கடந்த 2013 ஆம் ஆண்டில் குழந்தைகளின் இறப்பு விகிதம் 286 ஆக இருந்தது என்றும் அவை 2014ஆம் ஆண்டில் 497 ஆக அதிகரித்துள்ளது எனவும் கூறியுள்ளார்.

இவ்விடயத்தில் மாநில அரசு தகுந்த நடவடிக்கை மேற்கொண்டு வந்த போதிலும் ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக குழந்தைகளின் இறப்பைத் தடுக்க முடியவில்லை என சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

# ரஷ்யாவில் கவிழ்ந்தது கப்பல் 54 பேர் பரிதாபகரமாக மரணம்



ரஷ்யாவில் பயணிகள் கப்பல் ஒன்று கவிழ்ந்ததில் அதில் பயணித்த 54 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த கப்பலில் இருந்து 63 பயணிகள் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.


Kamchatka வுக்கு அண்மித்த Okhotsk கடற்பரப்பில் 132 பயணிகளுடன் பயணித்துக் கொண்டிருந்த ரஷ்ய கப்பல் இவ்வாறு விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

இதில் 78 ரஷ்ய கப்பல் பணியாளர்கள் இருந்துள்ளதுடன், ஏனையவர்கள் மியன்மார், லத்துவியா, உக்ரைன் மற்றும் வனுவட்டு ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் இடம்பெற்ற பகுதியில் ரஷ்ய மீட்புக் குழுவினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருவதோடு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

# சைபர் தாக்குதல்கள் நடாத்தினால் பொருளாதாரத் தடைவிதிக்கப்படும்

## ஒபாமா எச்சரிக்கை



அமெரிக்க இலக்குகள் மீது சைபர் தாக்குதல்களை நடத்துபவர்கள் மீதும், அந்தத் தாக்குதல்களால் பலன் அடைபவர்களையும், தண்டிக்க பொருளாதாரத் தடைகளை பிரயோகிப்பதை, அந்நாட்டின் அதிபர் ஒபாமா அங்கீகரித்துள்ளார்.

அதிகரித்துவரும் இத்தகைய சைபர் தாக்குதல்களை, தேசிய அவசர நிலையாக விவரித்துள்ளார்.

அமெரிக்கா எதிர்நோக்கியிருக்கும் மிக மோசமான பொருளாதார மற்றும் தேசிய பாதுகாப்பு சவால்களுள், இந்த சைபர தாக்குதல்களும் அடங்கும் என அவர் கூறினார்.

வங்கி அமைப்புகள் போன்று மிகவும் நுட்பமான கணனி வலையமைப்புக் கொண்ட அமைப்புகளின் மீது சைபர் தாக்குதல்களை நடாத்துவோரின் உடமைகளை இனிமேல் அமெரிக்கக் கருவூலம் முடக்கிவிடும் என்று தெரிகிறது.

சோனி பிக்சர்ஸ் நிறுவனம் மீது நடாத்தப்பட்ட டிஜிட்டல் தாக்குதல் உட்பட, பல பிரபல நிறுவனங்கள் மீது தொடர்ச்சியான தாக்குதல்கள் நடந்திருக்கின்றன.

இவை ஆயிரக்கணக்கான கணனிகளை முடக்கியிருக்கின்றன.

# லண்டனில் மின் விபத்து; 2,000 பேர் வெளியேற்றம்




பிரித்தானிய தலைநகர் லண்டனின் மத்திய பகுதியில் மின்கசிவினால் ஏற்பட்ட விபத்து காரணமாக 2 ஆயிரம் பேர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இந்தத்தீ விபத்து காரணமாக ஏற்பட்ட நச்சுப்புகையினால் பாதுகாப்புக்கருதி 2 ஆயிரம் பேர் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டனர்.

ஹோல்போர்ன் பகுதியில் உள்ள கிங்ஸ்வே நடைபாதைக்கு கீழேயுள்ள குழியொன்றிலிருந்து வெளியேறிய தீ காரணமாக, அப்பகுதியில் இருந்த அனைவருக்கும் மூச்சுத்திணறல் ஏற்பட்டுள்ளது.

இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்ட அதேவேளை, அப்பகுதியில் பணியிலிருந்த உயர்நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் அலுவலக ஊழியர்கள் என பல பேர் உடனடியாக வெளியேற்றப்பட்டனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த தீயணைப்புப் படையினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

மின்கசிவு காரணமாக இந்தத் தீ விபத்து இடம்பெற்றுள்ளதாக குறிப்பிட்ட பொலிஸார் இதுகுறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர்.

உலகச் செய்திகள்

# அகதி முகாமை முற்றுகையிட்ட ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள்

## சிரியாவில் பதட்டம்

சிரியாவிலுள்ள அகதிகள் முகாமுக்குள் அத்துமீறி நுழைந்த ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் குறித்த முகாமை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர்.

சிரியாவின் தலைநகர் டமஸ்கஸில் உள்ள யார்மிக் என்ற அகதி முகாமை நேற்று முன்தினம் சுற்றிவளைத்த ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் முற்றுகையிட்டுள்ளனர்.

குறித்த முகாமில் பாலஸ்தீன நாட்டைச் சேர்ந்த 18 ஆயிரத்திற்கும் அதிகமான அகதிகள் தங்கவைக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

சிரியாவிலுள்ள மிகப்பெரிய அகதி முகாம் இதுவென்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் அகதிகளின் பாதுகாப்பு தற்போது கேள்விக் குறியாகியிருப்பதாக ஐ.நா. மேலும் கூறியுள்ளது.

# தயாநிதி மாறனின் 742 கோடி சொத்துக்கள் முடக்கம்



எயார்செல் மக்சிஸ் ஊழல் முறைகேடு வழக்கில் கலாநிதி மாறன் மற்றும் தயாநிதி மாறனின் ரூ.742 கோடி சொத்துக்களை அமுலாக்கத்துறையினர் முடக்கியுள்ளனர். மேலும், இந்த வழக்கில் தொடர்புடைய தயாநிதி மாறனுக்கு அமுலாக்கத் துறையினர் சம்மன் அனுப்பியுள்ளனர்.

முன்னாள் காங்கிரஸ் ஆட்சியின் போது மத்திய அமைச்சராக இருந்த தயாநிதி மாறன் தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து தனது சகோதரர் கலாநிதி மாறனின் நிறுவனங்களுக்கு பயன்பெற்றுத் தந்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. எயார்செல் நிறுவனத்தின் பங்குகளை மலேசியாவைச் சேர்ந்த மக்சிஸ் நிறுவனத்திற்கு விற்குமாறு மத்திய அமைச்சராக இருந்தபோது தயாநிதி மாறன் மிரட்டினார் என்ற முறைப்பாட்டின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணையில இறங்கிய அமுலாக்கத்துறையினர் தற்போது இந்த அதிரடி நடவடிக்கையில் ஈடுபட்டு உள்ளனர்.

அந்நிய செலாவணி மோசடி சட்டத்தின் கீழ் ரூ742 கோடி மதிப்பிலான சொத்துக்கள் அதிரடியாக முடக்கப்பட்டதில் பிரபல ஊடக நிறுவனமான சன் குழுமத்தின் பங்குகளும் அடங்கும். இதனால் மாறன் தரப்பினர் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

இந்த அளவு விளம்பரத்திற்கு

1000/= ரூபா மட்டுமே

# மருத்துவ சுகாதார மேம்பாடு கிளிநொச்சியில் ஏற்படுத்த முயற்சி

## சுகாதார அமைச்சரிடம் களநிலைவரம் எடுத்துரைப்பு



கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் நெதர்லாந்து அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட பிராந்திய இரத்த வழங்கல் சேவை நிலையமானது நேற்று மதியம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதன் போது இடம்பெற்ற கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரினால் கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் சுகாதாரத் துறைசார்ந்த பிரச்சினைகள் மற்றும் தேவைகள் குறித்து அமைச்சர் ராஜித சேனாரத்னவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

அதற்கமைவாக மாவட்டத்தில் உள்ள கிராமிய மற்றும் பிரதேச வைத்தியசாலைகளான தருமபுரம் வைத்தியசாலை அக்கராயன் வைத்தியசாலை முழங்காவில் வைத்தியசாலை மற்றும் வேரவில் வைத்தியசாலை உருத்திரபுரம் வைத்தியசாலை போன்ற வைத்திய சாலைகளில் நிலவும் வைத்தியர் பற்றாக்குறை மற்றும் தாதியர், மருத்துவ துறைசார்ந்த உத்தியோகத்தர்களின் பற்றாக்குறைகள் தொடர்பாகவும் அவற்றை நிவர்த்தி செய்வது தொடர்பாக வும் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்தார். இதற்கு பதிலளித்த அமைச்சர் ராஜித சேனாரத்ன குறித்த விடையத்திற்கு தீர்வு காணப்படும் என உறுதியளித்தார்.

அத்தோடு நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரினால் தருமபுரம் பிரதேசவைத்திய சாலையில் ஆண் பெண் நோயாளர் விடுதிகளை அமைத்தல் மற்றும் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையின் இரண்டாம் கட்ட கட்டுமானப்பணிகளை முன்னெடுப்பது தொடர்பாகவும் தெரிவிக்கப்பட்டது. மேலும் வன்னிப் பகுதியில் தாதியர் பயிற்சிக்கு உள்வாங்கும் போது க.பொ.த. சாதாரண தரத்தில் விஞ்ஞான பாடத்தில் சி தர சித்தி பெற்றிருக்க வேண்டியது அவசியமானது என்ற விதிமுறையில் தளர்வுநிலை கையாளப்படவேண்டும் எனவும் யுத்த காலத்தில் இப்பகுதிகளில் கல்விச் செயற்பாடுகள் சீரற்று காணப்பட்டதால் . உரிய பெறுபேறுகளை மாணவர்களால் எடுக்க முடியாமல் போன நிலைமையினைக் கருத்தில் கொண்டு இதில் தளர்வு போக்கு கையாளப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வின் போது வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை தவநாதன், சுகாதார அமைச்சின் செயலாளர்கள் மாகாண சுகாதார திணைக்கள அதிகாரிகள் மற்றும் வைத்திய அதிகாரிகள் தாதியர் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

### முல்லையில்...

தீயே உனது கணவன் காணாமல் போனதாக நீ கூறும் நாடகம் எப்போது முடிவுக்கு வரும்?, எங்கே எமது பிள்ளைகள் ஒழிந்திருக்கும் உன் கணவரிடம் கேட்டுச்சொல்? போன்ற பதாகைகள் தாங்கியவாறே மேற்குறித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

எனினும் குறித்த ஆர்ப்பாட்டம் முல்லைத்தீவு நகரிலிருந்து நீதிமன்றம் வரையில் ஊர்வலமாக சென்ற போதும் அதற்கு பொலிஸார் ஒத்துழைக்கவில்லை.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்ட, அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனை சந்தித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் எழிலனால் பிடிக்கப்பட்டுக் காணாமல் போனவர்கள் எங்கே எனக்கேட்டு மகஜர் ஒன்றினைக் கையளித்துள்ளதுடன், குறித்த மகஜரினை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவின் கவனத்திற்கு கொண்டுவருமாறும் கோரியிருக்கின்றனர்.

### எல்லை...

கைக் கடற்பரப்பினுள்ளே வந்து மீன்பிடிப்பதற்கு இந்திய மீனவர்களை அனுமதிக்க வேண்டும் என தமிழக மீனவர்கள் கோரியிருந்தனர்.

எனினும் தடைசெய்யப்படாத தொழில் உபகரணங்களைக் கொண்டு இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிப்பார்களானால், அதை இலங்கை மீனவர்கள் பொருட்படுத்த மாட்டார்கள் எனவும் ஜஸ்டின் சொய்சா தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் யாழ்ப்பாணம் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய வடமாகாண மாவட்டங்களின் மீனவர் சங்கப் பிரதிநிதிகள் கடற்தொழில் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர்கள் மற்றும் கடற்தொழில் அமைச்சர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்ததாகவும் அவர் கூறினார்.

### தடம்..

தெரிந்தவர்களின் வீட்டுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பும்போது அவர்கள் பயணித்த ஓட்டோ வீதியில் உள்ள கிடங்கு ஒன்றைத் தவிர்ப்பதற்காக திடீரெனத் திருப்பியபோதே அது தடம்புரண்டு மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. இச்சம்பவம் நடைபெற்று நீண்டநேரத்துக்கு பின்பே அவ்வழியாகச் சென்ற ஒருவர் இவர்களைக் கண்டு அயலவர்களின் உதவியுடன் வைத்தியசாலையில் சேர்த்தார்.

இச்சம்பவத்தில் பிரான்ஸிஸ் பிரான்சிஸ்கா றோசலீன் குரூஸ் (வயது 83) என்ற மூதாட்டி அந்த இடத்திலேயே உயிரிழந்தார். ஓட்டோவை ஓட்டிச்சென்ற சாரதியும் அவரது மனைவியும் காயமடைந்தனர். தெய்வாதீனமாக அவர்களது 7 வயதுப்பிள்ளை காயமின்றித் தப்பிக்கொண்டது. பிரான்ஸிஸ் ததேயு செல்வம் சூஞ்ஜ் (வயது 34) அவரது மனைவி ததேயு செல்வம் அந்தோனிக்கம் வின்சன்டா வினோதினி (வயது 33) ஆகியோர் காயமடைந்து மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இவர்களில் வினோதினி மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டார்.

### தேர்த்திருவிழாவில்...

வயதான பெண் ஒருவரின் கழுத்திலிருந்த சங்கிலியை யாரோ இழுப்பது போன்ற உணர்வு தென்பட்ட நிலையில் குறித்த பெண் திரும்பிப் பார்த்தபோது சங்கிலியை பிடித்தவாறு குறித்த பெண் நின்றுள்ளார்.

இதனையடுத்து வயதான பெண் சத்தமிட்டுள்ளார். இதனையடுத்து அங்கிருந்த பொதுமக்கள், குறித்த பெண்ணை மடக்கிப் பிடித்து விசாரித்த போது அவர் திருகோணமலையை சேர்ந்தவர் எனவும் தன்னுடன் சேர்த்து 3 பெண்கள் வந்ததாகவும் தாங்கள் திருட்டு நோக்கத்திற்காகவே வந்திரு ப்பதாகவும் ஒத்துக் கொண்டுள்ளார்.

இந்நிலையில் பிடிக்கப்பட்ட பெண்ணின் உள்ளாடைக்குள்ளிருந்து கைத்தொலைபேசி ஒன்றும் 15ஆயிரம் ரூபா பணமும் மீட்கப்பட்டுள்ளதாகவும், ஆலயத்திலிருந்த பக்தர்களிடம் அறுக்கப்பட்ட 4தங்கச் சங்கிலிகள் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளதுடன், இந்தப் பெண்ணுடன் வந்த மற்றைய இரு பெண்களை தேடும் பணியில் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

### ரணில்...

களை ஆற்றி வருகின்றோம். எம்மால் பணம் செலவழித்துக் கட்டமுடியாவிட்டாலும் Americares நிறுவனம் தமது செலவில் கட்டித்தந்துள்ள இந்த சத்திர சிகிச்சைத் தொகுதி, இரத்த வங்கி ஆகியவற்றைத் திறந்துவைத்தாவது எமது மகிழ்வையும் கரிசனையையும் உங்களுக்கு வெளிப்படுத்தியுள்ளோம்.

அவர் முன்னைய அரசாங்கத்தின் நோயுற்ற பகுதிகளை வெட்டி சத்திர சிகிச்சை செய்து புதியதொரு அரசாங்கத்தை எமக்குத் தரப் படாதபாடு பட்டுள்ளார். அவருக்கு எமது நன்றிகள் உரித்தாகுக. இருப்பினும் அவரின் புதிய அரசாங்கத்தின் பிரதமருடன் எனக்கேன் வீண் விவாதம் என்று அவரும் நினைக்கக்கூடும். என தருமை மக்களான நீங்களும் நினைக்கக்கூடும். வரமுன் காப்பவனே புத்திசாலி. வருவதை அறிந்து நாங்கள் உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் அது எம்மையே வருத்தும். என்னைப் பொறுத்தவரையில் இன்றே திரும்பவும் வீடு சென்று எனது ஓய்வினை மீண்டும் ஏற்றுவாழும் மனோநிலையில்தான் நான் இருக்கின்றேன். எதுவும் தேவையில்லை. ஆனால் பொறுப்புக்கள் தரப்பாட்டால் அவற்றைத் தட்டிக்களிக்க நான் தயாரில்லை. அண்மையில் பிரதமரின் விஜயம் பற்றி ஓர் அழைப்பிதழ் கிடைத்தது. அதை அனுப்பியவர் என்னைத் தெரிந்த திருமதி றோசி சேனாநாயக. திருமதி விஜயகலா மகேஸ்வரனின் அழைப்பின் பேரில் பிரதமர் வருகின்றார் என்றும் அந்தக் குறிப்பிட்ட நிகழ்வில் என்னையும் பங்குபற்றுமாறு அழைக்கப்பட்டது.

என்னைப் பிரதமரின் உத்தியோகபூர்வ அலுவலகம் அழைக்கவில்லை. பிரதமர் தமது விஜயம் பற்றி எம்முடன் கலந்தாலோசிக்கவுமில்லை. அவர் சார்பான அழைப்பை விடுத்தது அவரின் கட்சியின் பிரமுகர் ஒருவர். கட்சியின் இன்னொருவரின் அழைப்பின் பேரிலேயே அவர் வருகை தந்தார். ஆக மொத்தம் இதன் அர்த்தம் என்ன? தமது கட்சியை இங்கு நிலைநாட்ட, அலுவலகங்களைத் திறந்து வைக்க, நேரடியாக மத்தியில் இருந்து மக்களுக்கு நன்மைகளைப் பெற்றுக் கொடுத்து இன்னாரை அண்டினீர்கள் ஆனால் உங்களுக்கு நாங்கள் சகல உதவிகளையும் பெற்றுக் கொடுப்போம் என்று கட்சி முறையாகக் கூறவே பிரதமர் இங்கு வருகை தந்தார். இது முற்றிலும் ஒரு அரசியல் ரீதியான பயணம்.

எனவே நான் மக்களின் பிரதிநிதி என்ற முறையில் பிரதமரின் கூட்டங்களில் கலந்துகொள்ளவில்லையே என்ற குற்றச்சாட்டு அர்த்தமற்றது. அவர் தமது கட்சியை வளர்க்க வந்தார். வளர்த்துவிட்டுப் போகட்டும்.. அதற்கும் எமக்கும் எந்த சம்பந்தமுமில்லை. 225 மக்கள் பிரதிநிதிகள் கொண்ட நாடாளுமன்றத்தில் இன்று 45 பிரதிநிதிகளை மட்டுமே கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிப் பலம் பெற்று ஆண்டு வருகின்றது. அடுத்த பொதுத் தேர்தலில் தமக்கு என்ன கிடைக்குமோ என்ற பயம் உள்ளூரப் பிரதமரை வருத்திக் கொண்டுதான் இருக்கும். அதனால்தான் வடமாகாணத்தில் எப்படியாவது காலடி ஊன்ற அவர் பல நடவடிக்கைகளில் இறங்கியுள்ளார்.

ஒரு பிரதமரை அண்டினால் பல நன்மைகள் பெறலாம் என்பது எனக்குத் தெரிந்த விடயம்தான். ஆனால் அடுத்த பொதுத் தேர்தலில் என்ன நடக்கப் போகின்றது என்பதை அறியாது வடமாகாணத்தில் எம் மக்களின் செல்வாக்கைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த அவர் விழையும் போது அதனை மக்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதும் எனது கடப்பாடுதான். இதிலே தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு இடமில்லை. வடமாகாணத்தில் தமது கட்சியை நிலை நாட்ட பிரதமர் பகீரதப் பிரயத்தனங்களில் ஈடுபட்டுள்ளார் என்பது கண்கூடு. மக்களால் பெருவாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாணத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைப் புறக்கணித்துத் தனது கட்சியின் சிலரை முன்வைத்தே தமது அரசியலைக் கொண்டு நடத்துவதற்கு எத்தனிக்கின்றார் என்பதும் கண்கூடு.

அடுத்த கட்டமாக இதைத்தரமாட்டேன். அதைத் தருவேன் என்று எங்களுக்கு அரசியல் ரீதியாகப் பிரச்சினைகளை உண்டாக்கப் போவதும் நர்ன் அறிந்ததே. அதாவது எங்களுடன் சேர்ந்தால் உங்களுக்குச் சகல நன்மைகளும் கிடைக்கும். சேராவிட்டால் நீங்கள் எங்களைப் புறக்கணித்தவர்கள் ஆவீர்கள். அதன் தாக்கத்தை நீங்கள் ஏற்கச் சித்தமாக இருக்க வேண்டும் என்ற கருத்தை எமக்கு உணர்த்த முன் வருவார் என்பதும் நான் தெரிந்த ஒன்றே. இதுதான் கடந்த காலங்களில் நடந்த திருவிளையாடல்கள் ஆகவே உண்மைகளை எடுத்துக் கூறுவது, எங்கள் மக்களுக்கு விசுவாசமாக நாங்கள் நடந்து கொள்வது ஆகியன எந்தக் காலத்திலும் பிழையெனக் கொள்ள முடியாது. நான் என் சொந்த நன்மை கருதியோ, சொந்த விருப்பு வெறுப்புக்களுக்கு இடம் கொடுத்தோ முரண் நடவடிக்கைளில் ஈடுபடவில்லை. எமது முரண்பாடானது வடமாகாணத்தில் இருந்து இராணுவ முகாம் ஒன்றைத்தானும் அகற்ற முடியாது என்று கௌரவ அமைச்சர் ஒருவர் கூறியதில் இருந்தே தொடங்கியது. ஒருசில கேந்திரஸ்தானங்கள் தவிர மற்றைய இடங்களில் இருக்கும் இராணுவத்தினரைப் படிப்படியாக ஒரு குறிப்பிட் கால எல்லைக்குள் வெளியே அனுப்புவேன் என்று பிரதமர் தரமான ஓர் உத்தரவாதத்தைத் தரட்டும். உடனே அவருடன் கைகுலுக்குவேன். இராணுவ முகாம் ஒன்றைத்தானும் வெளியேற்றாமல், வலி வடக்கில் உறுதியளித்த ஆயிரம் ஏக்கர்களில் 400 ஏக்கரை மட்டும் விடுவித்து விட்டு அரசியல் ரீதியாகத் தமக்கு இலாபம் தேடும் பிரதமருடன் நான் எவ்வாறு கைகுலுக்கி மகிழ்ச்சியைத் தெரிவிப்பது? எமது மக்கள் எங்களை மாகாண ஆட்சிபீடம் ஏற்றியது சில காரணங்களை முன்வைத்து. அவை எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெளிவாகத் தரப்பட்டுள்ளன.

இராணுவத்தினரை வெளியேற்ற வேண்டும் என்பது அவர்களின் எதிர்பார்ப்பு. போர் முடிந்த பின்னர் அவர்களுக்கு வடமாகாணத்தில் எந்த வேலையும் இல்லை. வேண்டுமெனில் பொலிஸாரின் தொகையைக் கூட்டட்டும். ஆனால் இராணுவத்தினர் மக்களின் காணிகளை மீளளித்து மக்கள் மத்தியில் இருந்து வெளியேற வேண்டும். இவ்வாறான முக்கிய விடயங்களை நாங்கள் அறுதியிறுதியாகப் பேசித் தீர்த்துக் கொள்ளாவிடில் பாதிக்கப்படப்போவது நாங்களே. பிரதமரின் செயலால் 13வது திருத்தச் சட்டத்தின் கீழ் எமது வடமாகாண சபைக்கிருக்கும் மிக நலிந்த மெலிந்த அதிகாரங்கள் பற்றிய உண்மைகள் வெளிவரத்தொடங்கியுள்ளன. மத்தியால் எந்த அளவுக்கு மாகாணத்தைக் கட்டுப்படுத்த முடியும் என்பதை எமக்குணர்த்தி வருகின்றார் பிரதமர்.

இதை அறியாமல் மத்தியின் மாய்மாலங்களுக்கு மண்டியிட முனைந்துள்ளோம் எம்முட்சிலர். இதிலே எமது மக்களின் உரித்துக்கள் அடங்கியுள்ளன. இப்பேர்ப்பட்ட செயல்களை வெறும் மனித உறவுகளின் வெளிப்பாடு என்று கூறமுடியாது. ஆழமாக அமைந்திருக்கும் பக்கச்சார்பான எண்ணங்களின் வெளிப்பாடுகள்என்றே கொள்ள வேண்டும்.

எமது காணிகள் விடுபடவில்லை. போரினால் பாதிக்கப்பட்ட எம்மக்களின் தேவைகள் பூர்த்திசெய்யப்படவில்லை. பாரம்பரிய தொழில்களைச் செய்ய அனுமதி கிட்டவில்லை. போர்க்காலத்தில் வெளியில் இருந்து வந்தோர் வியாபாரங்களை விட்டுச் செல்லவில்லை. இராணுவத்தினர் தெற்கிலிருந்து மக்களைக் கொண்டு வந்து குடியேற்றும் நிலை நிறுத்தப்படவில்லை. காணிகளை இராணுவமும் அவர்களை அண்டியோரும் கபளீகரம் செய்வது நிறுத்தப்படவில்லை. என்றும் முதலவர் குற்றம் சாட்டினார்.

# இன, மத நல்லிணக்க ஆணைக்குழு அமைக்கப்பட வேண்டும்

## ஈழ மக்கள் ஜனநாயக கட்சி முன்மொழிவு

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள 11 ஆணைக குழுக்களுக்கு மேலதிகமாக, இன மற்றும மத நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும். இன, மத முரண்பாடுகளை வளர்ப்போர் மீது விசாரணை செய்து, சட்ட நடவடிக்கை எடுக்கக கூடிய அதிகாரம் உள்ளதாக இருத்தல் வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி முன்மொழிந்துள்ளது.

உத்தேசிக்கப்பட்டுள்ள 19ஆவது அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் தொடர்பில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி முன்வைத்துள்ள முன்மொழிவுகளில் மேலும், ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் அரசியல் அமைப்பு பேரவையின் 5 உறுப்பினர்களில் தமிழர் ஒருவரும், முஸ்லிம் ஒருவரும அடங்குதல் வேண்டும்.

அரசியல் அமைப்பு பேரவையினால் சிபாரிசு செய்யப்படும் 11 ஆணைக் குழுக்களுக்குமான உறுப்பினர்கள் தெரிவில் இன விகிதாசாரம் பேணப்படடல் வேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து மேன்முறையீடு செய்யப்பட்ட வழக்குகள் உச்ச மற்றும் மேல் நீதிமன்றங்களில் எடுத்துக் கொள்ளப்படும் போது, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நீதிமன்ற பதிவேடுகள் தமிழில் இருப்பதனால், வழக்குகளை நடாத்துவதில் உள்ள சிக்கல்களைக் கருத்தில் கொண்டு உச்ச நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களுக்கு ஜனபதிபதியினால் நீதிபதிகள் நியமிக்கப்படும்போது, அந் நீதிமன்றங்களில் எவ்வேளையிலும் தமிழ் மற்றும் முஸ்லிம் ஒருவர் நீதிபதியாக இருக்கக்கூடிய வகையில் அந்நியமனங்கள் அமைய வேண்டும்.

அதே நேரம், தேர்தல் முறைமையில் மாற்றம் கொண்டுவரும் போது, யுத்த சூழலால் பாரிய இடப்பெயர்வுகள் நிகழ்ந்துள்ளதையும், இயற்கை நியதிகளுக்கு மாறாக பாரியளவில் உயிரிழப்புகள் ஏற்பட்டிருப்பதையும் கருத்திற்கொண்டு, அதனை ஈடு செய்யும் வகையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் அமைதல் வேண்டும். அத்துடன், இலங்கை வாக்குரிமை பெற்றிருந்த நிலையில் புலம் பெயர்ந்து சென்று வெளிநாடுகளில் வாழ்ந்துவரும் இலங்கையர் களுக்கும் தேர்தல்களில் வாக்களிக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் ஆகிய முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## பேருந்து மீது தாக்குதல்

(நெல்லியடி)

இலங்கை போக்குவரத்து சபை பேருந்து மீது நேற்று இரவு 9.35 மணியளவில் நெல்லியடி மாலுசந்திப் பகுதியில் நடாத்தப்பட்ட கல்வீச்சு தாக்குதலில் பேருந்தின் பின்பக்க கண்ணாடிகள் முற்றாக சேதமடைந்துள்ளன. நேற்று இரவு 8.00 மணிக்கு யாழ். பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்ட 750 இலக்க பேருந்து மாலுசந்தி பிள்ளையார் கோவிலடியை அண்மித்தபோது இந்தத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக உடனடியாக நெல்லியடி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (18)

## இயங்கு நிலையில் காட்சி



குருநகர் புனித யாகப்பர் ஆலய தவக்கால பெரிய வெள்ளி ஆராதனை இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

பெரிய வெள்ளி ஆராதனையுடன் திருப்பலி முடிவுற்றதும் 1942ஆம் ஆண்டு முதல் பாரம்பரியமாக நடந்துவரும் உடக்குப் பாசின் ஒரு பகுதியான இயேசு சிலுவையில் மரணிக்கும் நிகழ்வு இயங்கு நிலையில் காண்பிக்கப்படவுள்ளது. அன்றைய தினம் பல இடங்களில் இருந்து கிறிஸ்தவர்கள் வருகை தந்து ஆராதனைகளில் பங்குபற்றுவது வழங்கம். (27)

## முடிவுக்கு வந்தது மாணவர் போராட்டம்

யாழ். பல்கலைக்கழக மருதனார் மட நுண்கலைபீடத்தின் சித்திரமும் வடிவமைத்தல் பிரிவுக்கு புதிய இணைப்பாளராக இசைத்துறை பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.சூரியகுமார் கடந்த புதன்கிழமை கலைப்பீட பீடதிபதியால் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து மாணவர்களின் போராட்டம் முற்றுப்பெற்றது.

அத்துடன் மாணவர்களுக்கான வருட ஆய்வுக் கட்டுரைகள் தொடர்பில் மேற்பார்வை செய்வதற்குரிய பொருத்தமான ஒருவரை நியமிக்கும் பொறுப்பு இணைப் பாளரிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட கேட்போர் அரங்கில் மாணவர்கள், மற்றும் விரிவுரையாளர்களுக்கு இடையிலான அவசர கலந்துரையாடல், கலைப்பீட பீடாதிபதி வீ.பி.சிவநாதன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலின் போது, மாணவர்களுடைய பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொண்ட பீடாதிபதி, கல்விசார் அனைத்து பிரச்சினைகளுக்கும் வெகு விரைவில் தீர்வு பெற்றுத் தருவதாக உறுதியளித்தார்.

மருதனார் மட நுண்கலை பீட மாணவர்கள் பரீட்சைகள் ஒழுங்காக நடைபெறுவதில்லை. தமது துறைக்கான இணைப்பாளரை நியமனம் செய்யவில்லை போன்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்யக் கோரி வகுப்பு பகிஷ்கரிப்பு மற்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

## இலவச சிங்கள மொழி கற்கை நெறி

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலய முறைசாராப் பிரிவினால் நடாத்தப்படும் இலவச சிங்கள மொழி கற்கை நெறி நாளை சனிக்கிழமை ஆரம்பமாகின்றது.

புத்தூர் சோமஸ்கந்த கல்லூரியில் பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகும் இக்கற்கை நெறியில் இணைந்து கொண்டு பயன்பெற விரும்புவோர் கல்லூரியின் அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியும் என யாழ். கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

இலவசமாக ஆறு மாத கால பயிற்சி நெறி விடுமுறை நாட்களில் பிற்பகல் வேளைகளில் நடைபெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## சட்டவிரோத சிகரட் சிக்கியது

(கொழும்பு)

கல்முனைப் பகுதியில் வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 16 இலட்சத்து 56 ஆயிரம் ரூபா பெறுமதி யான சட்டவிரோத சிகரட் வகைகள் புலனாய்வுப் பிரிவின் உதவியுடன் கல்முனை பொலிஸாரால் நேற்று வியாழக்கிழமை கண்டுபிடிக்கப்பட்டது.

கல்முனைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.டபிள் யு.ஏ.கப்பாரின் வழிகாட்டலில் போதைப் பொருள் பொறுப்பதிகாரி கே.கே.வீ.சஞ்சீவ தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட தேடுதலில் குறித்த சிகரட் வகைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அத்துடன் வீட்டு உரிமையாளரும் கைது செய்யப்பட்டார். இவர் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார்.

## மண்ணெண்ணை அருந்திய சிறுமி மருத்துவமனையில்

(யாழ்ப்பாணம்)

ஒன்றரை வயதுச் சிறுமி ஒருவர் தவறுதலாக மண்ணெண்ணையை அருந்திய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுளளார்.

கோண்டாவில் வடக்கு கோண்டாவிலைச் சேர்ந்த ஒன்றரை வயதுச் சிறுமியே இவ்வாறு நேற்று மண்ணெண்ணையை அருந்தியுள்ளார். குறித்த சிறுமிக்காக தாயார் பால் கரைத்துக் கொண்டிருந்த வேளையில் சிறுமி நிலத்தில் வைக்கப்பட்டிருந்த மண்ணெண்ணையை அருந்தியுள்ளார். இதனையடுத்து உடனடியாக சிறுமி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ப)


## ஆத்ம சாந்திப்பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்



# அமரர் குணரட்ணம் பற்குணராஜா

*(M.A-Regional Planning)*

*நற்குணம் கொண்டு நாளும் குடும்பத்தைக் காத்தீர் ஐயா*
*பற்குணராஜா என்னும் நாமமே கொண்டிங்கு*
*முற்றுமே கடமை காத்து முழுநிலா போல வாழ்ந்தீர்*
*சற்றுமே நினைக்கவில்லை சடுதியாய் பிரிவீர் என்று*
*மீண்டும் ஓர் பிறப்பு உண்டென்பது உண்மையானால்*
*வேண்டுகிறோம் இறைவன்தாளை எங்களோடு உனை இணைக்க...*

நல்லூரைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட எமது குடும்பத் தலைவர் அமரர் குணரட்ணம் பற்குணராஜா அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்தபோது யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அவருக்கு உதவி புரிந்த வைத்தியசாலைப் பணிப்பாளர், வைத்திய அதிகாரிகள், தாதியர் மற்றும் ஊழியர்களுக்கும் அத்துடன் அவரது மறைவுச் செய்தி கேட்டு நேரடியாகவும் தொலைபேசி மூலமாகவும் துயர் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு அனைத்து வழிகளிலும் எமக்கு உதவிகள் புரிந்தவர்களுக்கும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன், நாளை 4ஆம் திகதி சனிக்கிழமை (04-04-2015) முற்பகல் 11.30 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் வீதி, ரி.சி.ரி. சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெறவுள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.*

365, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

(இ) **திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா (மனைவி)**
**முன்னாள் யாழ். மாநகர முதல்வர்**


இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 ஏப்ரல் 03ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.